# கன்மோ

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்



28 JUN 1944

JL
ணா211, N22ஃ3
M44·21-6
183092

...ini," SINGAPERUMALKOIL.

...ரிக்கைப்
இவ் வதழில் இதய ஒலி
...க்கங்கள் 4 படங்க
...ச்சிட்டிருக்கிறோம்

Vol. 21. No. 6
June 1944
வைகாசி இதழ்
88 பக்கங்கள்

6 அணா



# ஜகன்மோகினி

"JAGANMOHINI," ILLUSTRATED TAMIL MONTHLY

தாரண ஞூ வைகாசி மீ. மலர் 21. இதழ் 6. ஜூன் 1944.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்


ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

## இந்த இதழில்


| | | | |
|---|---|---|---|
| | இன்னும் ஒரு நூற்றுண்டிரும் | | 1 |
| | கணவனேடு பேறு பெற்றவர் | பி. ஸ்ரீ. | 2 |
| 3. | காதல் கவிகள் | ஸ்ரீ. சுத்தானந்த பாரதி | 4 |
| 4. | காதல் (கவிதை) | ,, | 5 |
| 5. | விவாகச் சீர்திருத்தங்கள் | எஸ். அம்புஜம்மாள் | 6 |
| 6. | மாணவரின் மகத்தான முயற்சி | ஆசிரியை | 9 |
| 7. | இந்த மாதம் (படம்) | ,, | 10 |
| 8. | உண்மைச் சித்திரம் 9 | ,, | 11 |
| 9. | உதய சூரியன். அத்தியாயம் 6 | வை. மு. ஸ்ரீ. (21-24) | 13 |
| 10. | திருப்தி : பரிசுபெற்ற 4 கட்டுரைகள் | ராஜம்மாள் ராமானுஜாசாரி | 17 |
| | | கி. ஜெயலக்ஷ்மி | 19 |
| | | ரங்கநாயகி ஸ்ரீனிவாசாரி | 20 |
| | | சீதாலக்ஷ்மி நாராயணன் | 23 |
| 11. | விசித்திரவிளக்கு (கவிதை) | பி. ஆர். ராஜசூடாமணி | 25 |
| 12. | உண்ணியின் தியாகம் | தங்கம்மாள்பாரதி | 25 |
| 13. | சொக்கப் பரிசு | "ஸோமாஸ்" | 27 |
| 14. | ஸ்ரீபாடலாத்ரி நரஸிம்ஹர் அஷ்டச்லோகி | பாஷ்யகார்சுவாமி | 30 |
| 15. | ஸ்ரீ தியாகராஜர் புகழ் (கவிதை) | வி, ஜி. ஸ்ரீனிவாசன் | 31 |
| 16. | கடவுளைத் தண்டித்த கடவுள் | தேவகுஞ்சரியம்மாள் | 32 |
| 17. | இதய தாபம் | கே. பாகீரதி அம்மாள் | 36 |
| 18. | விசேஷ டெலிபோன்செய்தி (படம்) | விருச்சிகம் | 40 |
| 19. | என் கட்டுரை | குமாரி ஸ்ரீமதி | 41 |
| 20. | புதிய முயற்சி (படம்) | விருச்சிகம் | 44 |
| 21. | விதியின் வெற்றி | செல்லம்மாள் வேலுப்பிள்ளை | 45 |
| 22. | மன்னிப்பு | நீ. ல. பட்டம்மாள் | 49 |
| 23. | அவள் தான்! (படம்) | விருச்சிகம் | 52 |
| 24. | குண்டலகேசி | "குகப்ரியை" | 53 |
| | இதய ஒலி | வை. மு. கோ. | 81—112 |


மேல் அட்டைப் படம்

வைகாசியில் வஸந்த மலர்கள் பறிக்கிறார்கள் வனிதாமணிகள்



28 JUN 1944
MADRAS
183092

பக்தர்கள்வாழ பாருலகம்வாழ
சத்தியமும் சமரஸமும்வாழ—எத்திசையும்
மன்னுபுகழ்வாழ மகாத்மாகாந்தியடிகளே
இன்னும் ஒரு நூற்ருண்டிரும்

நாம் உஜ்ஜீவிக்கும் பொருட்டே இராமனுஜ திவாகரனை அளித்த இப்புண்யபூமி, அவரது அரிய சேவையுடன் நின்று விடாமல் இன்று நமக்கென்றே ஒப்பிலாத் தியாக மூர்த்தியாகிய மகாத்மா காந்தி அடிகளைத் தந்து நம்மை உயிர்ப்பித்திருக்கிறது. ஸ்ரீபாஷ்யம் செய்து ஸ்ரீமந் நாராயண நாம மந்திரத்தை உபதேசித்து, பிறருக்காகவே 125 வயது வாழ்ந்து ஸ்ரீவைஷ்ணவ சமூகத்திற்கு ஒப்பற்ற சேவைபுரிந்து, அன்றும், இன்றும், என்றும் தெய்வமாக விளங்குகிருர், ராமானுஜர். சத்தியமே தெய்வம்; அஹிம்சையே தர்மம்; புனிதத்தொண்டே பிறவியின் சார்த்தகம் என்று உபதேசிக்கும் காந்தி அடிகள் அவ்விராமானுஜனை எவ்வளவு ஒத்திருக்கிருர்! அவரை விட இன்னும் ஒரு படிக்கட்டு முன்னேறி எல்லா சமூகங்களுக்கும் ஒரே விதத் தொண்டு புரிவதுடன், எல்லா மதத்தினரின் அன்பையும் பெற்று சமூக சேவை, சத்திய சேவை தவிர, தேசபக்தியையே உருக்கொண்டு அவதாரமாகியிருக்கிருர், தற்கால ராமானுஜன். கீதையின் ஜோதியையே வாழ்க்கையின் விளக்காகக் கொண்டுள்ள இம்மகான் அவ்விராமானுஜனைப் போல் 125 ஆண்டுகள் உஜ்ஜீவித்திருந்து அரிய தொண்டு புரியும்படி கீதாசாரியன் அருள்புரிவாராக.

ஜ—1 1—6—44

ஸ்ரீமான் பி. ஸ்ரீ.

# கணவனோடு பேறு பெற்றவர்

அவருடைய செல்வ வாழ்க்கையிலே பங்குகொண்டிருந்த தர்ம பத்தினி அவருடைய தர்ம வாழ்க்கைக்கும் துணையாகவேயிருந்தார். அவரோ அந்தப் பெருஞ் செல்வத்தின் தர்மகர்த்தாவாகவே தம்மை மதித்து ஏழைகளுக்கும் சாதுக்களுக்கும் உதவிய வண்ணமாயிருந்தார்.

நாளடைவில் அவருடைய தர்மவாழ்க்கை தியாகவாழ்க்கையாக முதிர்ந்துவிட்டது. அவர் தம் செல்வங்களின் பெரும் பகுதியையும் ஏழைகளுக்கும் அடியார்களுக்கும் வினியோகம்செய்தார்.

இப்படியாகச் செல்வம் முழுமையும் துறந்து கூரம் என்ற தமது ஊரைவிட்டு ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டார். தேவியும் தியாக ஏணியில் படிப்படியாக ஏறி அவருடன் சென்றவரல்லவா? முடிவில், தாமும் பரதேசியாகி அவருடன் பயணமானார்.

ஸ்ரீரங்கத்திற்குப் போகும் வழியில் ஒரு காட்டு மார்க்கமாகப் போனார்கள். இருட்டிப் போயிற்று. "பயமாய் இருக்கிறது!" என்று சொன்னாள் மனைவி. "என்ன? பயமா? தியாகிகளுக்குப் பயமும் உண்டோ? 'மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயம்?'" என்றார் கணவர்.

அந்தப் பழமொழி பொய்த்துப் போகவில்லை; எதிர்பாராதவகையில் உண்மையாகிவிட்டது. மனைவியின் மடியிலே கனம் இருந்தது. ஆம்: கனமான ஒரு தங்கக் கிண்ணம் இருந்தது. "எங்கே? பார்க்கலாம்: கொடு அதை" என்று வாங்கினார் கூரேசன்.



அடுத்த கணமே அந்தப் பாத்திரம் விசையாகப் பறந்துபோய் எங்கேயோ ஒரு புதரில் பொத்தென்று விழுந்து விட்டது. "இனிமேல் வழியிலே பயம் இல்லை; மெள்ள மெள்ளப் போய் விடுவோம், இந்தக் காட்டைக் கடந்து."

என்று சொல்லிக்கொண்டே கணவர் முன்செல்லப் பின்சென்றாள்.

எல்லாப் பொருள்களையும் துறந்து கணவர் புறப்பட்டதும், அவருடன் போவதற்காகத் தானே தம்முடைய விலையுயர்ந்த ஆபரணங்களையும் பட்டாடைகளையும்கூடத் துறக்கத் துணிந்தாள் அந்தஅம்மை! எனினும் அந்தத் தங்கக் கிண்ணத்தைமட்டும் எடுத்து மடியிலே வைத்துக்கொண்டாள். அவருக்குத் தெரியவேண்டாமென்று மறைத்துக்கொள்ளவும் செய்தாள். ஏன் இந்தச் சபலம், தெரியுமா?

அந்தக் கிண்ணத்திலே அவர் உணவு உண்பது வழக்கம். "அவருக்குப் பிரியமான போஜன பாத்திரமாச்சே!" என்றுதான் அதை அப்படி எடுத்து வைத்துக்கொண்டாள். ஆனால் ஆண்டியாகிவிட்ட அவருக்கு அடுத்த போஜனம் எங்கே கிடைக்கப்போகிறதோ, எப்போது கிடைக்குமோ, யார் கண்டார்? இதை அந்த அம்மாள் நினைத்துப் பார்க்கவில்லை.

என்ன அழகான கதை! ஞான சிகரத்திலே கணவரோடு சரி நிகர் சமானமாக ஏறி நின்ற இந்த அம்மைக்கு இத்தகைய புத்தியா? திகைக்க வேண்டாம்; அதிசயிக்க வேண்டாம்: இதுதான் ஸ்திரீ-ஹிருதயம்!

தங்கமான ஹிருதயம் அல்லவா? கணவரோ, "இந்தத் தங்கமான ஹிருதயமே போதும்! அந்தத் தங்கப்பாத்திரம் வேண்டாம்" என்றே துணிந்துவிட்டார். அத்தகைய துறவியும் இத்தகைய மனைவியைத் துறக்கத் துணியவில்லை!

இவர்களைத்தான் கூரேச தம்பதிகள் என்று எவ்வளவோ பெருமையாகச் சொல்கிறார்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள்.

ஸ்ரீவைஷ்ணவ சரித்திரத்திலே கூரேசன் என்ற கூரத்தாழ்வான் வைபவத்திற்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு. இத்தகைய கூரேச வைபவத்தை விசேஷமாக உருவாக்கியது கூரேசனது தேவியின் வைபவந்தான்.

ராமானுஜர்கூட ஏதாவது சந்தேகம் தோன்றினால் தமது பிரிய சிஷ்யரான கூரேசனோடு விவகரித்துத் தீர்த்துக்கொள்வாராம். இத்தகைய ஞான பக்தரான கூரேசனும் சாஸ்திர விஷயங்களில் ஏதாவது சந்தேகம் தோன்றினால், தமது தேவியாரைக் கேட்டுத் தீர்த்துக்கொள்வதுவழக்கமென்றுகுருபரம்பரைக்கதைகள்தெரிவிக்கின்றன

அந்தக்காலத்திலே—அதாவது கி. பி. 12வது நூற்றாண்டிலும் பெண்கள் புருஷர்களுக்குச் சமானமாகவும், மேலாகவும்கூடக் கல்வியறிவு பெற்று விளங்கக்கூடும் என்று தெரிகிறது. கூரேசன் தேவியோ அக்காலத்துக் கல்வியறிவின் சிகரத்தை எட்டிப் பிடித்ததோடு, தம் கணவருடைய தியாக வாழ்வின் சிகரத்திலும் சரிநிகர் சமானமாக நின்று, ஸ்ரீவைஷ்ணவத் தொண்டு புரிந்தாள்.

இவள் பெயர் ஆண்டாள். ஞான பக்தியிலும் தியாக புத்தியிலும் இந்த ஆண்டாளும் ஆழ்வார் திருமகளான அந்த ஆண்டாளை ஞாபகப்படுத்துகிறாளல்லவா?

# காதல் கவிகள்

ஆண், பெண் இரண்டும் வாழ்க்கையின் இரண்டு தத்துவங்கள்; அவை சூரியனும் கதிர்களும்போன்று ஒன்றியவை; அவை ஒன்றையொன்று பூரணமாக்கவே எழுந்தன; ஆண் பெண்—ஆகிய இரண்டு தத்துவந்தான் இந்தப் பிரபஞ்சமாக வளர்ந்து குடித்தனம் செய்கிறது. நமது தெய்வங்களுக்கும் ஆண்பெண் தத்துவம் அமைத்து சுவாமி, அம்மன், சிவம் சக்தி, நாராயணன் லக்ஷ்மி, பிரம்மா சரஸ்வதிஎன்று வணங்குகிறோம். ஆண்பெண் இரண்டும் சமம். ஆழ்ந்துபார்த்தால், இரண்டும் ஒன்றே. நாம் உடலைப்பார்த்து உடையைப்பார்த்து, இது ஆண், அது பெண் என்றறிகிறோம். இந்த உடலையும் பகுத்தால் இரண்டும் பஞ்சபூத விகாரமே. இரண்டும் ஊனும் எலும்பும் நரம்பும், குடல் குருதியும்சேர்ந்த பிண்டங்களே. இரண்டினுள்ளும் ஆடுவது ஒரே பொருள். ஒரே ஜீவாத்மா; ஜீவாத்மா அபேதம். அதற்கு ஆண்—பெண் விகாரமில்லை. பிறகு வேறுபாடு எதில்? உருவமைப்பிலும், உள்ளமைப்பிலும், அந்தக்கரணத்திலுமே வேறுபாடுள்ளது. ஆண் வீரம், அறிவு, அறம் செயல், பெண் ஆணின் வீரத்தைத் தூண்டி அவன் வாழ்விற்கு ஓட்டத்தைத் தரும் சக்தி; அவன் வாழ்விற்கு இன்பமளிக்கும் அன்புத்தெய்வம்; அவன் குலம் விளங்கச்செய்யும் ஆற்றல், அவனை உயிர்போல நேசித்துப் பாசமுடன் பேணும் அபிமானம். இந்த இரண்டும் சேர்ந்துதான் மானிடம். இரண்டும் ஒன்றுகூடித்தான் வாழ்க்கை பூரணமாகிறது. இந்தக் கூட்டுறவைத்தான் சைவர் அர்த்தநாரீசராகவும், வைஷ்ணவர் லக்ஷ்மீ நாராயணனுகவும் விளக்கினர்கள். சிவன் பார்வதிக்குத் தன் உடலிற் பாதி கொடுத்ததன் கருத்தென்ன? ஆணிற் சமபாதி பெண் என்பதே. "சக்தியுடன் சிவன் சேர்ந்தால் எல்லாம் வல்லவனுகிறான். சக்தியைப் பிரிந்த சிவன் அசையக்கூட முடியாது" என்றார் சங்கரர். விஷ்ணுமூர்த்தி தன் மார்பில் லக்ஷ்மியை வைத்ததன் கருத்தென்ன? ஆணின் உள்ளம் பெண்; உள்ளம் அன்பின் நிலயம்; பெண் என்பது அன்பு மயம் என்பதை விளக்கவே விஷ்ணுமூர்த்தி மார்பில் இலக்குமியை வைத்தார். அவள் உள்ளம்; அவன் துடிப்பு... ஆகு மின்னல் (Positive current) ஏகுமின்னல் (Negative current) இரண்டும் சேர்ந்து மின்சார சக்தியாகிப் பல அற்புதங்களைச் செய்கின்றன, அதுபோல் பரிசுத்தமான ஆண் பெண் கூட்டுறவால் சக்திக்கனல் பிறக்கிறது; இச் சக்தியைத் தூயதமிழில் வீறு என்பர். கம்பன் இதை அறிந்து குறிக்கிறான்:—

சேறணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே.

இலக்ஷ்மி தேவியின் வீற்றை அணிந்தவன் திருமால். கண்ணன் கோவர்த்தனகிரியைத் தூக்கியது ராதாசக்தியால் என்பர் சைதன்ய பக்தர். ஆணுக்கு வீறு தருவதுதான் பெண்மையின் சிறந்த பயன். இந்த வீறுதான் யோக பரிபாஷையில் குண்டலி சக்தி எனப்படும், ஆண் பெண் கூட்டுறவால், இக்குண்டலி சக்தி வளர்ப்பதை தாந்திரிகயோகம் என்பர். சைவர், வைஷ்ணவர் இருவருக்கும் தாந்திரிக யோகமுண்டு; பரமாசாரியார்களான ஸ்வாமிகள் அம்மங்கார்களுடன் விளங்கும் தத்துவம் இதுதான், ஆண், பெண்ணில் காதலிப்பது பெண் உருக்கொண்ட ஆத்மாவை; பெண் ஆணில் காதலிப்பது ஆணுருக்கொண்ட ஆத்மாவை என்பது பிருஹதாரணிய வாக்கு.

ஆணுரு + ஆத்மா = பெண்ணுரு + ஆத்மா, நாமரூப பேதங்களை வ[...]த்து நோக்கினால்: ஆண் + பெண் = ஆத்மா. ஆதலால் உள்ளபொருள் ஆத்மா; இரு பாலாரிலும் காதலிப்பது ஆத்மா. ஆதலால் காதலன் + காதலி + காதல் = ஆத்மா, இந்தக் கணக்கை மனத்தில் வைத்துக்கொண்டு சிந்தியுங்கள். அடுத்த இதழில் உண்மையான காதற் கவிதையை விளக்குகிறேன்.

## காதல்

உள்ளமும் உள்ளமும்
    ஒன்றானால்—அன்பு
வெள்ளம் பெருகி
    விரியுமம்மா—அந்த
வெள்ளத்தில் ஊறி
    விளைந்து கனிவதே
கள்ளெனத் தித்திக்கும்
    காதலம்மா.
ஆண்மை யாவ
    தறிவெளியாம்—பெண்மை
அன்பிற் கனியும்
    அழ கமுதாம்.
ஆண்மையும் பெண்மையும்
    அறிவும் அழகும்போல்
அமையின் அற்புதம்
    ஆகுமம்மா.
பூவினிலே மணம்
    போலுமம்மா—அது
பொன்னும் நகையும்
    பொருவு மம்மா.
ஆவியும் யாக்கையும்
    போலுமம்மா—காதல்
ஆன்ம வுறவென
    லாகுமம்மா

சுத்தானந்த பாரதி

## மோகினியின் சந்தா ரூ. 3. தான்.

சென்ற இதழ் அதிகப் பக்கங்களுடன் வெளியானதால் 6 அணாவுக்கு விற்கப்பட்டது. சந்தாதாரர்கள் எவ்வளவு அதிக சந்தா செலுத்தவேண்டுமென்று கேட்டு எழுதுகிறார்கள். சென்ற இதழும், இவ்விதழும் மாத்திரம் தான் 6 அணா. அடுத்த இதழ் முதல் வழக்கப்போல் நாலணாதான். இந்த இரண்டு மாதங்களில் பத்திரிகையின் விலை அதிகரித்ததற்காக சந்தாநேயர்கள் ஒன்றும் அதிகம் செலுத்தவேண்டியதில்லை—என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—மானேஜர்.

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

# விவாகச் சீர்திருத்தங்கள்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற கொள்கைப்படி நாளுக்கு நாள் நம் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம்.

உச்சிக் குடுமியும் கடுக்கனும் கடிகாரச் செயினும் ஜரிகை உருமாலும் உலாவிய நாள் போய்க் கிராப்புத்தலையும் கதர்க்குல்லாவும் நம்மிடையேஉலாவும் காலமாக இருக்கிறது இப்பொழுது.

அதே போலப் பெண்களிடையே பெங்களூர்ப் பட்டுப் புடவையும், புலாக்கு பேஸரியும் போய், மைசூர்ஜார்ஜெட்டும் டோலக்குமாகக் காட்சி தரும் காலம் இது.

இப்படியே நம்முடைய தேசத்துப் பழக்க வழக்கங்களும் சட்டதிட்டங்களும் மாறுபடவேண்டியது அவசியம்தானே? காற்றுப்போல் பறக்கும் மோட்டார், ஏரோபிளேன், வெடி குண்டு விமானம் நிறைந்த இந்தக் காலத்திலும் பழைய ஏடுகளை அப்படியே புரட்டிக்கொண்டிருந்தால், வருங்காலப் பிரஜைகளின் மணவாழ்க்கை, சொத்து, சுதந்திரம், உரிமைகள், கடமைகள், இவைகளின் கதிதான் என்ன?

இந்தக் காலத்தின் கோலத்தை எதிர்பார்த்தே சீர்திருத்தக்காரர்கள் ஏதோ ஓரளவு, விவாக விஷயத்திலும், சில சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள்; பெரும் பாடுபட்டு.

மேலும் வேண்டிய சீர்திருத்தங்களைத் தேடுவதற்குமுன், "ஏற்கெனவே செய்துள்ள சீர்திருத்தங்கள் எப்படிப்பட்டவை! அவற்றின் பலாபலன் என்ன! அவை ஏன் தேவையாக இருந்தன! அவை வருமுன் இருந்த நிலைமைதான் என்ன!" என்ற விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்வது அவசியம் அல்லவா?

## சீர்திருத்தங்கள் வருமுன் நிலைமை

### ஸகோத்திர விவாகம்

சற்றும் ரத்த சம்பந்தமில்லாமலும், முற்றும் அன்னியர்களாகவும் இருந்தாலும், ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அந்தப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் சட்டப்படி விவாகம் நடைபெற முடியாது—என்பது சற்றும் அர்த்தமில்லாத கொள்கையாகவே காணப்படுகிறது, தற்கால ஜனங்களுக்கு. ஏனென்றால், மற்றெல்லா விஷயத்திலும் நல்ல பொருத்தம் இருந்தாலும், கோத்திரம் குறுக்கிட்டுக் கல்யாண மார்க்கெட்டில் நல்ல வரன் கிடைக்காமல் செய்துவிடுகிறது.

இந்தக் காலத்து இளைஞர்கள் பரஸ்பர மனப் பொருத்தத்தையே பெரிதாகப் பாராட்டுகிறார்கள். "எனக்காகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறேனா? எங்க அப்பா அம்மாவுக்காகவா?" என்றகேள்வியைப் போடுகிற வதூவரர் எத்தனைபேர்?

### ஸபிண்ட விவாகம்

ஹிந்து லாப்படி சபிண்ட விவாகம் செல்லாது. ஆனாலும், தென்னாட்டுக் குலாசாரப்படி, தாய்வழி மாமனை மணப்பது, அத்தைமகன், மகளை மணப்பது, இது போன்ற விவாகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன, நெருங்கிய ரத்த சம்பந்தம் உள்ள பந்துக்களுக்குள்ளேயும்கூட.

இதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள், வைத்திய நிபுணர்கள் பலமாகக் கண்டிக்கிறார்கள். புதிய ரத்தக் கலப்பு இல்லாமையினு

லேயே, பிரஜைகள் வர வர க்ஷீணம் அடைந்து அந்த இனமே நாளடை வில், நசித்து வீரிய மற்றுப் போவதற்கு ஹேதுவாகிறது என்கிறார்கள்.

### கலப்பு மணம்

பழைய காலத்திலே பிரதிலோமா, அநுலோமா விவாகங்கள் சகஜ மாக நடைபெற்று வந்தாலும், வரவரச் சமூகம் அத்தகைய விவாகங்களை அனுமதிக்காமல் போய்விட்டபடியால், இந்துலாப்படிக்கும் நாளடைவில் அவை செல்லாமல் போய்விட்டன. ஒரே ஜாதியின் உட்பிரிவுகளில் பரஸ் பர விவாகம் நடப்பதைச் சட்டம் தடுக்கவில்லை. ஆனாலும், சமூக வழக்கத் தில், அதுவும் ஏற்படாமலே போய்விட்டது.

### விவாக வயது நிர்ணயம்

விவாகமாகும் வதூவரர்களுக்குள் வயது நிர்ணயம் சட்டப்படி கிடையாது, ஆகையால், அஞ்சு வயசுப் பெண் குழந்தை ஒன்றுக்கும் ஏழு வயதுப் பாலகன் ஒருவனுக்கும், பூணூல் கல்யாணப் பந்தலிலேயே மணம் முடித்து வைப்பது வெகுகாலமாக நடைபெற்று வந்தன, பெரிய வர்கள் விரும்பிய போதெல்லாம்.

அதுபோல எண்பது வயதுக் கிழவனுக்கும் அறுபது வயதுக் கிழவிக் கும் கல்யாணம் நடப்பதைக் சட்டம் தடுக்கவில்லை. ஆனால் இந்துப் பெண் கள்தான் கன்னிகையாக இருக்கக் கூடாதே? மேலும் உயர் குலத்தா ரிடையே ருதுமதி விவாகத்தைத்தான் சாஸ்திரம் அனுமதிக்கவில்லையே? வயது வந்த கன்னிகைக்கு எங்கேபோவது? விதவா விவாகமும் கூடாது. ஆகையால் எண்பது வயதுக் கிழவனானாலும் பன்னிரண்டு வயதுக் கன் னிகையைத்தான் தேடி விவாகம் செய்துகொள்வது சகஜமாகிவிட்டது, நம் நாட்டிலே.

சீமையிலே சென்ற வருஷம் லாயிட் ஜார்ஜுக்கு எண்பது வயதில் திடீரென்று விவாகம் செய்துகொள்ள விருப்பம் உண்டாயிற்றாம்; உடனே தம்முடைய காரியதரிசியாக இருந்த முப்பது வயதுக் கன்னிகையை மணந்துகொண்டாராம். அந்த மாதிரி இந்தியாவிலே செய்ய முடியுமா? முப்பது வயதுக் கன்னிகை எங்கே இருக்கிறாள்?

பால்ய விவாகத்தினாலும் மணமகன், மணமகள் தாரதம்யம் அதிகம் உள்ள விவாகங்களினாலும், எவ்வளவு கஷ்டங்கள், கெடுதல்கள் உண்டா கின்றன, நம் நாட்டுப் பெண்மணிகளுக்கும் குழந்தைகளுக்கும். புஷ்பம், மஞ்சள், குங்குமம் சூட்டி ஆடிப்பாடித் திரிந்திருக்கும் நாளிலே, மொட் டைத் தலையும், வெள்ளைப் புடவையும், ஒருவேளை ஆகாரமுமாய்த் தம் வாழ் நாட்களை வீண் நாட்களாகக் கழிக்கிற பாவிகைகளுக்கு, கன்னி- விதவைகளுக்குக் கணக்குண்டா? 1921ஆம் ஸென்ஸஸ் பிரகாரம் நம் நாட்டில் பால்ய விதவைகளின் கணக்கைப் பாருங்கள்:—

| | | | |
|---|---|---|---|
| 1 வயதுக்குட்பட்ட விதவைகள் | | — | 612 |
| 1 வயது முதல் | 5 வயதுக்குள் | — | 20,024 |
| 6 வயது முதல் | 10 | — | 97,857 |
| 11 | 15 | — | 3,32,024 |

தவிர பால்ய விவாகத்தின் பயனாக நாட்டிலே கால் சூம்பியும் கை சூம்பிய சீவனில்லாத சோனிக்குழந்தைகளுக்குத்தான் ஒரு கணக்குண்டா?

### பல தார விவாகம்

ஏற்கெனவே ஒரு மனைவியோ, பல மனைவிமார்களோ உயிருடன் இருக்கும்போது, ஒரு ஹிந்து இஷ்டப்பட்டால் எத்தனை மனைவிகளை வேணுமானாலும்—நூற்றுக் கணக்கிலும்கூட,—மணஞ் செய்துகொள்ள

லாம், அவனல் சோறுபோட்டுக் காப்பாற்றக்கூடுமானல். சட்டம் தடுக்கவில்லை. ஒரு ஹிந்துக் கணவனின் தனி உரிமை அது.

## விதவா விவாகம்

ஆனல் இந்துப்பெண்ணுக்கு ஒரு தனிச்சட்டம், அவள் தன் ஆயுள் பரியந்தம் ஒருவனையே தன் கணவனைகப் பெறமுடியும். அஞ்சு வயசுப் பால்ய விதவையானலும் மறுபுருஷனை மணக்க முடியாது. இனிமேல் அவளுக்கு ஏது மணவாழ்க்கை இந்தஜன்மத்திலே? விதியின்வாயிலாக,விருப்பமின்றியே வலுக்கட்டாயமாகச் சன்யாஸம் பெற்றுக்கொண்ட பாலயோகினியாகவே தன் வாழ்நாளைக் கழிக்கவேண்டும் அல்லவா ?

## விவாக ரத்து

தள்ளப்பட்ட மனைவிமார்கள், அந்த "வாழா வெட்டிகள்"—அதுதான் நம் சமூகம் கொடுக்கும் கொடிய பெயர் அந்த ஏழைப் பெண்களுக்கு—அவர்கள் கதியை என்ன சொல்வது? அவர்களின் 'பாரதம்' தெரிய வேணுமானல், நம் நாட்டிலுள்ள அறைை நிலயங்களின் ரிஜிஸ்தர்களைப் புரட்டிப் பார்த்தால் போதும். கணவனல் தள்ளப்பட்ட மனைவிமார்கள் இத்தனை பேர்களா நம் நாட்டில் உள்ளனர்? அதிகச் சீதனத்திற்காகத் தாய் தகப்பன் வார்த்தையைக்கேட்டுக்கொண்டும்,அழகில்லை என்றகாரணத்திற்காக வியாதி என்ற சாக்கை வைத்துக்கொண்டும் வேண்டாத, மனைவிமார்களைத் தள்ளிவைக்கிறர்கள்.

இந்து-லாப்படி, இந்தியர்கள் பழக்கவழக்கப்படி, பிற்கால சாஸ்திரப்படி, விவாகரத்துக் கிடையாது நம்மவருக்குள்ளே. ஆனல் இந்துக்கணவன் மார்களுக்கு இது ஒரு பெரிய இடைஞ்சலாக இல்லை.

அவர்கள் நினைத்தால்,தீராத வியாதியுற்றவள், புத்திரப்பேறு இல்லாத பெண்டாட்டி, புத்திஸ்வாதீனமற்றவள், துஷ்டை என்றெல்லாம் காரணங் கூறி ஒரு மனைவியைத் தள்ளிவைத்துவிட்டு, மறுவிவாகம் செய்துகொண்டு விடலாம். கணவன்மார் இஷ்டப்பட்டால் பிறந்த வீட்டிற்கு அனுப்பிவிட்டு, மாஸம் நாலு அஞ்சு ஜீவனம்சம் கொடுத்துக் கைகழுவிவிடலாம். இல்லையென்றல், வீட்டிலேயே வைத்துக்கொண்டு ஒரு கவளம் சோறுபோட்டு வேலை வாங்குகிறர்கள், சம்பளமில்லாத வேலைக்காரிகள் போலே.

பெண்டாட்டியைத் தள்ளிவைக்கும், சில கணவர்கள் குழந்தை குட்டிகளையும் தள்ளிவிடுகிறர்கள். அந்தப்பெண்கள் தங்கள் வயிற்றுக்கு வழி தேடவேண்டியதுமட்டு மன்றி, குழந்தைகளையும் காப்பாற்றவேண்டியிருக்கிறது !

மனைவி புருஷனுடன்கூட வாழ இஷ்டப்படாவிட்டாலோ, தீரா வியாதி முதலிய சில முக்கிய காரணங்களைக்கொண்டு, கோர்ட்டின் மூலமாகத்தான்பிரிவினை தேடவேண்டியிருக்கிறது பெரும்பாலும் ஜீவனம்சம் பெறவேண்டி. ஜீவனம்சம், பிரிவினை பெற்றலும் என்ன? ஊரார் பழிக்க, சமூகம் ஏச, தனிவாழ்வு வாழவேண்டியிருக்கிறது, திக்கற்று நிற்கும் அந்தப் பெண்ணுக்கு !

## சீர்திருத்தங்களின் அவசியம்

காலப்போக்கு, ஆங்கிலப் படிப்பையும் உலக அறிவையும் தீவிரமாக வளர்த்து அன்னிய நாட்டுப் பழக்க வழக்கங்களையும் ஓரளவு கொண்டு வந்துவிட்டது. இந்த நவீன யுகம், புத்தப்புதிய வாழக்கை-லட்சியங்களைப் புகுத்திவிட்டது, நம்மவர் மனசிலே. இந்த நிலையில் விவாகக் கொள்கைகளில்மட்டும் பழமையைவிடாமல் கைக்கொள்ளவேணும் என்று வற்புறுத்தினல், இளைஞர் மனம் இணங்குவது எப்படி? கலப்பு மணம், ருதுமதி விவாகம், விதவா விவாகம் இவைகளை விரும்புகிறர்கள் என்றல், என்ன

ஆச்சரியம்? இத்தகைய விவாகங்களுக்கு இந்து-லாவோ, சாஸ்திரமோ, குல்ர் சாரமோ அனுமதி கொடுக்கவில்லை என்றால் மட்டும், சும்மா இருக்க மனம் வருமோ? மத மாற்றம் மூலமாவது தம் உத்தேசத்தை நிறைவேற்றிக்கொள் வோம் என்று முன்வந்தவர் எத்தனைபேர்? கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், ஆரிய சமாஜ பிரம சமாஜக்கொள்கைகள் இவைகளைத் தழுவித் தம் மனம்போனபடி மணந்துகொள்வோரை, நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

தம் இஷ்டப்படி விவாகம் செய்துகொள்ள விரும்பிய சிலர், தாம் எந்த மதத்தையும் சார்ந்தவரில்லை எனச் சொல்லிக்கொள்ளவும் பின் வாங்கவில்லை.

இந்த நிலைமையை இப்படியே வளரவிட்டுக்கொண்டு போனால், இந்து மதமே அழிந்துபோகவும் கூடும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தே விவாகசம்பந்தமான சில சீர்திருத்தங்களைச் செய்கிறார்கள், தற்காலிகமாக.

(தொடரும்)

---

# மாணவர்களின் மகத்தான முயற்சி

சிறுவர்கள் உள்ளங்களிலும் புயல் அடிப்பதுண்டு. அவ்வாறு தஞ்சை கூத்தாநல்லூரில் ஏற்பட்ட ஒரு இலக்கியப்புயலின் அதிசயப் பலன் 'புயல்'' என்னும் ஒரு கையெழுத்துப் பத்திரிகையாக உருவாகி பிரமிக்கச் செய்கிறது.

கூத்தாநல்லூர் உயர்நிலைப்பள்ளி முஸ்லீம் மாணவர் சிலர் சேர்ந்து "இக்பால் வாசக மன்றம்'' என்று ஓர் வாசகசாலையை ஏற்படுத்தி சென்ற 6 மாதங்களாக ''புயல்'' என்னும் கையெழுத்துப் பத்திரிகையை திங்களிரு முறையாக வெளியிட்டுவருகிறார்கள். புயலின் 11 வது இதழை நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்கள்.

ஆறுபக்கங்கொண்ட அவ்வழகிய பத்திரிகை என்னை ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் அமிழ்த்தியதென்றே கூறவேண்டும். பல வர்ணங்களில் மையைப்பூசி, பல பக்கங்களை ரொப்பி, கனமாக வெளிவரும் அச்சடித்தப் பத்திரிகையைவிட மனதிற்குப் பெரும் விருந்தாக விருந்தது. மாணவர்களின் மகத்தான முயற்சியைப் பெரிதும் பாராட்டுகிறேன். ஆசிரியர் ஏ. எம். ஏ. ஹமீத், பிரசுரகர்த்தர் ஏ. எம். எச். மெய்தீன், எழுதியவர் மீராக்—ஆகிய மூவரும், அவர்களது துணைவர்களும் பிற்காலத்திய பத்திரிகையுலகை அலங்கரிக்கும்படி இறைவன் அருள்புரிவாராக.

இச்சிறு பத்திரிகையிலுள்ள விஷயமேன்மையை நேயர்கள் அறியும் பொருட்டு சில விவரங்களையும், குறிப்புகளையும் கீழே தருகிறேன். (1) ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் அருமையான வாசகங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அவரவருள்ளமே அன்பு நிலயம்''; "உனதன்னையின் பாதகமலங்களிலேயே மோக்ஷமிருக்கிறது''; ''பக்தியின் மகிமை பகருவ தருமை'' (2) கீதாஞ்சலியிலிருந்தும், இதர நூல்களிலிருந்தும், மோகினியிலிருந்தும் சில அருமையான விஷயங்களைத் திரட்டியிருக்கிறார்கள். (3) கவிதைகளும், கட்டுரைகளும், தலையங்கமும் சேர்ந்து அழகு பெறச் செய்கின்றன. ஒரு சிறு கதையும் வெளியாகி யிருக்கிறது. (4) பெண்கள் பக்கம், "கல்வி'' என்னும் கட்டுரையைத் தாங்கி நிற்கிறது.

—வை. மு. கோ.



## இந்த மாதம்

வைகாசி விசாகத்தன்றுதான் முருகக் கடவுளும், புத்தமகானும், நம்மாழ்வாரும், ஞானசம்பந்தரும் இவ்வையகத்தில் தோன்றினர். என்னே விசாகத்தின் விசேஷம்!

# உபசாரமும் உதையும்

சில சம்பவங்கள், விஷயங்கள் எத்தனை யுகமாயினும் மறக்காமல் நிலைத்துவிடுகிறதோடு அதைப்பற்றிப்பேசும்போது இப்போதுதான்நடப்பது போன்ற ஒரு புதிய உணர்ச்சியையும் உண்டாக்குகின்றன. கீழுள்ள விஷயம் நடந்து சுமார் 35 வருஷங்களுக்கு மேலாகிறதெனினும் இன்றுதான் நடப்பதுபோல் தோன்றுகிறது.

மகா பண்டிதரும் பக்த ச்ரேஷ்டருமான எனது மாமனர் என்னை சம்ஸ்க்ருத பாஷையில் பண்டிதையாக்கிவிடவேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசித்தார். சம்ஸ்க்ருதம் கற்பதற்கு முன்பு தெலுங்கு பாஷையை நன்ருகப் பயின்ருல் ஒத்து அக்ஷரங்களின் உச்சரிப்புகள் வாக்குஸ்பஷ்டம் முதலியன நன்ருக வந்துவிடும்; பிறகு சம்ஸ்க்ருதம் வெகு சுலபமாகவரும் என்பது அப்புனிதப் பெரியாரின் எண்ணம்.

எங்கள் வீட்டின் எதிரிலேயே (அதாவது ஜகன்மோகினி காரியாலயத்திற்கு எதிரில்) உள்ள சாமராவ் பள்ளிக்கூடத்தில், சம்பிரதாயமாக நல்ல நாள் பார்த்து, என்னைச் சேர்த்து தெலுங்கு அக்ஷரத்தைத் தாமே பக்கத்திலிருந்து ஆரம்பித்துக் கொடுத்தார்.

அப்போது மிகவும் சிறியதாக இருந்த அந்த பள்ளிக்கூடம் மகான்களின் பாததூளி பட்டும் மேதாவிகளின் அனுக்ரகத்தாலும் இன்னும் அபாரமாகப் பெருகி பல கிளை பள்ளிக்கூடங்களுடன் விளங்குகின்றதைப் பார்க்க மனம் பூரிக்கின்றது. சாமராவ் பள்ளிக்கூடமென்ருல் நல்ல கைராசிப் பள்ளிக்கூடமென்கிற தனிப்புகழை அது அன்றே பெற்றுவிட்டது.

அதில் நான்படித்த மொத்த நாட்களைக் கணக்கெடுத்தால் ஆறுமாதம் கூடத் தேருது. என்னை மகோன்னதமான நிலைமைக்குக்கொண்டுவர ஆசித்த மாமனரின் எண்ணம் பூர்த்தியாகும் பாக்யம் நான் செய்யவில்லை. தேக அசுகமும் பல இடையூறுகளும் குறுக்கிட்டு அந்த ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. அந்த சொல்ப காலத்தில் அங்கு நிகழ்ந்த தமாஷ்களும் சம்பவங்களும் கூறிமுடியாது.

ப்ருந்தாரண்ய க்ஷேத்ரமாகிய திருவல்லிக்கேணியே எனக்கு பிறந்த இடம்,புகுந்தஇடம் இரண்டுமாகையால் இரு வீடுகளிலும் வசித்துவந்தேன். ஒருதினம் பள்ளிக்கூடம் போவதற்குச் சிறிது தாமதமாயிற்று, அதற்குக் காரணம் எனது பாட்டு வாத்தியார்தான்.

பிறகு அவசர அவசரமாக நான் பள்ளிக்கூடம் இன்னும் இரண்டு பள்ளித்தோழிகளுடன் சென்றேன். தெருக்கோடியில் போகும்போது எதிரில் சில பிள்ளைகளும் பெண்களும் (அது இருபாலரும் படிக்கும் பள்ளிக்கூடந்தான்) எதிரில் திரும்பிவந்தார்கள். அவர்களைக் கண்டு "ஏன் நீங்கள் பள்ளிக்கூடம் போகவில்லையா !" என்றேன்.

"இன்று பள்ளிக்கூடம் கிடையாது. நாலாவது க்ளாஸ் வாத்யாரின் மனைவி இறந்துவிட்டாளாம். லீவு விட்டுவிட்டார்கள்."என்ருர்கள். எங்கள் சந்தோஷத்தைக் கேட்கவேண்டுமா ! ஒரே கும்மாளந்தான். அப்படியே திரும்பியதோடு அன்றைய தினம் யார் வீட்டில் விளையாடுவது? என்ன விளையாட்டு விளையாடுவது என்கிற திட்டத்தை வகுத்துப் பேசியவாறு வீட்டிற்கு வந்தோம்.

அப்போதுதான்மணி 10-30 ஆகையால் என்பிதாவும் அவரது ஆபீஸ் நண்பர்களும் ஆபீஸ் போக ஆயத்தமாக வீதியில் வந்தார்கள். என்னைப் பார்த்ததும் "ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை?" என்றார். உடனே நான் பாடத்தை ஒப்புவித்துவிட்டேன். "அடாடா! கடைசியில் இப்படியா முடிந்தது? நல்ல மனுஷ்யன் பாவம்!" என்று அனுதாபம் கூறிவிட்டு ஆபீஸுக்குச் சென்றார்.

மாலைவரையில் நாங்கள் விளையாடியது கணக்கு வழக்கில்லை. 6 மணி சுமாருக்கு நாங்கள் வீதியிலுள்ள பந்தக்கால்களை தாச்சியாக வைத்துக் கண்ணாமூச்சியும் ஓடிப்பிடிக்கும் விளையாட்டும் விளையாடும்போது என் தகப்பனார் ஆபீஸிலிருந்து வருவதைக்கூட பார்க்காது விளையாட்டில் லயித்திருந்தோம். அவர் தினம் மாலையில் ஏதாவது தின்பண்டம் கொண்டுவருவது வழக்கம். அன்று வரும்போது நான் ஓடுகிறவர்களைப் பிடிக்கும் முறையில் கண்ணைக் கட்டிக்கொண்டு கும்மாளத்துடன் கையைத் துளாவிக் கொண்டிருந்தேன். அப்போது முதுகில் பளீரென்று ஒரு அறை விழுந்தது. அடுத்த நிமிஷம் கண் கட்டு எகிறியது. என் கையை தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு உள்ளே ஓடினார்.

அதுவரையில் என்னுடன் விளையாடிய அத்தனை குழந்தைகளும் எப்படித்தான் மறைந்தார்களோ! உள்ளே வந்ததும் கன்னத்தை நிமிண்டியவாறு "இனிமேல் பொய் சொல்லமாட்டாயே...சொல்லமாட்டாயே?" என்று ஆக்ரோஷத்துடன் கூறி முதுகில் அறைந்தார்.

ஒருபோதும் விரலால் தீண்டியறியாத என் பிதா இப்படி அடிப்பதைப் பார்த்துக்கொண்டுவந்த என்பாட்டிக்குக் கண்ணில் ஜலம் மளமளவென்று வந்துவிட்டது. "ஏதற்காக தாயில்லாக் குழந்தையை இப்படிக் கொல்லுகிறாய்? நிறுத்துடா.. உம்..." என்று தனது அன்னை அதிகாரத்தைக் காட்டித் தன் மகன் கையைத் தடுத்து என்னை இழுத்து அணைத்துக்கொண்டாள்.

என் பிதாவின் கோபம் அடங்கவே இல்லை. விடம்மா! இந்த சிறுவயதில் இத்தனை புளுகுருட்டுகளும் பொய்யுமிருந்தால் இவள் எப்படி உருப்படுவாள்?... இன்று ஏன் பள்ளிக்கூடம் போகவில்லை கேளு. சோம்பேறித்தனத்தினால் போகாததற்கு வாத்தியார் மனைவி இறந்ததாகப் பொய் கூறினான். நானும் அதை நம்பி இப்போது வரும்போது அவருக்கு உபசாரம் சொல்லச்சென்று பெரிய அவமானமடைந்தேன். இந்த பொய்க்கு ஏற்றாற்போல் அவருக்கு யாரோ பங்காளி செத்தானும். அவர் தலைமுழுகிவிட்டு நெத்தியில் நாமமில்லாது உட்கார்ந்திருந்தார். "ஐயோ பாவம்! கடைசியில் பலனில்லாமலேயே போய்விட்டதே"... என்று ஆரம்பித்தேன். அப்போது தான் அந்தம்மாள் பக்கத்து வீட்டிலிருந்து வீட்டிற்கு வந்தாள்...

இந்த அபாண்டப் புளுகின் மர்மம் யாருக்குத்தான் தெரியும்? பொய் சொன்ன பையனின் பேரைச் சொல்லி நடந்ததைத் தெரிவித்து அழுதேன். என் தந்தை அதைக்கூட நம்பாது மறுநாள் பள்ளிக்கூடத்திற்கே வந்து அதன் சொந்தக்காரரான சாமராவிடமே தெரிவித்து அந்த பையனுக்குச் சரியான அடி வாங்கி வைத்தார். இந்த சம்பவத்தை இன்று நினைத்தாலும் கண்முன்பே காக்ஷிகொடுக்கிறது.

---

## மிகவும் உபயோகம்

காப்பித்தூளை வடிகட்டியபிறகு தூர எறிந்துவிடுவதே வழக்கமாகி விட்டது. அதை எறியாமல் உலர்த்தி சேமித்து வைத்துக்கொண்டால் வெள்ளிப்பாத்திரங்கள் தேய்க்க மிகவும் உபயோகமாக இருக்கிறது. நன்றாகப் பிசுக்கு போவதுடன் பளபளப்பாக பாத்திரம் வெளுக்கிறது. சிக்கனத்திற்குச் சிக்கனம்; சௌகரியத்திற்கும் சிறந்தது.

# உதயசூரியன்

வை.மு.கோ

## 6. குருகுலவாசமும் குமரனின் உள்ளமும்

"கண்களைக்காக்க இமைகளை ஏற்படுத்திய பகவான் இச்சிறுவர்களைக் காக்க மைத்ரேயியை சிருஷ்டித்தான்போலும்! இமைகள்கூட சில சமயங்களில் ஏமாந்துபோய் கண்களில் தூசி பட்டுவிடும். ஆனால் இந்த மைத்ரேயிமட்டும் தனது கடமையில் மறக்கவோ, தவறவோமாட்டாள் என்பது தினே தினே எவ்வளவு தெளிவாகத் தெரியவருகின்றது! பருவ மங்கைகள் இயற்கையாக விரும்பும் மணவாழ்க்கையைச் சிந்திக்காமல் தியாகவாழ்க்கையை இச்சிறுவர்களுக்காக மேற்கொண்ட இவ்வனிதாமணியின் தூய ஹிருதயத்தை நினைக்க நினைக்க நம் மனம் எப்படி நிறைந்து அவளை வாழ்த்துகிறது! ஸர்வேச்வரன் சிருஷ்டிக்கும் சம்பவங்களும் குணவிசேஷங்களும் என்ன ஆச்சரியமாயிருக்கின்றன! இப்போதுதான் அரசதம்பதிகள் மறைந்தாற்போலிருக்கிறது; இதற்குள் மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டனவே! மைத்ரேயியின் கண்காணிப்பில் அரசிளங்குமரர்களும், குமாரிகளும்பெற்றோரின் மறைவை மறந்து, சரியான முறையில் வளர்ந்து வருவதானது பூர்வ ஜன்மத்தில் மைத்ரேயி செய்த புண்ணியமோ, அல்லது அச்சிறுவாகள் செய்த புண்ணியக் தானோ! தந்தையின் உறவினர்களும், தாயின் உறவினர்களும் அனேகர் இருப்பதைச் சிறிதும் பொருட்படுத்தாது எல்லோரும் மைத்ரேயியையும் என்னையுமே சதமென்று எண்ணியிருக்கிறார்களே! இதுவும் ஜகன்மோகனன் ஆட்டிவைக்கும் கூத்துதான்." என்றெல்லாம் ஸ்ரீவத்ஸ்ஸரின்மனது அலைபாய்ந்துகொண்டிருந்தது. மனதிற்கு மதில் உண்டா? மனோவேகத்திற்கு எல்லை உண்டா? "இன்னும்பத்து வருடங்களுள் அரசிளங்குமரனை எவ்விதமெல்லாம் தயார்செய்து, ராஜ்யாபிஷேகத்திற்குள் ராஜ்ய பாரத்தின் சகல உரிமை, பெருமை, கடமைகளையெல்லாம் நன்கறிந்த நிபுணனுக்கிவிடுகிறேன் பார், பகவத் கடாக்ஷத்தால் எல்லோரும் நன்றாயிருந்தால்!" என்று வெகுதூரம் சென்றுகொண்டிருந்தது அவரது சிந்தனை.

*　　*　　*　　*

அரண்மனையே ஓர் குருகுலம்போன்றிருந்தது. ரிஷியும், அவரது வளர்ப்புப் பெண்போலும் தோன்றினர் ஸ்ரீவத்ஸரும் மைத்ரேயியும். குணசேகரனும், வீரநாதனும் அந்த குருவிடம் அபார பக்திகொண்டுள்ள சிஷ்யர்கள்போல் விளங்கினார்கள் என்று சொல்லவும்வேண்டுமோ? வால்மீகி முனிவர் லவ-குசர்

களை வளர்த்ததையே தன் மனக்கண்முன் வைத்து ஸ்ரீவத்ஸர் தன் பொறுப்பை ஏற்றுவந்தாரென்றாலோ, அல்லது சகுந்தலை தன் செல்வக்குமரனை வளர்த்துவந்த எழில்படியே மைத்ரேயி நம் பாஸ்கரனை அருமையாக வளர்க்க முயன்றாளென்றாலோ சிறிதும் மிகையாகாது. மங்களபுரிமட்டுமல்ல, சிம்மபுரியும் இதர சமஸ்தானங்களும்கூட அப்படியே பிரமித்து நின்றன, இக்குருகுலத்தின் வனப்பைக்கண்டு !

* * * *

"ரத்னமாலா! என்னிடம் கூடவா உனக்கு வெட்கமும் சங்கோஜமும்? உன தன்னை மறைந்ததிலிருந்து இந்த எட்டு வருடங்களாக என்னிடம் நீ இவ்வளவு அன்புடன் பழகிவந்து என்னையே உன் அன்னைபோல் பாவித்துவந்தும் இது விஷயமாக லஜ்ஜைப்பட்டால் எப்படி? உனக்கோ யுக்த வயது வந்துவிட்டது. அரசிளங்குமரியாய்ப் பிறந்த நீ ஒரு ராஜகுமாரனையே விரும்புகிறாயா அல்லது..." என்று மைத்ரேயி முடிப்பதற்குள் ரத்னமாலா "அல்லது என்ன ?" என்று குறுக்கிட்டாள்.

"என்னவா? நான் கவனித்துவந்ததிலிருந்து உன்னுடைய கண்ணோட்டம்" என்று மேலே சொல்வதற்குள், "போ! மைத்ரேயி! உனக்கு எப்போதும் பரிகாசந்தான்!" என்று நாணிக் கோணி தலைகுனிந்தாள் ரத்னமாலா.

"நம் குருகுலத்தின் பலன் உனக்கு பரந்த நோக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ராஜகுமாரன்தான் மணாளனாக வரவேண்டுமென்றில்லாமல் நம் குருகுலத்திலேயே சரியான ஆளைப் பிடித்திருக்கிறாயே நீ !"

"இனி உன்னிடம் மறைப்பதில் பிரயோஜனமென்ன? நான் விரும்புவதெல்லாம் இங்கேயே கிடைக்கும்போது...."

"வாஸ்தவந்தான். தேசபக்தி, தெய்வபக்தி, அறிவு, ஆற்றல், உள்ளழகு, வெளி அழகு, வீரம் எல்லாம் பொருந்தியவனாகத் தான் பார்த்திருக்கிறாய்! நம் குருகுலத்திற்கு பாஸ்கரனுக்குத் துணையாக என்று வஸந்தனும் உத்தமனும் வர ஆரம்பித்தார்களோ, அன்றே உனக்கும் வஸந்தனுக்கும், ஹேமலதாவுக்கும் உத்தமனுக்கும் பகவான் முடிபோடக்கூடாதா என்ற எண்ணம் என் மனதில் திடீரென ஏற்பட்டது. இதற்குக் காரணம் அவர்களது உயர்வுமட்டுமில்லை; அத்தகைய சம்மந்தமேற்பட்டால் நீங்கள் சகோதரிகளிருவரும் இம்மங்களபுரியிலேயே இருக்கலாமே என்ற ஆசையினாலுந்தான். வஸந்தன் உண்மையில் ரத்னமாலாவுக்காகவே பிறந்தவன்..."

'என்பெற்றோர்களுக்கு நாங்களிருவரும் பிறப்பதற்கு முன்னமே நமது சேனாதிபதியும், மந்திரியும் இந்த ராஜகுடும்பத்திற்கு சம்மந்திகளாக வரவேண்டுமென்று ஆசை உண்டாய்விட்டது போலிருக்கிறது!" என்று சிரித்தாள் ரத்னமாலா.

ரத்னமாலாவுக்கும், சேனாதிபதியின் புதல்வன் வஸந்தனுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியதென்று சொல்லவும் வேண்

டுமா! பன்னிரண்டு வயதுச்சிறுவன் பாஸ்கரனுக்கு இதுகாறும் தனது தோழனுயிருந்த பதினெட்டுவயது வஸந்தன் இப்போது அத்திம்பேராய்விட்டது பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. உத்தமனைப்பார்த்து "இன்னும் மூன்று வருடங்கள் கழிந்தால் நீயும் எனக்கு அத்திம்பேராகி விடப்போகிருய்!" என்று கேலி செய்வான்.



அரண்மனை நந்தவனத்தில் ஆசிரமத்தை அமைத்திருந்த ஸ்ரீவத்ஸர் தனது கண்காணிப்பில் வளரும் மூன்று சிறுவர்களையும் மூன்று திலகங்களாக விளங்கச் செய்யவேண்டுமென்பதே லக்ஷிய மாகக் கொண்டிருந்தார். புராதன சம்ஸ்க்ருத இலக்கியங்களி லிருந்தும், இதிஹாஸங்களிலிருந்தும் ஏராளமான கதைகளையும் கருத்துக்களையும் சொல்லி அவைமூலம் உயர்ந்த நோக்கங்களையும், கடமைகளை உணரும் சக்தியையும் ஏற்படுத்திவந்தார். ராஜன் எப்பேர்ப்பட்டவன், எப்படி இருக்க வேண்டுமென்பதைப்பற்றி விரிவாக பாஸ்கரனுக்கு எடுத்து உரைப்பார். அவனுடைய தம்பி சாகரனுக்கு அடிக்கடி லக்ஷ்மணன், பரதன் முதலியவர்களின்

குண விசேஷங்களை எடுத்துக்காட்டி அவன் தன்தமையன் அரசு செலுத்துங்கால், தான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென் பதை விளக்கிக்கூறுவார். மந்திரி புதல்வன் உத்தமனிடமோ, அவனே பாஸ்கரனுக்கு மந்திரியாக வரவேண்டியவனென்பதை உணர்த்தி மந்திரியின் குண விசேஷங்கள் யாவை என்பதைப் பற்றி விவரிப்பார்.

இத்தகைய முறையில் அவர் அக்குமாரர்களின் உள்ளங்களைக் கவர்ந்து மனதிற்கும் மூளைக்கும் பெரும் விருந்தும், உத்ஸாகமும் அளித்துவந்தார். "மனிதரூபத்தில் உலாவும் தெய்வ அம்சம் அல்லவா அரசன்! தனத்தின் அதிகாரியும் காப்பாளனும் அவனே. குற்றவாளிகளைத் தண்டித்துத் தர்ம பரிபாலனம் செய்யும் பூபதியும் அவனே! அரசனே அக்னியும் வாயுவும்; அவனே சூரியனும் சந்திரனும்; அவனே வருணனின் பிரதி நிதி. இக்கொள்கைகளை மனத்திலும், கருத்திலும்கொண்டே நீ நீதிசாஸ்திர நியதிப்படி ராஜ்யபாரம் நடத்தவேண்டும்" என்றெல்லாம் பாஸ்கரனுக்கு ஸம்ஸ்கிருத இலக்கியங்களிலிருந்து எடுத்துச் சொல்லும்போது அவனது மனோ நிலையும் உள்ளக் கிளர்ச்சியும் எப்படி இருக்கும்?


இதேபோல் "தம்பி என்றால் லக்ஷ்மணனைப்போல் பணிவும் பரதனைப்போல் பக்தியும் கொண்டிருக்கவேண்டும்" என்று சாகரனுக்கு உபதேசிப்பார்.

"மந்திரிதான் அரசனின் நிழல்; அவனது வலது கை; அறிவு; சக்தி. முன்யோசனை கூறுவதிலோ, அல்லது இடுக்கண் நேரிடும்போது பரிகாரம் தேடுவதிலோ, எப்போதும் சலிப்பற்ற ஊழியனாக இருப்பதே மந்திரியின் கடமை" என்று உத்தமனுக்குப் போதிப்பார்.

* * * *

பட்டை தீட்டப்பெற்ற வைரத்தின் ஜ்வலிப்பே ஜ்வலிப்பு. மெருகு கொடுக்கப்பட்ட நகைகளின் பளபளப்பே பளபளப்பு. இவை யாவற்றையும் விட ஜோதி நிறைந்ததாக விளங்கியது ஸ்ரீவத்ஸரின் ஞான விளக்கால் ஒளி பெற்ற மங்களபுரி.

இருளை விலக்க மங்களகரமான திருவிளக்கு எவ்வளவு அவசியமோ அதுபோல் மங்களபுரியின் இன்னல்களைத் தீர்க்க ஸ்ரீவத்ஸரின் ஞானவிளக்கு இன்றியமையாததல்லவா?



# திருப்தி

1

ஸ்ரீமதி. ராஜம்மாள் ராமானுஜாசாரி

திருப்தி என்கிற பதம் ஆழ்ந்த பொருளேயும் ஆராய்ச்சியையும் கொண்டதாய் ஞானியருக்கே உரிமையானது. திருப்தியாகிற கனிக்கு வ்ருக்ஷம் ஆசை. இந்த ஆசையாகிற வ்ருக்ஷத்தை வெட்டி எறியவே புத்தமஹான் மதங்களேயும் வேத சாஸ்திரங்களேயும் ஆராய்ந்து சோர்வடைந்தார். த்ருப்தியாகிற கனி உயிர்களுக்கு மிக்க அவசியம். ஆனல் ஆசையாகிற கொடிய வ்ருக்ஷம் வளரக்கூடாது, இது எப்படி சாத்தியமாகும்? நம் ஆழ்வார்கள் இதற்கு ஒரே வழியை கண்டுபிடித்தேவிட்டார்கள்.

ஆசை என்கிற மாயையே ச்ருஷ்டியின் ஸூக்ஷ்மம். நிராசையுள்ள மனிதன் சுத்த சோம்பேறியாகி அநாகரீகம், மடத்தனம், நீசபுத்தியோடுகூடி அருவருக்கத்தக்கவனுகிறுன்.

'ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாம் கட்டியாளினும்' என்கிற பேராசைக்காரனும், பொன்வாத்துக்காரன் கதையாகிறுன். கேவலம் அல்ப ஆசை, அல்ப திருப்தி உடையவர்கள் அல்ப சந்தோஷியாகிருர்கள். ஆசையே அன்பு, ஆசையே காதல், ஆசையே பக்தி, ஆசையே இன்று உலகத்தில் யந்த்ரங்களாகவும், மின்சாரமாகவும் வானொலியாகவும், ஆகாயவிமானங்களாகவும், உலக நாகரீக வ்ருக்ஷமாகப் பல வெற்றிக் கனிகளே உதிர்த்திருக்கின்றது.

ஆகையால் ஹ்ருதயமாகிற நிலத்தில், ஆசையாகிற வ்ருக்ஷத்தை பலமானதாய், சத்ருக்களால் அழிக்கமுடியாததாய், தோஷங்கள் தீண்ட ஒண்ணுததாய், சுத்த ஸத்வமயமாய் கற்பகத் தருவாய் வளர்த்துவிடுவோமானல் எண்ணற்ற கனிகளேக் காணலாம்.

விவேகிகள் தேகத்தால் வர்ணுச்ரம தர்மத்தை நடத்திக்கொண்டு, மனமாகிற வித்தை ஆசையினுல் இழுத்துக்கொண்டு போய் பகவானுடைய திருவடித் தாமரைகளில் வைத்து விதையை நட்டுவிட்டால், அந்த வ்ருக்ஷத்திற்கு உணவு—நீர் எருவு எல்லாம்—அவனே இட்டுக்கொள்வான்.

ஐச்வர்ய, கைவல்ய, பகவல்லாபங்களே ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைத் தருவன். அதை அடைந்தவர்கள் திருப்திகொள்ளலாம். அதைவிட மேலானது இன்று நாம் ப்ரத்யக்ஷத்தில் காணும் மஹாத்மாகாந்தி தேசத்தினிடத்திலும், எளியவர்களிடத்திலும், ஆசை மிகுதியினுலல்லவோ அஹிம்ஸா தர்மத்தையும், மகத்தான தியாகத்தையும், சலிப்பற்ற உழைப்பையும் மேற்கொண்டு தாங்கி நிற்கிருர். கதராடையினுல் எத்தனே உள்ளங்கள் திருப்தி

யடைகின்றன! இன்று நாம் ஸ்வராஜ்யம் பெறுவோமானல், அந்த திருப்தி மஹானின் சிறு உள்ளத்தில் கடலளவாகவல்லவோ பெருகி ஓடும். ஒரு நாட்டின் திருப்தி ஒரு உள்ளத்தில் வளருகிறது.

பாரதியாரும் சுதந்திர ஆசையை

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் ஸர்வேசா இப்பயிரைக்,
கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ
எண்ணமெலா நெய்யாக எம்முயிரினுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ

* * * *

என்று தணியுமிந்த சுதந்திர தாகம்

என்கிறார். தாகம் தணிந்தால் ஒரு நாட்டின் திருப்தி, சாந்தி எத்தகைய வெற்றி. இன்று தனக்காக இகபரஸுகங்களைக் கோராமல் பகவானிடம் நெருங்கிய ஆசைகொண்டு, பக்தியினல் பகவானை கிட்டி, பின்பு

உனக்கே நாமாட் செய்வோம்,
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில்
புகுதலொட்டோம்,

என்றுபேசி அவனுடைய ச்ருஷ்டி உலகத்தில், அவன் ஆணையிட்ட தொழில்களைச் செய்து நித்யர் முக்தர், பக்தர் என்று ஸர்வேசுவரன் திருப்தியைக்காணும் ஆசை எத்தகையது?

ஊன்வாட உண்ணுதுயிர் காவலிட்டு
உடலில் பிரியாப்புலனைந்தும் நொந்து
தாம் வாடவாட தவம்செய்ய வேண்டா
தமதா இமையோர் உலகாளகிற்பீர்

என்று இன்று கூவியழைத்து தவத்திலும் தர்மத்திலும் அடையக்கூடிய ஒரு பெரியபதவியைக் கண்ணெதிரே காட்டிக்கொடுத்து இந்த மண்மீதிலேயே பரமபத நாதனை நேரில் காண்பித்து, அந்த இடத்திலேயே அவனலேயே உபதேசம் பெற்று ஞானபூர்த்தியையடைந்து திருப்பல்லாண்டு பாடின உள்ளத்தின் திருப்தி இன்றும் இந்த உலக மக்களின் ஆத்மகோடிகளின் திருப்தியல்லவா?

அக்ஞானத்தால் ப்ரபன்னர் அஸ்மதாதிகள்
பக்தி பாரவச்யத்தால் ப்ரபன்னர் ஆழ்வார்கள்
ஞானுதிக்யத்தால் ப்ரபன்னர் பூர்வாசார்யர்கள்

நமது பூர்வாசார்யர்கள் பகவத்கடாக்ஷ பூர்வமாக ஸத்புத்ரர்களை லோகோபகாரமாக உபகரித்து ஆசையை வெட்டிக் களையாமல் அக்ஞானியர்களிடம் வாஞ்சையை வைத்து உபதேசம்செய்து உலக அக்ஞானத்தைபோக்கவே, தங்களை வாழ்வித்துக்கொண்டிருந்தனர்.

ஓதிய வேதத்தினுட் பொருளாய் அதநுச்சிமிக்க
சோதியை நாதனெனவறியாது உழல்கின்ற தொண்டர்
பேதமை தீர்த்த விராமானுஜன்,

இப்படி பிறர் திருப்தியைக் காணுவதே திருப்திக்கு கௌரவமும் இயற்கையுமாகும். ராம க்ருஷ்ணுதிகளைப் பெற்றுவிட்ட சக்ரவர்த்தி, தேவகி யசோதைஇவர்களின் திருப்திக்கு அவர்கள் அநேக காலமாய் அநுஷ்டித்துவந்த ஆசையே காரணம். திருப்தியே கனி.

ஸ்ரீமதி. கி. ஜெயலக்ஷ்மி

திருப்தி என்ற பதத்திற்கு சந்தோஷம் என்று பொருள்படும். திருப்தியினால் மகிழ்ச்சியும், அதிருப்தியினால் துக்கமும் விளைகிறது. வாழ்க்கையில் நாம் உள்ளதைக் கொண்டு, திருப்தியோ, அன்றி அதிருப்தியோ அடைவது நாமே செய்துகொள்வதுதான். கடவுள் செயலால், நமக்கு நேரும் கஷ்டங்களை கூடியவரை ஸஹித்து நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான் என்று மனம் தேறி, வேறு வழியில் பிரவேசித்தால் நாம் துளியாவது சாந்தி அடையலாம். அப்படி இல்லாதுவிளைந்த தீமைகளை நினைந்துருகுவதாலும், அதையே எண்ணியிருப்பதாலும் நேர்ந்திருப்பவைகளைவிட, இன்னும் அதிகமாகப் பெருகிவளருகிறதுதான் பயன். நாம் பொறுக்க இயலாத கஷ்டம் நேரும்போது, நம்மிடம் அன்புள்ள நண்பர்களின் மொழிகளாலும், அவர்கள் மனதை வேறு வழியில் பிரவேசிக்கச் செய்வதாலும் நாம் சிறிது திருப்தியையும் சாந்தியையும் அடைகிறோம். இது என் அனுபவத்தில் கண்ட உண்மை. உலகில் எந்த ஸமயத்திலும் த்ருப்தியை விரும்புகிறார்கள்.

கர்ணன் மிகுந்த தர்மவானாகவும் வீரச்ரேஷ்டனாகவும் தன் உயிர் நண்பனால் முடிசூட்டப்பெற்று அரசனாகவும் இருந்தும்கூட ஒரு விஷயத்தில் த்ருப்தி இல்லாதவனாக இருந்தான். காரணம் தன் குலம், தாய் தந்தையையும் தானே அறியாதிருந்ததுதான்.

ஒருநாள் கர்ணன் தேரின்கீழ் ஒரு பசுங்கன்று விழுந்து உயிர் துறந்தது. கன்றின்மேல் பசு விழுந்து கதறியது. இதைப் பார்த்த அந்தணர் ஒருவர் கர்ணனை நோக்கி கோபத்துடன் "இந்தக்கன்றின் மேல் பசு கதறுவதுபோல, உயிரிழந்த உன் உடலின்மேல் உன்தாய் விழுந்து கதறக்கடவள்" என்று சாபமிட்டார். கர்ணனோ தான் இறப்பதைப்பற்றி நினையாமல் அப்பொழுதாவது என் தாய் தந்தையையும் குலத்தையும் தெரிந்து என் ஆத்மாவும் உலக ஜனங்களும் திருப்தி அடையலாமல்லவா?" என்று எண்ணி மரணத்தை ஆவலுடன் விரும்பினான். இறந்தாலும் கர்ணன் ஆத்மதிருப்தியை விரும்புகிறானல்லவா?

சாபத்தின் பயனாக யுத்தத்தில் உயிரிழந்தகர்ணனது உடலின்மேல் குந்திதேவி விழுந்து புலம்பத்தொடங்கினாள். பாண்டவர்கள் விரைந்தோடிவந்து, பார்த்து விஷயமறிந்து வருந்தினார்கள். கர்ணனைப் பார்த்து "அண்ணா! வீரச்ரேஷ்டரும் நீரே; எங்கள் ஐவருக்கும் ஜ்யேஷ்டரும் நீரே. உம்மையும் இதர ஆசார்ய பந்துமித்ரர்களையும் இழந்து நாடாள்வதைவிட நாங்கள்காடாள்வதையேத்ருப்தியுடன்செய்வோமே!" என்று புலம்பினார்கள். ஸ்ரீ க்ருஷ்ணன் ரஹஸ்யார்த்தங்களை எடுத்துச்சொல்லி அவர்கள் மனதைத் திருப்தி செய்துவைத்தார்.

பக்தியிலிருந்து திருப்தி உண்டாகியது. எல்லாம்கடவுள்செயல் என்று காம் இருப்பதால் சாந்தியும் திருப்தியும் நம்மனதில் பரவு

கிறது. திருப்தி என்பது செல்வத்தையும் ஏழ்மையையும் பொறுத்த தல்ல. அது பலவித காரணங்களால் ஏற்படுகிறது.

நம் கையில் கிடைத்ததை சுவல்பமாக இருந்தாலும், பிறருக்கு திருப்தியாகக்கொடுத்தால் அவர்களும் திருப்தியாக நாம் கொடுத் ததை அங்கீகரித்தால் அதுவே திருப்திகரமானது.

நல்ல பசி, தாகத்துடன் (உண்மையில்) வந்தவருக்கு திரவிய ஸஹாயம் செய்வதால் பசி அடங்கி திருப்தியாக இருக்குமா? ஆகையால் வந்தவருக்கு வயிறார போஜனம் செய்வித்து வேண்டிய உதவியும் செய்தால் அவர்கள் திருப்தியடைவது நிச்சயம்.

பிள்ளைவீட்டாருக்கு பெண்வீட்டாரோ, அன்றி, மற்ற உறவு களுள்ளோ, கடன் வாங்கியாவது கஷ்டப்பட்டுச் செய்தாலும், நீ என்னபிரமாதமாக செய்தாய் என்று கூறி தூற்றுவதால் செய்தவர் களுக்கு திருப்தி இல்லாது உற்சாகம் குன்றிப்போய்விடுகிறார்கள். ஆகையால் செய்ததைக்கொண்டு திருப்தி அடைவதால் இருதாத் தாரும்உற்சாகமும்,அன்பும்விருத்தியாகிதிருப்தியை அடைகிறார்கள்.

வெகுநாளாக விரும்பியகாரியம் இனிதே நடைபெறுவதாலும் எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ, அன்புள்ள நண்பர் வருவதாலும், அவர்களுக்கு சந்தோஷத்துடன் ஒரு நன்மையை செய்துவைப்ப தாலும் அவர்கள் அன்பு வளர்ந்து திருப்தி அடைகிறார்கள்.

நம்மை ஒரு காரியமாக தேடிவந்தவர்களின் விஷயத்தை விசா ரித்து அதை நாம் நன்மையாக முடித்துக்கொடுத்தால் நம்மை வாழ்த்திக்கொண்டு அவர்கள் திருப்தியுடன் செல்கிறார்கள்.

நாம் கடவுளிடம் பக்தி செலுத்தினால் அவருடையக்ருபையால் கஷ்டதுக்கங்களை ஒருவாறு ஸஹித்து சாந்தி அடையலாம் என்பது என் தாழ்மையான அபிப்ராயம்.

தற்சமயம் எனக்கு நேர்ந்துள்ள கடுந்துயரங்களிலிருந்து, பல சகோதரிகள் என்னிடம்மிகுந்த பரிதாபத்துடனும் அன்புடனும் தம் அனுதாபம் நிறைந்த மொழிகளால் என்னைத்தேற்றி சாந்தி அடை யச் செய்தார்கள். அன்னாருக்கு என் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன். என் கஷ்டங்களுக்கு ஆறுதலாக "திருப்தி" என்று எழுதநேர்ந்ததை எண்ணி, ஒருவாறு திருப்தியை அடைகிறேன்.

## 3

ஸ்ரீமதி ரங்கநாயகி ஸ்ரீனிவாஸாசாரி.

மோகினி ஆசிரியை திருப்தி என்னும் விஷயத்தைப் பற்றி எழுதும்படி திருவிளக்கைபிரகாசப்படுத்துகிறதூண்டுகோல்போலத் தூண்டுகிறாள். ஆனால் எனக்கு எழுத்து வாசனையே தெரியாது. ஆசை வெட்கமறியாது என்பதுபோல் எனக்குத் தெரிந்த வரையில் எழுதவேண்டுமென்று ஆசை வந்ததினால் எழுதுகிறேன். நான் கட் டுரை எழுதுவது இதுதான் முதல்தடவை. குற்றத்தைத் தள்ளி கடு களவுகுணம் இருந்தால் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

திருப்தி என்பது நினைப்பதெல்லாம் நினைத்தபடி நடந்தால் திருப்திதான். நடக்காவிட்டால் அதிருப்திதான். இது உலகறிந்த

விஷயம். ஆனால் பூர்ண திருப்தி எதுவென்று நாம் அறியவேண்டும் ஸந்தானம் ஸம்பத்து இரண்டும் இல்லாவிட்டால் இகத்தில் போக மில்லை. அதில் சந்தானம் ஒரு டஜன் இருந்தால் மனம் திருப்தி அடையாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஸம்பத்து எவ்வளவு இருந் தாலும் சிலருக்கு திருப்தி ஏற்படுவது கிடையாது. இதெல்லாம் பூர்ண திருப்தியாக மாட்டாது. பகவானுடைய பரிபூர்ண கிருபை நம்மீதிருந்தால் மாத்திரம்தான் நமக்கு பூர்ண திருப்தி உண்டாகும். திருப்தி அடைவதற்கு மனம்தான் காரணம். மனதை பொறுமை யுடன் அடக்கினோமானால் திருப்தி அடையலாம்.

(உதாரணம்) ஓர் ஊரிலிருந்து இரண்டு பிராமணர்கள் உபாதா னத்திற்கு வருவார்கள். அதில் ஒருவர் மிகவும் ஏழை. ஒருவர் சுமா ரான சொத்துடையவர். இந்த ஏழை பிராமணருக்கு கால்படி அரிசி கொடுத்து விட்டால் மனதில் திருப்தியுடன் வாழ்த்திவிட்டு "நான் நாலிடம் செல்வேன். நாலிடத்தில் கிடைக்கும் அரிசியை ஒரே இடத்தில் நீங்கள் இவ்வளவு கொடுப்பது ஜாஸ்தி" என்று சொல்லி விட்டுப் போவார். மற்றவரோ அரைபடி கொடுத்தால் இன்னும் அரைபடி கொடுக்கும்படிக் கேட்பார். மனத்ருப்தி எப்படி இருக் கிறது? நல்ல பொறுமையும் சாந்தமும் இருப்பவர்களுக்குத் தான் திருப்தி ஏற்படும். அல்பமனதை யுடையவருக்கு திருப்தி என்பதே கிடையாது. பெரிய பணக்காரராயிருந்தால் ஸந்தோஷமாயும் திருப் தியாயும் இருப்பார்களென்று சிலருக்கு எண்ணம். அதுவும் அறியாமை.

ஓர் ஊரிலிருந்து இருவர் காட்டுமார்க்கமாக வந்துகொண்டிருந் தார்களாம். அவ்விருவரும் மகா ஞானிகளாம், பூர்ணதிருப்தி யுடைய மனதை உடையவர்களாம். வரும்வழியில் எதையோ பார்த்துவிட்டு அவர்கள் எறைக்க எறைக்க ஓடி வந்தார்களாம். இதை இவர்கள் அருகில் வரும் ஒரு அண்ணன் தம்பி இரு வரும் பார்த்துவிட்டு "ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?" என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள் அதோ அந்த புதரில் மனிதரை தன் வசமாக்கிக்கொண்டு கொலைப்பாதகனைச் செய்து குட்டிச் சுவராடிக்கும் கள்வனிருக்கிறது. அதன்பெயர் தனம். அதைக்கண்டு பயந்து ஓடுகிறோமென்றார்களாம். பிறகு அண்ணன் தம்பி புதரினரு கில் சென்று பார்த்தார்களாம். அங்கு ஒரு புதையல் சவரனை மின்னிக்கொண்டிருந்ததாம். இதைக்கண்டு ஓடினவர்கள் பைத் தியக்காரர்களென்று நினைத்துக்கொண்டு அப்புதையலை எடுத்து பத்திரப்படுத்திவிட்டு, பசியின் கொடுமையினால் கொஞ்ச தூரத்தி லிருக்கும் ஊருக்குச் சென்று ஓர் வீட்டில் சாப்பாடுவாங்கிவர தம்பியை அனுப்பிவிட்டு, இத்தனை பணம் கிடைத்தும் மனதுக்கு திருப்தி உண்டாகவில்லை. தம்பிக்குபாதிகொடுக்கவேண்டுமே என்று மனம் போராடுகிறது. ஆதலால் அவனைக் கொன்று இதை நாமே எடுத்துக்கொண்டால்தான் திருப்தி உண்டாகுமென்று மடியி லிருக்கும் கத்தியைத் தீட்டினனாம் அண்ணன். தம்பியோ, தான்

சென்றவிடத்தில் சாப்பாட்டைமுடித்துக்கொண்டு அண்ணனுக்குப் பாதிபணம் கொடுப்பதற்கு மனம் ஸம்மதிக்காமல் "அண்ணனுடைய சாப்பாட்டில் விஷத்தைக்கலந்து கொடுத்து விட்டோமானல் அண்ணனிறந்து விடுவான். முழுபணத்தையும் நாமே அடையலாம். அப்போதுதான் மனம் திருப்தி அடையும்" என்று எண்ணிக் கொண்டு அவ்வாறே செய்து சாப்பாட்டை கீழே வைக்கையில் அண்ணன் தம்பியை கத்தியால் வெட்டிவிட்டான். பிறகு சாப்பாட்டை முடித்துக்கொண்டு தானும் இறந்தானும். கொலையாளியாகிய தனம் இவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்ததாம். எப்படி இருக்கிறது? ஆகையால்இதனுலெல்லாம் திருப்திஉண்டாகமாட்டாது.

இக்காயமே மாயம். இங்கிருக்கும் கொஞ்சகாலமும் பகவான் நம்மை எப்படி நடத்துகிறுனே அவன் ஆளுகைக்குள்பட்டு இருப்போமென்று உண்மையுடன் நம்பியிருந்தோமானல் நமது மனது திருப்தி அடையும். பகவானும் நம்மை ரக்ஷிப்பான். மனதை சலிக்கவிட்டால் திருப்தி என்பதைக் காணமுடியாது. திருப்தி என்னும் மரத்திற்கு பொறுமைதான் முக்கியமான வேர். ஓர் பெரிய மஹான் கூறியுள்ளார். பரப்ரும்மம் என்கிற ஈச்வரனுகிற தொழிலாளி ஜீவாத்மாவாகிற நம்மை உன்னத புஷ்பச்செடியின் கன்றுபோல் நினைத்து தனக்கு சேவகம் புரியும் தொழிலாகிற பூமியிலே நட்டு அச் செடியை பாபதோஷங்களாகிற பூச்சி கடியாமல் தனது கைங்கர்யமே போதுபோக்கென்கிற மடையைக்கட்டி விவேகமாகிற நீரைப் பாய்ச்சி அகங்காரமமகாரமாகிற களைப்பூண்டு முளைக்காமல் பகவத் விஷயமாகிற களைக்கொட்டாலே கொத்தி எடுத்து விபரீத புத்தி என்கின்ற திருட்டுமாடு நுழையாமல் சப்தாதி விஷயமாகிற நோய் அணுகாமல் சரணுகதி என்கிற பிரபன்னத்வமாகிற வேலியைக் கட்டி தன்னடியார் என்கிற அபிமானமாகிய மரத்தை வளரச் செய்து துளிர்த்து தழைத்து மொக்கும் பூவுமாக எடுத்துக் கட்டின மாலைதான் பரமேகாந்தி" என்றுர். அதேபோல் ரக்ஷகன் நம்மை ரக்ஷிக்காமல் விடமாட்டான். ரக்ஷித்தே தீருவான் என்று உறுதியான நம்பிக்கையுடன் இருந்தோமானல் அதுதான் பரம திருப்தி என்பது என்னுடைய நம்பிக்கை.

(உதாரணம்) பூனை குட்டிபோடுகிறது. குட்டியோ கண்ணைக் கூடத்திறக்கவில்லை. இக்கண்திறவாத குட்டி நமக்கு எதற்கு என்று நினையாமல் தன் உயிரையே அதன்மேல் வைத்து பகையாளியால் என்ன தீங்கு நேரிடுமோ என்று நினைத்து அக்குட்டியை வாயில் கவ்விச்சென்று பல மறைவிடங்களில் வைத்து பாதுகாத்துக் காப்பாற்றிவிடுகிறது. அதேபோல் ஈச்வரனுகிய தாய்ப்பூனை கண் விழியாமலிருக்கும் குட்டிப்பூனையாகிய நம்மை அநேக மறைவிடங்களிலிருந்து ரக்ஷித்தே தீருவான் என்ற தத்வத்தை உணர்ந்து சரணுகதி பண்ணிவிட்டிருந்தோமானல் மனத் திருப்தி உண்டாகுமென்பது திண்ணம். பிழை இருந்தால் மன்னிக்கவும்.

ஸ்ரீமதி. சீதாலக்ஷ்மி நாராயணன்

'கிடைத்தது போதும்' என்று எண்ணுவதுடன், மேன்மேலும் சம்பாதிக்கவேண்டும் என்று மனதில் உதிக்கும் பேராசையை யொழித்து உத்தமமான அறிவை நிலைநிற்கச் செய்வதுடன், தன் குலாசாரத்திற்கு ஏற்பட்ட தொழிலால் எது கிடைக்கின்றதோ அப்பொருளால் மனதைச் சந்தோஷப்படுத்திக்கொள்ளுவதே திருப்தியாம். திருப்தியடைவது என்பது எளிதல்ல; இது மிகவும் கடினமானது. நம்முடன் கூடப்பிறந்த மகா பாவியாகிய ஆசைதான் இதற்கு ஆதி காரணம். ஆகவேதான் புத்தபெருமான், 'ஆசையை யொழி; ஆசையேதான் பாவகாரியங்களுக்கு மூலம்,' என்றார்.

பொன்னின்பேரில் அன்பில்லாத பெண்ணும் உண்டா? என்றால் நாம் இல்லை என்று பதில் சொல்லவேண்டிதான் நேருகிறது. பெண்களில் அநேகர் பிறர் தூற்றுவார்களே என்று பிறருக்காக நடப்பது வழக்கம். அவர்கள் 'நகையில்லாமல் நின்றால் நகைப்பார்களே!' என்கிறார்கள். இப்படி முதலில் பிறருக்காகப் பயந்து, பயந்து நடக்க பின் அதனிடம் நமக்கே ஆசை உண்டாகிறது. ஆகவே பொன், மண் பின் எல்லாப் பொருள்களிடமும் நமக்கு அபிமானம் ஏற்பட்டுவிடுகிறது. இதேபோல் ஆடவர்பால் நிகழ்வதும் இயற்கை!

'டுக்ருங்' என்னும் வியாகரண சூத்திரத்தைப் பெரிதும் படித்த ஆத்மஞானமில்லாத ஒரு வித்வான் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரின் சிஷ்யர்களால் உபதேசிக்கப்பட்டபொழுது, சிஷ்யர்களில் ஒருவரான வார்த்திககாரர் என்பவர் கீழ்கண்டவாறு உபதேசித்தார்.

'எவனொருவன் காசி, ராமேசுவரம் முதலிய இடங்களுக்குத் தீர்த்தயாத்திரை போனாலும், தானம் முதலிய நற்கருமங்கள் செய்தாலும் ஞானமில்லாத பாமரன் நூறு ஜென்மமெடுத்தாலும் மோக்ஷத்தை அடையான்!

ஆகவே ஞான மேற்பட்டால்தான் மோக்ஷமடையமுடியும். ஞானமேற்படுவதற்குத் திருப்தி அவசியம்; அதுதான் ஆதி காரணம்என்று நான் கூறுகிறேன்.

எப்படி என்றால் ஒரு பொருளின்பேரில் நமக்கு அபிமானம் ஏற்பட்டால் ஒருக்காலும் நமக்குத் திருப்தி ஏற்படாது. சத்புருஷர்களுடைய சகவாசம் உண்டானால் அபிமானப்பற்று நீங்கும். அபிமானப்பற்று நீங்கினால் நிச்சயம் ஆசையொழியும். ஆசையொழிந்தால் நிர்மலமான ஞானப் பிராப்தி ஏற்படும் என்று கூறப்படுகிறது. 'போதும்' என்ற திருப்தி ஏற்பட்டது என்றால் ஆசையொழிந்ததாகிறது. ஆகவே திருப்திதான் ஞான பிராப்திக்கு ஆதிகாரணம் என்று கூறுவதில் என்ன தடை?

காலம், சிறு குழந்தைகள் விளையாடுவதுபோலச் செல்கின்றது. நம்மாயுள் குறைந்துகொண்டே போகின்றது. இவைகள் நமக்கு நன்கு தெரிகின்றன. இருந்தபோதிலும் காற்றுபோல உள்ள ஆசை மட்டும் யாரையும் விடுவதில்லை.

உலகில் எவ்வளவோ மதங்கள் உள்ளன. அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் கொள்கைகளில் வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால், 'ஆசைதான் பாவங்களுக்கு மூலம்; ஆகவே ஆசையொழி; கிடைத்ததைப்பெற்று திருப்திபடை' என்று கூறாத மதம் கிடையாது.

ஆகவே குழந்தைகளுக்கு பொருள்களின்பேரில் பற்றுவைக்க மனமில்லாமல் செய்யவேண்டியது அவசியம் என்று நான் எண்ணுகிறேன். நம் பெண்டிரில் சிலர், நாம் சிறு குழந்தைகளுக்கு நாளோ கிழமையோ செய்யுங்காலத்தில், 'குழந்தைக்குத் தங்கச் 'செயின்' பண்ணிப் போடடி' என்றும், 'நன்னாயிருக்கு ஒரே பொண்ணு, கஷ்டமோ, நிஷ்டூரமோ காதுக்கு 'டோலக்' பண்ணினால் போச்சு; உனக்கு உங்க அம்மா பண்ணவில்லையா? உன் பெண்ணுக்கு நீ கைக்கு ஒரு ஜோடி வளையலாவது பண்ணிப்போடேன்...' என்று சிறு குழந்தைகளுக்கு முன்னாலேயே பேசுவதனால் சிறுவயதிலேயே அவர்களுக்குப் பொன் முதலிய பொருள்களில் அபிமானம் ஏற்பட்டுவிடுகிறது.

ஒவ்வொன்றிற்கும் விதிவிலக்கு உண்டு. அதேமாதிரி திருப்திக்கும் விலக்கு உண்டு. அதாவது நாம் திருப்தியடையாமலிருக்க வேண்டிய சில விஷயங்கள் உண்டு.

நாம் பொருள் விஷயத்தில்தான் திருப்தியடையவேண்டும். மற்ற கல்வி, சிற்பம், ஓவியம் முதலிய கலைவிஷயத்திலும், பக்தி முதலான விஷயத்திலும் நாம் 'செய்தது போதும்' என்ற திருப்தியையடையக்கூடாது.

'நாம் கற்றதுபோதும்; நாம் இவ்வளவு சித்திரித்ததே போதுமானது; நாம் கடவுளைச் சிறிதுநேரம் போற்றினாலே போதுமானது' என்று நாம் சிந்திக்கவே கூடாது; இவ்விஷயங்களில் மட்டும் நாம் போதுமென்று திருப்தியைக் கொள்ளக்கூடாது. மேன்மேலும் கற்கவேண்டும்; கடவுளைத்தியானிக்கவேண்டும், கலையை வளர்க்க வேண்டும் என்ற ஆசை அவசியமானது; ஆசைமட்டுமிருந்தால் பிரயோஜனமில்லை; காரியத்திலும் காட்டவேண்டும்.

முடிவாக நான் கூறுவது இதுதான். ஆசையானது திருப்தியின் கொடிய விரோதி. இந்நாள்வரை இவர்களுள் பொருள் விஷயமாக ஏற்பட்ட போராட்டத்தில் ஆசைதான் மேம்பட்டுள்ளது; திருப்தி இப் போராட்டத்தில் வெற்றிபெறும் நன்னாள் என்நாளோ?

---

நாம் ஆரம்பித்துள்ள இப்புதிய அம்சம் ஆரம்பத்திலேயே மகத்தான வெற்றியையும் சந்தோஷத்தையும் பரமத்ருப்தியையும் கொடுத்துவிட்டது. ஏராளமான பெண்மணிகள் அன்புடனும் ஆற்றலுடனும் த்ருப்தி என்கிறகட்டுரையை அனுப்பியிருப்பதைக் கண்டு மனம் பூரிக்கின்றது. கட்டுரை எழுதியவர்களில் பெரும்பாலோர் எழுத்துலகில் புதிதாக ப்ரவேசித்தவர்களேயாவார்கள். வந்தகட்டுரைகளையெல்லாம் பரிசோதித்து மிகவும் த்ருப்தியளித்த நான்கை முறையே வெளியிட்டிருக்கிறோம்- ஏற்கெனவே அறிவித்தவாறு, பரிசுபெற்றவர்களுக்குப் பரிசுத்தொகைகளை மணியார்டரில் அனுப்பிவிட்டோம் இப்போட்டியில் கலந்துகொண்ட எல்லா சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன் பரிசு பெறாதவர்கள் சலிப்படையக்கூடாது. எழுத்துத்திறமை வீண்போகாது பயனையளிக்கும் என்கிற நம்பிக்கையுடன் மேன்மேலும் எழுதியனுப்பவும்

ஆசிரியை.

# விசித்திர விளக்கு

ஸ்ரீமான் பி. ஆர். ராஜசூடாமணி

எண்ணெய் இல்லை திரியில்லை
எரியுமந்த விளக்கு
கண்ணையெல்லாம் கவருகின்ற
காட்சி தரும் விளக்கு
விண்ணிலெங்கும் விரிந்துவரும்
வண்ணமழை தன்னில்
மின்னலெழு விசைகொடுக்கும்
மின்சார விளக்கு
காடுமலை வீடு நாடு
கூடுமிருள் போக்கும்
கடுகளவு கூவிச்சுக்குள்ளே
கட்டுப்பட்ட விளக்கு
கண்ணாடிப் பந்துக்குள்ளே
கம்பியிட்ட விளக்கு

விண்ணூடுபோல மண்ணை
விளங்கவைக்கும் விளக்கு
நாற்றிசையும் காற்றடித்தும்
நடுங்காத விளக்கு
ஏற்றுதற்கும் அணைப்பதற்கும்
எளிதான விளக்கு
அலைகடலின் அடியினிலே
அணையாத விளக்கு
நிலைகடந்த நெடுவானில்
நின்றெரியும் விளக்கு
தட்டுத்தடுமாறி முட்டித்
தலைஉடைக்கும் இருட்டில்
பட்டணத்தைப் பட்டப்பகல்
ஆக்கிவைக்கும் விளக்கு

ஸ்ரீமதி. தங்கம்மாள் பாரதி

# "உண்ணியின் தியாகம்"

ஓர் வழிப்போக்கன் ஒரு நாகமரத்தடியே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். உயரவிருந்து மேலே சடசடவென்று ஏதோ விழவும் வழிப்போக்கன் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தான். நாகப்பழக்கொட்டை விழுந்துகொண்டிருந்தது. "யார் அது கொட்டைபோடுவது?" என்றான். பதிலில்லை. ஆனால், கொட்டை விழுவது நிற்கவில்லை. மறுபடியும் கூப்பிட்டான். ஒருவரையும் காணோம். ஆச்சரியமேலிட்டவனாய், மரத்தில் ஏறிப் பார்த்தான். அங்கும் ஒருவரையும் காணோம். பின்பு ஒவ்வொரு இலையையும்கூட தடவித்தடவி ஆராய்ந்தான். ஒரு உண்ணி—சித்துண்ணி ஒட்டிக்கொண்டிருந்தது.

"ஓகோ! உன் வேலையா இது? பார் உன்னை என்ன செய்கிறேனென்று." என்று கூறிவிட்டு உண்ணியைப் பிடித்து அருகிலிருந்த சேற்றில் வீசி எறிந்து "சித்துண்ணி, சித்துண்ணி செத்தாயா" என்றான். "இல்லை. சேற்றில் உழுகிறேன்" என்றது.

அவன் கோபத்தோடு "அப்படியா? நல்லது" என்று கூறி அதை எடுத்து அருகிலுள்ள சிற்றோடையில் போட்டு "சித்துண்ணி, செத்தாயா!" இல்லை சின்ன வாய்க்காலில் கால் அலம்புகிறேன்."

'நல்லது' என்று கூறி தவக்கமில்லாமல் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் பெரிய வாய்க்காலில் விட்டெறிந்தான். "சித்துண்ணி செத்தாயா"... "இல்லை; பெரிய வாய்க்காலில் ஸ்நானம் செய்கிறேன்."

"ஊஹூம்! வா இப்படி." என்று வெயிலில் கொதிக்கும் மணலில் விட்டு, "சித்துண்ணி, செத்தாயா?" "இல்லை, ஜபம் செய்கிறேன்."

"என்ன துணிச்சல் உனக்கு?" என்று அருகிலிருந்த முள்ளில்போட்டு "சித்துண்ணி, செத்தயா"..."என்ன கேள்வி இது" சமித்து ஒடிக்கிறேன்.

"அடா போக்கிரி" என்று, நெருப்பு மூட்டி அதில் எறிந்தான். "சித்துண்ணி செத்தாயா" "இல்லை. அக்கிஹோத்ரம் செய்கிறேன்."

"ஆஹா! அக்கிஹோத்ரம், சமித்து ஒடிப்பு. நீ என்ன ராக்ஷஸனா? "சாக மாட்டேன் என்கிறாயே." என்று கூறி அடுப்பில் தோசைக்கல்லை காய வைத்து அதில் உண்ணியைப் போட்டு "சித்துண்ணி, செத்தாயா!"

"இல்லை; மனித உடம்பெடுத்த ராக்ஷஸா உன்மனம் இந்த தோசைக்கல் இரும்பைவிட உஷ்ணமானது. என்னை இவ்வளவு துன்புறுத்தியும் உனக்குத் திருப்தி ஏற்படவில்லையா? சகிப்புத்தன்மை என்பது உன் நெஞ்சத்தில் இடமே பெறவில்லையா? உனது சுய நலத்தை என்னென்று சொல்வது? அறியாமல் கொட்டை துப்பியதற்கு இத்தனைவித தண்டனை விதித்தாயே. அறிவற்றவனே! நீ தெரிந்து தெரிந்து தினந்தோறும் செய்யும் தப்பிதத்திற்கு அளவுண்டா? மூடா "என்னைக் கொல்ல உனக்கு என்ன அதிகாரம்? யார் கொடுத்தது? ஆத்மா அழிவற்றவன், நிரதன், சாச்வத மானவன், எங்குமிருப்பான், எப்பொழுதுமிருப்பான் ஸர்வ வியாபி. அவனைக் கொல்ல உன்னால்முடியுமா?

வழிப்போக்கன்—சித்துண்ணி! நீ சாகாமலிருக்கிறாயே என்ன அதிசயம்! அதோடு பெரிய பிரமநிஷ்டன்போல் பேசுகிறாயே. இத்தனை வேதாந்தமும், தத்துவமும் யார் உனக்குபதேசித்தார்கள்? சொல்லு.

"அடே மானிடா! எத்தனைதரம் சொல்லுவது! கடவுளுக்கு, ஜாதி, பிறப்பு, தராதரம் ஏது?"

"சித்துண்ணி! தெரியாமல் உன்னைக் கொடிய தண்டனைக்காளாக்கி விட்டேன். மன்னித்துக்கொள். எனது தூக்கத்திற்கு, நீ கொட்டை துப்பியது இடைஞ்சலாயிருந்தபடியால் இப்படிச் செய்தேன். நீ இன்று கூறிய மொழிகளை ஒருநாளும் மறக்கமாட்டேன். இனி நான் ஒரு சத்யாக்ரஹியாக இருக்கப் பாடுபடுவேன்.

சித்துண்ணி:—மானிடா! என் தியாகம் வீண் போகவில்லை. உன் துர்ப்புத்தி விலகிவிட்டது.

இவ்விதம் என் தாயார் ஒருநாள் கதை சொல்லிவரும்போது நான் "அப்பா! பொய்க்கதையானாலும் ரொம்ப நன்றாயிருக்கு. இல்லையா?

தந்தை:—ஆம், இந்த சித்துண்ணிக் கதையில் எத்தனையோ உண்மைகளிருக்கின்றன. எத்தனையோ உயர்ந்த லக்ஷ்யங்கள் இருக்கின்றன. நம் நாட்டில் ஒரு உயர்ந்த லக்ஷ்யத்தை ஒரு சிறு கதை மூலமாக தன் குழந்தைகளுக்குத் தாய்மார் சொல்வது வழக்கம். தனது பாலுடன், அறிவையும் சிறுகதைமூலமாகவும் சிறுசிறு வார்த்தைகளின்மூலமாகவும் குழந்தைகளுக்கு தமிழ்த் தாய்மார் ஊட்டுவதனால்தான் நம்மக்களுக்கு இத்தனை கஷ்டத்தினிடையேயும், இந்த அடிமை நிலையிலுங்கூட, உன்னதமான பரோபகாரமும்,தன்னல மறுப்பும், சிலரிடம்இப்போதும்காணப்படுகிறது.

"அப்பா! இந்தக் கதையின் உள் அர்த்தம் சொல்லவேண்டும்,"

கூறுகிறேன். முதலில் உண்ணியை எடுத்துக்கொள்வோம். அது மிகத் திடச் சித்தத்துடன் இருந்திருக்கிறது. தன்னை ஒருவன் சித்ரவதை செய்தும் அது அவனைப் பகைக்காமல், அவனுக்குப் புத்திகூறி நல்வழிப் படுத்தியது, சகிப்புத்தன்மை அதற்கு அபாரமாயிருந்திருக்கிறது. அதோடு ஒரு ஒழுங்கு, அதாவது நித்யகர்மத்தைத் தவறாமல் செய்யும் ஒழுங்கு. எப்படிப்பட்ட நிலையிலும் ஸ்நானபானம் பூஜை முதலியவற்றை முடக்காமல்செய்வது சாமான்ய விஷயமா? அதற்கு எத்தனை மன உறுதி வேண்டும்? திடசித்தமுடையவனை கஷ்டங்கள் ஒன்றும்செய்ய முடியாதென்று இந்தக் கதையினால் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளலாம்.

"ஸோமாஸ்"

# ரொக்கப் பரிசு

ரூபாய் என்றால் ஒன்று இரண்டா! ஐயாயிரம் ரூபாய்! அடே அப்பா! அதுவும் சரீரப் பிரயாசையில்லாமல் பணச் செலவும் இல்லாமல் கிடைக்கிறதென்றால் அதை யார்தான் உதாசீனம் செய்யமுடியும்?

ஐயாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசு என்று பத்திரிகையில் பார்த்ததும் சிம்மாசலத்தின் மனம் வேலைசெய்ய ஆரம்பித்தது. அந்த விளம்பரத்தைப் பலதடவை அவன் படித்தான், சிம்மாசலம் தன் மனத்தில் பல ஆகாயக் கோட்டைகள் கட்டி மகிழ்ச்சியடைபவனானாலும்—'மூன்று ரூபாய்க்கு 750 சாமான்கள், மோஹினி ரட்சை, பிறர் மனத்தையறியும் அற்புதச் சக்தி வாய்ந்த கைக்குட்டை, முதலிய அபஸ்மார விளம்பரங்களைக் கண்டு ஏமாந்துவிடுகிறவனல்ல. இருந்தாலும் இந்த ரொக்கப்பரிசு விளம்பரம் அவன் மனதைக் காந்தம்போல் கவர்ந்தது.

சிம்மாசலம் ஒரு கம்பெனியில் உதவி மானேஜர் வேலை பார்த்து வந்தான். பத்திரிகையில் அவன் கவனத்தை இழுத்த விளம்பரம் 'டர்பி' என்னும் ஆங்கிலப் பட்டணத்தில் நடைபெறும் குதிரைப் பந்தயத்தைப் பற்றியதுதான். குறிப்பிட்ட தேதியில் நடக்கப்போகும் குதிரைப்பந்தயத்தில், முதலாவது, இரண்டாவது, மூன்றாவதாக வரக்கூடிய குதிரைகளைப் பற்றி ஜோஸ்யம் சொல்லக்கூடியவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்படும் என்று அந்த விளம்பரத்தில் கண்டிருந்தது.

சிம்மாசலத்துக்கும் குதிரைப்பந்தயத்துக்கும் ரொம்பதூரம். குதிரையைப் பற்றியவரையில் அது ஒரு நாலுகால் பிராணி என்பது சிம்மாசலத்துக்கு நிச்சயமாய்த் தெரியும்! ஆனால் "ஐயாயிரம் ரூபாய் என்றால் லேசா? நாம் எந்த ஜென்மத்தில் மொத்தமாக ஐயாயிரம் ரூபாயைப் பார்க்கப் போகிறோம்? என்னவோ அதிர்ஷ்டம் இருந்தால் வருகிறது. ஒரு 'சான்ஸ்' பார்ப்போமே!" என்று எண்ணத் தொடங்கினான். ஐயாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசு அவன் மனக்குதிரையில் ஏறியமர்ந்து சவாரிசெய்யத் தொடங்கியது. இதற்காக அவன் செய்யவேண்டிய வேலை அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. பத்திரிகையில் காணப்பட்ட ஒரு கூப்பனில் மூன்று குதிரைகளின் பெயரையும் பூர்த்திசெய்து அத்துடன் எட்டணா ஸ்டாம்பு வைத்து அனுப்பிவிடவேண்டியது—இவ்வளவுதான். ஹோட்டலில் எட்டணா 'டிபன்' சாப்பிட்டதாக நினைத்துக்கொண்டால் போகிறது!

சிம்மாசலம் நான்கைந்து பத்திரிகைகளை வாங்கி 'டர்பி' பந்தயத்தில் ஜயிக்கக்கூடிய குதிரைகளைப் பற்றிய விவரங்களைப் படித்தான். தினந்தோறும் இரவில் வெகுநேரம்வரையில இந்தச் சர்ச்சைதான். ஆனால் அவைகளைப்பற்றிப் படிக்கப் படிக்க அவன் மனம் குழம்ப ஆரம்பித்து விட்டது. விஷயம் ஒன்றுமே விளங்கவில்லை.

இந்தத் தீவிர குதிரைப்பந்தய ஆராய்ச்சிக்குப் பிறகு சிம்மாசலம் வந்த முடிவு, எல்லாக் குதிரைகளும் ஜயிக்கும் என்பதுதான். இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தவும் அவனுக்குப் பயம். ஒரே விஷயத்தைக் குறித்து அகோராத்ரம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தால் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று அவன் பயந்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

சிம்மாசலம் குதிரைப்பந்தய விஷயமாகத் துருவித்துருவி ஆராய்ச்சி செய்த பத்திரிகைகளைத் தான் ஏறிவந்த டிராம் வண்டியிலேயே வைத்துவிட்டுச் சென்றான். டிராம் வண்டியில் மறந்துவைத்த சாமான் தன்னைத்

திரும்பிவந்து தொந்தரவுபடுத்தாது என்பதில் அவனுக்குச் சொந்த அநுபவமிருந்தது.

வீட்டுக்கு வந்து குதிரைகளின் பெயர்களைத் துண்டுக் காகிதங்களில் எழுதி மடித்து குலுக்கிப்போட்டான். ஏதோ கைக்கு அகப்பட்ட மூன்று சீட்டுகளை எடுத்துக்கொண்டான். அதில் எழுதப்பட்டிருந்த பெயர்களைப் பத்திரிகைக் கூபனில் பூர்த்திசெய்தான்,

ரூபாய் விஷயத்தில் பிறரை நம்பமுடியுமா? ஐயாயிரம் ரூபாய் என்றால் சும்மாதானா? பணவிஷயத்தில் பிறரை நம்பி மோசம் போகக் கூடிய முட்டாளல்ல சிம்மாசலம்! அந்தக் கூப்பனைக் கவரில் வைத்துத் தன் கையினாலேயே விலாசம் எழுதினான்; தானே தபாலாபீஸுக்குச் சென்று தபால் பெட்டியில் கடிதத்தைப் போட்டான். கடிதம் பெட்டிக் குள் போய்ச் சேர்ந்துவிட்டதா என்று பெட்டிக்குள் கையைவிட்டும் பார்த்தான். அவனது துரதிர்ஷ்டத்தில் அவனுக்கிருந்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம்.

மறுநாள் சிம்மாசலம் ஆபீஸுக்குச் சென்றதும் ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு ஞாபகமாகவே இருந்தது, ஆபீஸ் ரிகார்டுகளிலெல்லாம் குதிரை ஓடுவதுபோலிருந்தது. நல்ல வேளை! இந்தப் பரிசு விஷயத்தில், மேல் இருந்து கீழ்;இடமிருந்து வலம்:முதலிய சங்கடங்களெல்லாம் இல்லை, அந்தச் சங்கடங்கள் இருந்திருந்தால் ரொம்பத் தவித்திருப்பான்.

கம்பெனியின் சொந்தக்காரரான மார்த்தாண்டம் பிள்ளை, உடனே தம்மை வந்து பாக்கும்படியாக ஒரு பையனிடம் சொல்லி யனுப்பினார். அவர் ஏதோ ஒரு முக்கிய விஷய்மாகத் தன்னுடன் பேச விரும்புகிறார் என்பதை யறிந்ததும் அவன் மனத்தில் பல சந்தேகங்கள் கிளம்பி ஒன்றோ டொன்று மோதின.

"என்ன மிஸ்டர் சிம்மாசலம், உங்களுக்குக் குதிரைப் பந்தயம் பிடிப் பதில்லையா?" என்று அவர் கேட்டதும் அவன் திடுக்கிட்டான்.

சிம்மாசலம் பயந்ததற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. மார்த் தாண்டம் பிள்ளை மிகவும் கண்டிப்பான பேர்வழி. குதிரைப் பந்தயம் என்ற பேச்சைக் கேட்டாலே நெற்றிக் கண்ணைத் திறப்பார், தான் 'டர்பி' பந்தயத்துக்குக் கூப்பன் பூர்த்தி செய்து அனுப்பியது அவருக்குத் தெரிந்துவிட்டதோ என்றெண்ணி சிம்மாசலம் நடுங்கினான்.

ஆனால் இந்த பயம் அதிக நாழிகை நீடித்திருக்கவில்லை. மார்த்தாண் டம் பிள்ளை, மானேஜர் கிருஷ்ணசாமி நாயுடுவைப்பற்றிப் பேச்செடுக்கிற வரையில்தானிருந்தது.

கிருஷ்ணசாமி நாயுடு குதிரைப் பந்தயத்தில் தனியாக மோகம் கொண் டிருந்தார். குதிரைப் பந்தயத்தில் அவர் செலவழித்த தொகையைக் கொண்டு இரண்டு மூன்று பங்களாக்கள் கட்டியிருக்கலாம். அவர் அமோக மாகக் கடன் வாங்கிக் குதிரைப் பந்தயத்துடன் பந்தயம் போட்டபடியினால் கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல வகையின்றி அக்ஞாதவாசம் செய்து வருகிறார்-இந்த வரலாறுகளை யெல்லாம் விரிவாகக் கூறிய மார்த்தாண்டம் பிள்ளை, கடைசியாக, கிருஷ்ணசாமி நாயுடுவைத் தாம் வேலையைவிட்டு விலக்கப் போவதாகவும், சிம்மாசலத்துக்கு அந்தப் பதவி கிடைக்கக்கூடும் என்னும் பொருள் தொனிக்கப் பேசினார்.

'டர்பி' பந்தயப் போட்டியில் ஐயாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு தனக்கே கிடைக்கவேண்டுமென்னும் அவா சிம்மாசலத்துக்கு இப்பொழுது போய்விட்டது, பரிசு தனக்குக் கிடைக்கக் கூடாதென்று சதாகாலமும் பகவானை நோக்கி வேண்ட ஆரம்பித்தான். ஏனென்றால் குதிரைப் பந்த

யத்தில் சிம்மாசலம் கலந்து கொண்டிருக்கிறனென்பது மார்த்தாண்டம் பிள்ளைக்குத் தெரிந்தால் அவனுக்கு மானேஜர் பதவி கிடைப்பது குதிரைக் கொம்புதான் என்பது அவனுக்கு நன்ருய்த்தெரியும். ரொக்கப் பரிசு தனக்குக் கிடைத்தால் தன் பெயர் பத்திரிகையில் வெளியாகும். மார்த்தாண்டம் பிள்ளை பத்திரிகைகளை ஒருபக்கம்கூட விடாமல் படிப்பவராதலால் அது அவர் கண்ணில் தென்பட்டுவிடும். இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒன்றும் தோன்றவில்லை. * * *

சிம்மாசலம் பத்திரிகையை ஆவலோடு பிரித்துப் பார்த்தான். அவன் மனத்தில் இடி விழுந்ததுபோல் இருந்தது. அவன் கூப்பனில் பூர்த்திசெய்திருந்த குதிரைகளே ஜயித்திருந்தன. சரிதான் அடுத்த நாள் பத்திரிகையில் தன் பெயர் வெளியாகும்; மார்த்தாண்டம் பிள்ளை அதைப் பார்த்துவிடுவார் என்று தீர்மானித்துவிட்டான்,

சிம்மாசலம் உடனே அந்தப் பத்திரிகாலயத்துக்குப் போய் தன் பெயரை வெளியிடக் கூடாதென்று ரொம்பவும் கேட்டும், ஆசிரியர், அது பத்திரிகை தர்மத்துக்கே விரோதமென்று கூறி மறுத்துவிட்டார்.

மறு நாளும் மார்த்தாண்டம் பிள்ளை சிம்மாசலத்தினிடம் குதிரைப் பந்தயத்தின் தீமைகளைப்பற்றி விவரமாய்க் கூறிக்கொண்டிருந்தார். சிம்மாசலத்தின் முகம் பேயடித்ததுபோல் விகாரமடைந்துவிட்டது. அன்றுமாலைப் பத்திரிகையில் பந்தயத்தில் வெற்றிபெற்றவர்களின் ஜாபிதாவில் தன் பெயர் வெளியாகிவிடுமே என்று அவன் தவியாய்த் தவித்தான். மார்த்தாண்டம் பிள்ளைக்கு அன்றைய தினம் பத்திரிகை வரவொட்டாமற் செய்துவிடலாமா என்ற அசட்டுத்தனமான எண்ணம்கூட அவன் மனதில் தலை காட்டியது.

சிம்மாசலத்தின் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது மாலையும் வந்தது ; பத்திரிகையும் வந்தது. பத்திரிகையைப் பிரித்தபோது அவன் கைகள் நடுங்கின. தான் ஆவலுடன் விரும்பிய விஷயத்தைப் பார்த்ததும், "ஆ, கடவுளே, தப்பினேன் !" என்று ஒரு பெரு மூச்சுடன் வாய்விட்டுக் கூறினன்.

முதல் நாள் வெளியான விஷயம் தவறென்றும் வேறு மூன்று குதிரைகள் ஜயித்துவிட்டன-என்றும் பத்திரிகையில் 'ஒரு திருத்தம்' வெளியிட்டிருந்தது. அந்தப் பரிசு தனக்குக் கிடைக்காமற் போனதில் சிம்மாசலத்துக்கு உண்டான மகிழ்ச்சியை இவ்வளவென்று கூறமுடியாது.

தான் வேலை பார்க்கும் கம்பெனியின் பெயரைப் பார்த்ததும்அவன் தலை சுற்றியது. உடனே கண்ணைத் துடைத்துக்கொண்டு ஒருதடவைக்கு இருதடவையாகப் பார்த்தான். அவன் கண்களையே அவன் நம்பவில்லை, அக்ஷரம் அக்ஷரமாகப் பார்த்தான். ஆம்; சந்தேகமில்லை, அதில் காணப்பட்ட விஷயம் "விசுவா கம்பெனியின் டைரக்டர் மார்த்தாண்டம் பிள்ளைக்கு ரொக்கப் பரிசு ரூபாய் ஐயாயிரம் விழுந்திருக்கிறது"-என்பது தான். இதைப் படித்ததும் சிம்மாசலத்துக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. மார்த்தாண்டம் பிள்ளை குதிரைப் பந்தயத்தில் துவேஷமுள்ளவரா இல்லையா என்பது இப்பொழுது அவனுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கும்-என்பதில் சந்தேகம் என்ன இருக்கிறது ?

---

## சந்தாநேயர்கள் அவசியம் கவனிக்கவும்

1. உங்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் 28-ந் தேதிக்குள் தெரிவிக்கவும்.

2. இந்தியாவிலுள்ளவருக்கு 10 தேதிக்குப் பிறகும், ஸிலோனிலுள்ளவர்களுக்கு 15-தேதிக்குப் பிறகும் சஞ்சிகை கிடைக்காவிடில் உடனே எழுதவும் அடுத்த இதழ் வந்தபிறகு எழுதினல் இனமாக அனுப்பமுடியாது.

## சிங்கப்பெருமாள்கோவில்

# ஸ்ரீபாடலாத்ரி நரஸிம்ஹர் அஷ்டச்லோகி

4. சிந்தயேநிசமுந்நஸம்நிடிலேக்ஷணம் விவ்ருதாநநம்
சித்ரபானுமயூகஸந்நிப கேஸரௌக விராஜிதம்
பீஷணம்புததோஷணம் வரபூஷணம்கரதம்ஷ்ட்ரிணம்
யோகஸம்ச்ரிதமம்புஜாச்ரித வக்ஷஸம்ந்ருஹரிம்விபும்

உந்நஸம் —உயர்ந்த மூக்கையுடையவரும்
நிடிலேக்ஷணம் —நெற்றியில் கண்ணையுடையவரும்
விவ்ருதாநநம் —திறந்த வாயுடையவரும்
சித்ரபானு மயூகஸந்நிபகேஸரௌகவிராஜிதம் } சூரியனுடைய கிரணம் போன்ற பிடரிக் குவியலால் விளங்குகிறவராயும்
பீஷணம் —பயங்கரமாயிருப்பவரும்
புததோஷணம் —தேவர்களை ஸந்தோஷப்படுத்துகிறவரும்
வரபூஷணம் —சிறந்த ஆபரணங்களுடையவரும்
கரதம்ஷ்ட்ரிணம் —கூரான கோறைப் பற்களையுடையவரும்
யோகஸம்ச்ரிதம் —யோகாஸனத்தில் வீற்றிருப்பவரும்
அம்புஜாச்ரித வக்ஷஸம் } ஸ்ரீ மகாலக்ஷ்மியால் ஆச்ரயிக்கப்பட்ட திருமார்பை யுடையவருமான
ந்ருஹரிம்ப்ரபும் —ஸ்ரீ நரஸிம்மஸ்வாமியை
அநிசம் சிந்தயே —எப்பொழுதும் தியானிக்கிறேன்

தேவரீர் நெற்றியில் கண்ணுடனும் கோரப்பற்களோடு திருவாயை திறந்துகொண்டு நரஸிம்ம ரூபமாய்ப் பயங்கரமாயிருப்பினும் திருமார்பில் அகலகில்லே னென்று வீற்றிருக்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மியைக் கொண்டு தைரியமாய் எப்பொழுதும் தேவரை தியானிக்கிறோம் என்று கருத்து,

5. சிந்தையே ஸததம் ஸுராரிஹமாகமாந்த ஸமுஜ்வலம்
காரணம் ஜகதாம் பரம் சசிபாஸுரம் கநகாம்பரம்
த்யேயமாத்ய முரஸ்தலோல்லஸ ஸதிந்திரம் ச்ரிதகந்தரம்
சங்க சக்ரகதாதரம் நரகாந்தகம் ந்ருஹரிம் விபும்

ஸுராரிஹம்—தேவர்களின் விரோதிகளை நாசம்செய்கிறவரும்
ஆகமாந்தஸமுஜ்வலம் { வேதாந்தங்களில்(உபநிஷத்துக்களில்) விளங்குகிறவரும்
ஜகதாம் காரணம்—உலகத்திற்கெல்லாம் காரணமாயும்
பரம்—எல்லாவற்றிற்கும் மேற்பட்டவரும்
சசிபாஸுரம்—சந்திரன்போல் பிரகாசிப்பவரும்
கநகாம்பரம் { பொன்போன்ற (நல்ல தங்கம்போல் மஞ்சநிற மான) வஸ்திரமுடையவரும்
த்யேயமாத்யம் { தியானிக்கத்தக்கவரும் எல்லாவற்றிற்கும் முதல்வரும் (அல்லது எல்லாத்திற்கும் முதல் வரென்று தியானிக்கத்தக்கவரும்
உரஸ்தலோல்லஸதிந்திரம் { திருமார்பில் பிரகாசிக்கும் ஸ்ரீமகாலக்ஷ்மியை யுடையவரும்

ஸ்ரீமான் வி. ஜி. ஸ்ரீனிவாசன் B.A., L.T.,

# ஸ்ரீ தியாகராஜர் புகழ்

துறவின் இறையே! தியாக ராசனே!
துறவிக் கரசன் துரும்பெனக் கொண்டாய்!
மண்ணின் மீது மாந்தர் வாழ்வும்
பண்ணுல் பண்புறும் என்பது கண்டு
கீதந் தன்னை நீதமாய்ப் பயின்று
நாதந் தன்னில் நாதனை நண்ணினுய்
நாவின் நலமாம் பாவின் மலரால்
மாயன் தனக்கு மாலை புனைந்தாய்
"பக்தி பண்ணிக் கொண்டே யிருந்தால்
முக்தி பெறலாம் உண்மை" என்றே
எத்திசை யோர்க்கும் எடுத்துக் கூறி
எடுத்துக் காட்டாய் எடுத்துக் காட்டினுய்!
பற்பல பாக்கள் சொற்பொலி வோடு
கற்றோர் மற்றோர் கனிந்து கரைய
தேனெனத் தெளிந்த தெலுங்கிற் தெளித்த
பான்மை புகலும் தாமோ அறியோம்!
உந்தன் உயர்ந்த நந்தாப் பாடலில்
அன்பும் அருளும் இன்பும் எழிலும்
அளவிற் கலந்துரு வாகிய அமைவு
அளப்பற் கரிதே! அளப்பற் கரிதே!
நாதமுள் ளளவும், கீதமுள் ளளவும்
பாவுள் ளளவும், பாருள் ளளவும்
மேவிடு முன்புகழ் மேதினி மீதே!

---

ச்ரிதகந்தரம் { அடையப்பட்ட குகையையுடையவரும் (குகையில் இருப்பவரும் என்று கருத்து)

சங்கசக்ரகதாதரம்—சங்கு சக்ரம் கதை இவைகளை தரிப்பவரும்

நரகாந்தகம்—நரகாஸுரனை நாசம்செய்தவருமான

ந்ருஹரிம்விபும்—ஸ்ரீ நரஸிம்மஸ்வாமினை

ஸததம் சிந்தயே—எப்பொழுதும் தியானிக்கிறேன்.

உபநிஷத்துக்களில் தியானிக்கவேண்டியதாகச் சொல்லப்பட்ட ஜகத்காரணமான பரம்பொருள் தேவரென்று தேவர் திருமார்பில் விளங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மியால் தெரிந்துகொண்டோம். எங்கள் விரோதிகளை நாசம்செய்ய தேவருக்கு ஆயுதங்களும் அனுபவமுமிருப்பதால் தேவரையே ஸதா தியானிக்கிறோமென்று கருத்து.

# கடவுளைத் தண்டித்த கடவுள்

"டும் ! டும் ! டும் ! கலெக்டர் வராரு ! கலெக்டர் வராரு நம்மூருக்கு ! பத்தாந்தேதி வராரு ! குப்பை கூளங்களில்லாமல் அவுங்க அவுங்க வூடு வாசலைச் சுத்தமாக வச்சிருங்கோ ! இல்லாட்டி அபராதம் போடுவாரு!"— என்று ஒருநாள் தமுக்கடித்தான் வெட்டியான் திங்களூர் வீதியில்.

தமுக்கு முழக்கம் கேட்டதும் திங்களூர்க் குடிகள் தங்கள் தங்கள் வீடு வாசல்களைச் சுத்தம் செய்வதில் கருத்துடையவராயினர்.

திங்களூரின் வடக்கில் விசாலமான குன்றைப் போலுயர்ந்ததும் சுமார் ஒரு கல் சதுரப் பரப்பிற்குப் பரந்தகன்ற சம வெளியை யுடையதுமாகிய ஒருவனப் பிரதேசம். அதன் ஒரு பக்கத்துச் சரிவில் திங்களூர்ப் பக்கமாய் ஒரு பெரிய ஏரி. திங்களூர்க்குக் கிழக்கில் ஒரு அழகியகுன்று; அதன்மேல் ஒரு சிவன்கோவில் ; மேற்கில் வாழைத் தோட்டம், நெல்வயல், கரும்புக்கொல்லை, தென்னந்தோப்பு இவற்றுடன் கூடிய விஸ்தாரமான வயல் வெளிப்பிரதேசம் இவையன்றி ஊருக்குள்ளே யும் சுற்றுப்புறங்களிலும் காவேரி பல கால்கொண்டு ஓடிப்பாயும் காட்சி யின் விநோதமுண்டு.

இதனால் அப்பக்கங்களில் திங்களூரே அழகிய ஊராய் விளங்கியது. அன்றியும் திங்களூரில் மக்களைப் பிடிக்கும் நோய்களெதுவும் தலைகாட்டுவ தில்லை. நோய்வாய்ப்பட்டவர் திங்களூரில் வந்து சில மாதகாலம் வசித்தாற் போதும். எந்த நோயும் பகலவன் முன் பனிபோல் நீங்கும். தவிர தேள் நண்டுத்தெருக்கால் முதலிய விஷ ஜந்துக்கள் அந்த ஊரில் தென்படுவ தில்லை. ஆகவே அவைகளால் நேரக்கூடிய உபத்திரவமுமில்லை. இப்படிப் பட்ட மகிமை அவ்வூருக்குண்டு,

திங்களூரின் வடக்கெல்லையில் ஒரு பிடாரிகோயில். அந்தப் பிடா ரிக்குத் தேள் மாலையுண்டு. அந்த தேவதையினுடைய மகிமையினாலேயே அவ்வூரில் விஷ ஜந்துக்கள் தென்படுவதில்லையென்று அவ்வூரிலே நாளைக் கும் அவ்வூரார் கூறுகின்றனர் ; நோய் நொடியில்லாததற்கும் அந்த தேவ தையின் மகிமையே காரணமாகக் கூறுவர் ; போதிய சுகாதார வசதி கள் அமைந்திருப்பதைக் காரணமாக ஒப்புக்கொள்வதில்லை.

கிராம தேவதையிடம் திங்களூர்க் குடிகளுக்கு அவ்வளவு திடமான பக்தியுண்டு. அதனால் அவர்கள் தாங்கள் தொடங்கும் எந்தக் காரியத்தை யும் அந்த தேவதையின் ஸந்நிதியில் உடுக்கடிப்பித்துக் கேட்பது. பூக்கட்டி வைத்துப் பார்ப்பது, பல்லி சொல்லக் கேட்பது என்கிற வழக்கங்களைப் பின்பற்றி அவ்வுத்தரவின்படி செய்வார்கள்; உத்தரவு கிடைத்தாலன்றி எதையும் செய்யத் துணியமாட்டார்கள்.

பத்தாந்தேதி வந்தது. திங்களூர்த் தெருக்களெல்லாம் சுத்தம் செய்யப் பட்டுக் குறைகூற இடமில்லாமல் பாராட்டத்தக்க அழகுடன் விளங்குகின் றன. இவ்வூரில் ஒரு அழகிய சர்க்கார் சாவடியுண்டு. இதன் முன் இரண்டு ஏகர் விஸ்தீரணமுடைய ஒரு பெரிய சதுக்கமுண்டு. இதில் ஏககாலத்தில் ஐந்நூறுபேர் கூட்டங்கூடிப் பேசத்தக்கபடி ஓங்கி வளர்ந்த ஓர் பெரிய ஆலமரமுண்டு. அதனைச்சுற்றி கற்கட்டு மேடையுமுண்டு.

கலெக்டரை வரவேற்க இந்தச் சாவடி இன்று தோரணங்களாலும் வாழை கமுகுகள் கட்டிய பந்தலால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இன்று காலையில் இவ்வூர் கர்ணம் முனிஸீப் இவர்களையல்லாமல் ஊர்

மிராசுதார்களிற் பலரும் கலெக்டரை வரவேற்க வந்து காத்துக்கொண்டிருக்கின்றனர். குடிகளில் பலர் வேடிக்கைபார்க்கக் கூடியிருக்கின்றனர்.

இத்தகைய அதிஅற்புதக்காட்சியாய் விளங்கும் இந்தச் சாவடியின் முன் ஒரு பக்கத்தில் ஒருவனைக் குட்டைமரத்தில் மாட்டியிருக்கிறது. அவன் கண்ணீர் விடுகிறான். இத்தக் காட்சியை பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. "இவன் நேற்றிரவு ஆச்சிமுத்துப் படையாச்சிவீட்டிலே திருடினானும். இதனால் இவனைக் குட்டைமரத்தில் மாட்டியிருக்கிறார்கள்" என்று அக் கூட்டத்தில் சிலர் பேசிக்கொள்கின்றனர்.

இவ்வாறிருக்கையில் "இதோ கலெக்டர்! இதோ கலெக்டர் குதிரையில்" என்ற ஆரவாரமுண்டாயிற்று. தலையாறி, வெட்டியான் முதலியவர்களைக்கொண்டு அவ்வாரவாரத்தை அடக்கிவிட்டுக் கலெக்டரை வரவேற்க ஆயத்தமானார் முனிஸிப். பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கலெக்டர் வந்துவிட்டார். வரவேற்பு உபசரணை ஆடம்பரமாக நடந்தது. பின் சிற்றுண்டிருந்திச் சிரமபரிகாரம் செய்துகொண்டார், அப்பால் ஆலமரத்தடியில் கச்சேரி ஆரம்பமாயிற்று. கச்சேரி நடக்கையில் குட்டைமரத்து மனிதன்—"எசமானே! எசமானே! அடியேன் நிரபராதி! என்னைக் காப்பாத்தணும் எசமானே!" என்று ஓலமிட்டான். முனிஸிப் அவனை அதட்டி அடக்கினார்.

கலெக்டர், முனிஸிபைத் தடுத்து, "இவன் என்ன செய்தான்? ஏனிந்தத் தண்டனை இவனுக்கு?" என்று கேட்டார்.

"இவன் நேற்றிரவு ஒருவீட்டிலே திருடிவிட்டான், திருடனை இப்படிக் குட்டைமரத்தில் மாட்டிவைத்துப் போலீஸுக்கு அனுப்பவேண்டிய அவச்யமிருந்தால் அனுப்புவது வழக்கம்! இல்லாவிட்டால் இங்கேயே குற்றத்துக்குத் தக்கபடி தண்டிப்பது வழக்கம்" என்றார் முனிஸிப்.


"இவன் திருடினது உண்மைதானா? ருசு உமக்கென்னகிடைத்தது?" என்றுகேட்டார் கலெக்டர்.

முனிஸிப், "இவன்மேல் பலர் சந்தேகங்கொண்டனர். அதனால் இவனைக் கொண்டுவந்து நயத்திலும் பயத்திலும் விசாரணை நடத்தினேன். இவனிடமிருந்து உண்மை தெரிந்துகொள்ளமுடியவில்லை. பிறகு பஞ்சாயத்தாருடைய தீர்மானப்படி இவ்வூர்ப் பிடாரிகோவில் ஸந்நிதியில் உடுக்கடிப்பித்துக் கேட்டோம். இவன் திருடன் என்று வாக்குப்பிறந்தது. அதன்மேல் இவன் தண்டனைக்குரிய குற்றவாளியெனத் தீர்மானித்துக் குட்டைமரத்தில் போட்டோம்" என்றார்.

"ஓகோ! இது ஒரு வழியா நியாயங் கண்டுபிடிக்க? சர்க்கார் சட்டம் இதை ஒப்புக்கொள்ளுமா? இது சரியான ருசுவாகுமா? இப்போது இவன் நிரபராதியென்று ருசுவாய்விட்டால் உம்மையும் இந்த மனிதனைத் திருடனென்று சொன்ன அந்தக் கடவுளையும் என்னசெய்வது? தண்டிக்கத்தானே வேண்டும்?"—என்று கேட்டார் கலெக்டர்.

"ஆம்" என்று கூறி ஆந்தையைப்போல் விழித்தார் முனிஸிப்.

"என்னங்காணும் ஆம். என்கிறீர்? எந்த மடையன் இந்த வழியை ஒப்புக்கொள்வான்? பஞ்சாயத்தார் சொன்னால் உமக்கு மதியெங்கே போச்சு? சரியான ருசுவின்றி ஒருவனை இம்சைக்குள்ளாக்கிய நீர் இந்த வேலைக்குத் தகுதியுடையவரல்ல. இதோ இதைப் பாரும்"—என்று தமது சட்டைப்பையிலிருந்து சில நகைகளையெடுத்து மேஜையின்மேல் வைத்து "இவை யாருடைய நகைகள்?"—என்று கேட்டார்.



"திருட்டுப்போன நகைகளில் அடங்கியவைகளே இவைகளும்"— என்று ஆச்சரியத்துடனும் பயத்துடனும் கூறி எண்சாணுடம்பும் ஒரு சாணுடம்பாய்க் குறுக அசையாமல் நின்றார் முனிஸீப்.

"ஓய் ஏங்காணும் விழிக்கிறீர்? தடையம் யாரிடமிருக்கிறதோ அவன் திருடனாகமாட்டானா?" என்றார் கலெக்டர்.

முனிஸீப் மௌனமாயிருந்தார்.

"ஏங்காணும்? ஏன் மௌனம்! யார் திருடன்? நான்தானே என்னைத்தானே தண்டிக்கவேண்டும்? தடையமிருந்தாற் போதுமா? என்னை எப்படி தண்டிப்பதற்காகும்? விசாரணை வேண்டுமல்லவா? விசாரணை செய்யும். இந்த நகை உம்மிடம் எப்படி வந்ததென்று கேளும்"—என்று உறுமினார் கலெக்டர்.

சிங்கத்தின்முன் சிந்துரமானார் முனிஸிப். பேச வாயெழவில்லை. பிரமித்தபடி விழிக்கிறார்.

"ஏன் விழிக்கிறீர்? என்னை விசாரணை செய்யும்?"—என்று மறுபடி உறுமிவிட்டுக் "குதிரை காஸ்தாரியைக் கூப்பிடும்"—என்றார்.

"இதோ ஆஜர்"—என்று எதிரில் வந்து நின்றான் காஸ்தாரி.

"இந்த நகைகள் நமக்கு எப்படி கிடைத்தது? சொல்லு"—என்றார்.

"நாங்கள் வரும் வழியிலே எழுவாண்டியம்மன் கோவில் மேட்டிலே புளியந்தோப்புக்கு மேற்கே பனங்காட்டுக்குப் போகும் குறுக்கு வழியிலே

செங்குத்துப் பாறைக்கு முன்னே கிடந்தது. ஐயா கண்டு என்னை எடுக்கச் சொன்னார். எடுத்துக்கொடுத்தேன்"—என்றான் காஸ்தாரி.

இதைக்கேட்டதும் எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். குட்டை மரப் பேர்வழியின் முகத்தில் ஜீவகளை தோன்றியது. இப்போது அவ்வூர்க் காவற்காரர் இருவர் இரண்டு திருடருடன் அங்கே வந்து சேர்ந்தனர்: "இவர்கள்தான் திருடர்கள்! குட்டை மரத்திலே போடப்பட்டிருக்கும் மாணிக்கம் திருடனல்ல"—என்றார்கள்.

திங்களூரில் ஓர் அதிசயமான ஏற்பாடுண்டு. அந்த ஊரில் சேர்வை காரர் என்று சிலர் இருக்கின்றனர். அவர்களுக்கு அவ்வூர் மிராசு தாரர் காணிக்கு இவ்வளவு என்கிற வீதம் வருஷந்தோறும் அறுவடை காலத்தில் நெல் கொடுத்து விடுவார்கள். சேர்வைகாரர் அந்த ஊரில் எந்தவிதமான திருட்டும் நடவாமல் ஊர்க்காவல் புரிவார்கள். திருட்டு நடந்துவிட்டால் திருடனைப் பிடித்து ஒப்புவிப்பார்கள். இல்லாவிட்டால் திருட்டில் ஏற்படும் நஷ்டத்தைக் கொடுத்துவிடுவார்கள், இந்த ஏற்பாட்டின்படி சேர்வைகாரர் இப்போது திருடனைக் கண்டு பிடித்தார்கள்.

விவகாரம் இப்படியாகவே முனிஸீப் ஆலோசனையற்ற தம்முடைய புத்தியைச் செருப்பிட்டுப் புடைத்துக் கொண்டார்; மாணிக்கத்தைக் குட்டை மரத்திலிருந்து விடுவித்தார்; மாணிக்கம் கலெக்டருக்கு வந்தனம் செய்து நின்றார். கலெக்டர் உண்மைத் திருடர்களை விசாரித்தார். திருடியதாக அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்; கலெக்டர் நகைகளைக் கண்டு எடுத்த இடத்தில் தாங்கள் திருட்டுப்பொருள்களைப் பிரித்துக்கொண்டதாகவும்சொன்னார்கள். ஆகவே கலெக்டர் தாம்கண்டெடுத்த நகைகள் திருடர்களிடமிருந்து அவர்களுக்குத் தெரியாமல் விடுபட்டவைகளெனத் தெரிந்து கொண்டார்; ஏனையரும் தெரிந்துகொண்டனர்.

அப்பால் கலெக்டர் தீர விசாரியாமல் ஒரு நிரபாரதியைத் திருடனென்று குட்டை மரத்தில் மாட்டி அவமானப்படுத்தியதற்காக முனிஸீபை ஆறுமாதம் வேலையினின்று நீக்கினர். உடுக்கடிப்பித்ததன்மூலம் பொய் சொன்ன கடவுளுக்கு ஆறுமாதம் சிறைவாச தண்டனை விதித்தார். அதற்கடையாளமாகக் கடவுளுக்குக் கேழ்வரகு களி நிவேதனம் செய்யும்படி திட்டப்படுத்தினார். இந்தத் தீர்மானப்படி கடவுளுக்கு நிவேதனம் படைக்கப்பட்டதென்பதற் கடையாளமாக மாதமொரு முறை அந்த ஸந்நிதியில் களி நிவேதனம் இன்றும் நடந்து வருகிறது.

இந்தக் கதையை என் தந்தை எனக்குச் சொன்னார். அவ்வூரிற் பெரியார் பலர் இக்கதை சொல்வதுண்டு. இத்தகைய மூட வழக்கத்தைக் கண்டிக்க நேரிடுகிற காலத்தில் இதனை உதாரணமாகக் கூறுவதுண்டு அவ்வூரார்.

---

## இங்கிலீஷ் முதல்தேதியன்று

எல்லா சந்தாதேயர்களுக்கும் ஒன்றாகத்தான் சஞ்சிகையை அனுப்புகிறோம். எந்த காரணத்தினாலாவது கிடைக்காவிடில் 29-ம் பக்கத்தில் குறிப்பிட்டபடி எழுதவும்.

புதிய விலாசத்தைத் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறிவிடில் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல. 6 அணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் திரும்பவும் அனுப்பமுடியும்.

உங்களது சந்தா ஆண்டு முடிவுவரை இல்லாவிடில் பாக்கியை உடனே அனுப்பினால்தான் சஞ்சிகையை தொடர்ச்சியாகப் பெறுவீர்களென்பதைக் கவனிக்கவும்.

ஸ்ரீமதி K. பாகீரதி அம்மாள்

# இதய தாபம்

டாக்டர் தங்கம் எம். பி. பி. எஸ். ஒருமுறை பெருமூச்சுவிட்டு சில விநாடிகள் எதிரிலிருந்த கடியாரத்தை அர்த்தமில்லாமல் நோக்கினாள். பின்பு அறையை ஒருமுறை கண்ணோட்டம் விட்டாள். என்னமோ நினைத்துக்கொண்டே காரியதரிசியை "மிஸ்டர் ராமு" என்று கூப்பிட்டாள்.

'ஏன் கூப்பிட்டீர்கள்?' என்று ராமு வந்தான்.


தங்கம் பதில் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக மறுமுறை ஒரு பெருமூச்சு வெளிவந்தது. அவளுடைய கண்களில் ஒருவித ஏக்கத்தின் சாயை தெரிந்தது: சிறிது நேரம் மேஜையின்பேரில் கிடந்த பிளாட்டிங் பேப்பரை—அதில் ஏசுநாதர் படம் போட்டிருந்தது—வெறித்து நோக்கினாள். அந்த படம் நாகரீகத்தின் பரிபவத்தைப் பரிகஸிப்பதுபோல் தோன்றியது. நாகரீகத்தின் சிகரத்தில்தான் அவள் இருந்தாள்.

ராமு எதிரே சிறிது நேரம் நின்றான். தங்கம் பேசுவாள் என்று எர்தி பார்த்து ஏமாந்தான். அவளோ தன் பயித்தியக்காரச் செயலை நிறுத்தவில்லை...'எதற்காக அழைத்தீர்கள்?' என்றான் ராமு. அவனுடைய பார்வை அந்த பைத்தியத்தை ஊடுருவிப் பார்த்தது.

திடுக்கிட்ட தங்கம் ராமுவின் முகத்தை உற்று நோக்கினாள். அவளுடைய கண்கள் நீரை வர்ஷித்தன; அவள் தன் கண்களை துடைத்துக்கொண்டு "இப்படி உட்காருங்கள்" என்றாள்.

ராமு வந்து மாதம் ஒன்று ஆகியது. அதுவரை அவளிடமிருந்து இம்மாதிரியான அழைப்பைக் கேட்டதே இல்லை. ஆனால் யஜமானி காரியதரிசி என்ற பேதமில்லாமல் நடந்துகொண்டாள். ராமுவுக்கு ஆச்சர்யம் துயரம் இரண்டும் ஏககாலத்தில் உண்டாயின. அவன் உட்கார்ந்தான். ஏதோ சொல்ல வாயெடுத்தாள் தங்கம். ஆனால் அதே சமயம் தங்க விக்ரகம்போன்ற ஒரு குழந்தையுடன் ஒரு யுவதி உள்ளே பிரவேசித்தாள். அவளுடைய கணவன்போன்ற ஒரு யுவன் அறைக்கு வெளியே நின்றிருந்தான். உள்ளே நுழைந்த யுவதி அன்னிய புருஷன் இருப்பது கண்டு தலைகுனிந்தபடியே நின்றாள். அவளுக்கு சுமார் இருபது பிராயம் இருக்கும். கணவனும் மனைவியும் மிகவும் அன்பும் ஒற்றுமையும் உள்ளவர்கள் என்பது அவர்களுடைய முகமண்டலத்தில் தெரிந்தது. அவள் ஸ்மார்த்த ஸ்த்ரீ போல் மாம்பழக்கட்டு கட்டிக்கொண்டு நெற்றியில் குங்குமம் கழுத்தில் மாங்கல்ய சரடு முதலிய குறிகளுடன் குடும்பத்துப் பெண்போல் தோன்றினாள். அவள் மிருதுவான குரலில் 'தன் குழந்தையின் வியாதியை விவரித்துக்கொண்டிருந்தாள்.

தங்கம் குழந்தை, தாய் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள், அவளுடைய ஹிருதயம் என்னமோ செய்தது. அவளுடைய கருவிழிகளில் நீர் தேங்கியது. வைத்யம் செய்துகொள்ளவந்த குடும்பத்தினர் அவளுக்கு ஏதோ எண்ணங்களைக் கிளப்பிவிட்டனர். அவளுடைய தலை சுற்றியது. அறையில் உள்ள மேஜை நாற்காலி, அறை, பீரோ எல்லாம் சுற்றிவதுபோல் காணப்பட்டது. வந்த யுவதி டாக்டரின் பரிதாபநிலையை கண்டு 'கூ' என்று கூச்சலிட்டாள். ஆனால் அந்த ஒலி அடங்குமுன் டாக்டர் தங்கம் தன்னுடைய பிரக்ஞையை இழந்து கீழே சாய்ந்தாள். ஒரே நிமிடத்தில் ராமு பாய்ந்து அவளைத் தாங்கிக்கொண்டான்.



28 JUN 1944

'தங்கம் கண்விழித்தபோது படுக்கையில் படுத்திருந்தாள். பக்கத்தில் ராமு நின்றிருந்தான். தங்கம் கையை அசைத்து ராமுவைக் கூப்பிட்டாள். ராமு அருகில் சென்று அவளுடைய வாயில் 'குலுகோஸ்' தண்ணீரை ஊற்றினான். ராமு சற்றும் எதிர்பாராதவிதமாக அவனுடைய கைகளை தங்கம் பிடித்துக்கொண்டு தன்னருகில் உட்காரவேண்டினாள். ராமு திடுக்கிட்டான்; எனினும் அவன் அவளுடைய அருகில் அமர்ந்தான்.

* * * *

மிஸ்டர் அண்டு மிஸஸ் ராமநாதன் அவர்கள் இருவரும் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்களே. மிஸ்டர் ராமநாதன் தன்னுடைய தொழிலின் நிமித்தம் ஒரிஸாவில் வஸித்துவந்தார். மேற்படி நாகரீக தம்பதிகளின் புத்ரிதான் மிஸ் தங்கம். தங்கம் நல்ல அழகி. பெற்றோருக்கு அவள் ஒரே பெண், ஆகவே செல்வமாக அவள் இஷ்டம்போல் வளர்ந்துவந்தாள், தங்கம் கவலையில்லாமல் III பாரம் படித்துக்கொண்டிருந்தபோதுதான் அந்த பயங்கரமான விஷயம் நடந்தது.

காலையில் இயற்கை அமைதியுடன் இருந்தது. எங்கும் ஜில்லென்று காற்று வீசியது. காபி சாப்பிட்டுவிட்டு தங்கம் பள்ளிக்கூடம் கிளம்பினாள். நடுத் தெருவில் போய்க்கொண்டிருந்தபோது ஒரு பயங்கரமான சப்தம் எழுந்தது. ஏதோ ஒன்று அவளை கீழே தள்ளிற்று. அவளை மாத்திரமல்ல வீதியில் போவோரை எல்லாம்தான், எதிரே இருந்த ஒரு பெரிய தென்னை

வேரோடு கீழே விழுந்தது. அதன் அடியில் இருந்த ஒரு குடிசை மரத்திற்கு முன்னடியே கீழே சாய்ந்து மண்ணைக் கவ்விற்று. இதற்கு மத்தியில் அவள் மயங்கிக் கிடந்தாள். தங்கம் கண் விழித்தபோது தன்னருகில் கட்டிடங்கள் இடித்து கிடப்பதைக் கண்டாள். பூகம்பம்! அதனுடைய லீலைதான் இது. தங்கம் தன் வீட்டை நோக்கி ஓடினள். அங்கு அவள் கண்ட காட்சி அவளை மயக்கமுறச்செய்தது. ஆமாம். அவளுடைய வீடு இடிந்து கிடந்தது. ஸேவாசங்கத்தினர் கட்டிடத்தின் அடியில் அகப்பட்டோருக்கு மீட்சி தந்து கொண்டிருந்தனர். ஆனல் அவர்களுடைய உதவியை மிஸஸ் அண்டு மிஸ்டர் ராமனதன் எதிர்பார்க்காமல் சென்றுவிட்டனர். தங்கம் இந்த உலகில் அனதையானள்.

இதற்குப் பின் நடந்தவைகள் மிகவும் பரிதாபக்ரமான விஷயங்கள், கொஞ்சநாள்வரை தங்கம் தாய் தந்தையரை எண்ணி அழுதுப்புலம்பினள். பிறகு மனம் தேறி தன் காரியங்களைக் கவனிக்கலானள். அவளுக்கு பிழைக்கவும் வழியில்லாதிருந்தது. ஹெட்மிஸ்டரஸ் அம்மாளிடம் உதவிபெறலாம என்று போனள். ஆனல், அந்த அம்மாள் காலையிழந்து தன் ஊரான நாகர் கோவிலுக்குச் சென்றிருந்தாள். தங்கத்திற்கு தூரபந்துக்கள் கிடையாது. இப்படி அனதரவான நிலையை அடைந்ததும் அவள் அடைந்த துக்கம் அளவிட முடியாது.

நல்லவேளையாக அன்று பத்திரிகையில் 'சமையல்காரி தேவை' என்று ஒரு விளம்பரம் வந்திருந்தது, விலாசதாரரைத் தேடிக்கொண்டு பக்கத்தில் இருந்த 'ஷோடசியூர்' நோக்கி நடந்துசென்ருள். சமையல்காரியாக வேண்டிய விதியை நொந்துகொண்டாள் தங்கம். ஆனலும் என்ன செய்யமுடியும்? விதியை யாராலும் மாற்ற முடியாதே! அவள் செய்த புண்ணியமோ என்னமோ பகவான் அவளுக்கு மேன்மேலும் துயரங்களை அளிக்க விரும்பவில்லை!

மூன்று தினங்கள் அன்ன ஆகாரம் இல்லாமல் வழி நடந்ததின் பயனகக் களைப்பு உண்டாயிற்று. தள்ளாடியபடியே ஒரு ஊரையடைந்தாள். ஒரு பள்ளிக்கூடத்தின் வாயிலில் அவள் மூர்ச்சையோடு விழுந்தாள்.

படுக்கையில் கிடந்தாள் தங்கம். விழித்துக்கொண்ட அவள் தன்னருகில் தூய ஆடையுடன் ஒரு தாடிவைத்த பாதிரியாரைக் கண்டாள். அந்த அறையில் சாமியாரையும் பெரிய ஏசுநாதரையும் தவிர யாரும் இல்லை. முதலில் தங்கம் பயந்தாள். பிறகு அவருடைய அன்பும் ஆதரவுமான மொழிகளால் சமாதானமடைந்தாள். அவர் அவளைப்பற்றி விசாரித்தார். தங்கம் தன்னைப்பற்றி ஒளியாது எல்லா விபரமும் கூறினள். தன்னிடம் இப்படி அன்புகாட்டுபவரும் இருக்கிருரா? இவரால் எப்படியும் பிழைக்கலாம் என்று அவள் எண்ணி அவரிடம் சகலமும் கூறினள். சிறிதுநேரம் கழித்து பாதிரியார் பின்வருமாறு கூறினர்.

"குழந்தாய்! உன் சரிதத்தைக்கேட்டு நான் வருந்துகிறேன். ஆனல் உன்போல எத்தனையோ பெண்கள் அவதியுறுகின்றனர். நானும் என்னல் இயன்றவரை இங்கே வந்தோரை ஆதரிக்கிறேன். நீ பயப்படாதே; தந்தை உன்னைக் காப்பார்! நீ எங்கும் செல்லவேண்டாம். இங்கேயே இருந்துகொண்டு மேலே படி" என்ருர் அவர்.

மேலும் அவர் கிருஸ்துவப் பள்ளிக்கூடத்தில் சம்பளமில்லாமல் தங்கம் படிக்கும்படிச் செய்தார். பள்ளிக்கூடத்தில் தங்கம் வாசித்துக் கொண்டிருந்தபோது அவளுடைய மனது பெரிதும் மாறுதலடைந்தது. பூகம்பத்தில் தான் அதிகமாக கஷ்டப்பட்டபோது உதவாத ஈவிரக்கமற்ற

ஜன சமூகத்தையும் இங்கே மாணவிகளின் அன்பு உறவையும் எண்ணி எண்ணி அவளுடைய உள்ளம் பாகாய் உருகியது. அதன் பயனுக அவளுக்கு கிருஸ்துவ மதத்தில் பற்றுதல் விழுந்தது. சில நாட்கள்தான் கஷ்டப்பட்டது. மறுபடியும் கவலேயில்லாமல் சுகவாழ்வும் பழையபடி கிடைக்கவே அவளுடைய வாலிப உள்ளம் குதூகலித்தது. பள்ளிக்கூடத்தில் உள்ள நங்கையர்கள்போல் அவளும் நவநாகரீகத்தில் மூழ்கினுள்.

மேன்மேலும் படித்து அவள் டாக்டர் பரிக்ஷையில் தேறினுள். அப்படி படித்துக்கொண்டிருந்தபோதுதான் அவளுடைய நாகரீகம் உச்ச நிலேயை அடைந்தது. தலேயை 'பாப்' செய்துகொண்டாள். கைகளில் இருந்த வளேயல்கள் அநாகரீகம் என்று ஒதுக்கப்பட்டன. கழுத்தில் மெல்லிய சங்கிலி ஒன்றுதான் பாதிரி மிரியலின் கட்டாயத்தில் இருந்தது. நெற்றியில் இருந்த குங்குமம் நிரந்தரமாக விடைபெற்றுக்கொண்டது. ஹிந்துபெண் யாராவது அவளேப் பார்த்தால் அவள் ஒரு கைம்பெண் என்றுதான் கூறுவாள்; அத்தகைய நிலேயில் இருந்தாள் மிஸ் தங்கம் எம்.பி.பி.எஸ். அவளுக்கு தமிழ்நாட்டு ஸ்திரீகளின் 18 முழம் புடவையும் தலேயும் அநாகரீகமாகத் தோன்றின. அவள் மேல்நாட்டு நாகரீகத்தையே பெரிதும் மதித்தாள். தங்கம் இப்பொழுது 32 வயது நிரம்பியிருந்தாள். இயற்கையிலேயே அழகியான அவள் மேல்நாட்டு நாகரீகம் செய்துகொண்டதும் அவளுடைய அழகு குன்றித் தோன்றினுள். அவளே எந்த வாலிபனும் ஏறிட்டுப் பார்க்கவில்லே. சாதாரண நம்முடைய இயற்கையழகுடன் இருந்திருந்தால் இதற்குள் எத்தனேயோ வாலிபர்கள் அவளுடைய பாதத்தில் விழுந்துகிடப்பார்கள். அவளுடைய இதயத்திலும் அந்த ஏக்கம் சிறிது இருந்தது. ஆனுல் நாகரீகம் அதை அமுக்கிவிட்டது. அவள் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லே. அதைப்பற்றியே நினேக்கவுமில்லே, யாரும் அக்கரை எடுத்துக்கொண்டு செய்யவில்லே. ஆனுலும் அவளுடைய யுக்த வயது அடிக்கடி பெருமூச்சையும் ஏக்கத்தையும் உண்டாக்கியது.

இந்த நிலேயில்தான் அவளே தஞ்சாவூருக்கருகிலுள்ள கிராமத்துக்கு மாற்றினுர்கள். ஒண்டியாக தனி பங்களாவில் சமையல்காரன், காரியதரிசி, வேலேக்காரன் ஆகியவர்களுடன் வஸித்துவந்தாள்.

பட்டண வாஸத்தைவிட்டு கிராமிய ஜனங்களின் மத்தியில் வந்ததும் அவளுடைய இதயம் வேதனேயுறத் தொடங்கியது. ஏக்கமும் பெரியதாகியது. தன்னுடைய வரவுசெலவு வீட்டு வேலேகளே மேற்பார்ப்பது முதலியவைகளே அவளால் செய்ய முடியாமல் போனதினுல் காரியதரிசி ராமுவை ஏற்படுத்திக்கொண்டாள், ராமு என்கிற ராமசந்திரன் ஒரு எஸ். எஸ், எல். ஸி. கம்ப்ளீட்டர். எல்லோருக்கும் ஏற்பட்ட வேலேயில்லாத் திண்டாட்டம் அவனேயும் பாதித்தது. நல்ல அழகன். புத்திசாலி, அவனுடைய அதிர்ஷ்டம் தங்கத்திடம் அவனே வேலே செய்ய வைத்தது. முதன்முதலாக தங்கத்தைப் பார்த்தபிறகு அந்த அழகிய யுவதியின் 'பாப்' தலேயைக் காண சகிக்காமல் தலேயை வேறுபுறம் திருப்பிக்கொண்டான். பிறகு பார்க்க பிரியப்படவில்லே. எனினும் அவளுடைய மதிமுகமும் 'அருகரு' என்ற கண்களும் அந்த வாலிபனின் இதயத்தை என்னமோ செய்தன.

டாக்டர் தங்கம் ராமசந்திரனேக் கண்டதும் ஏதோ ஒருவித பாசம் கொண்டாள். இப்படிப்பட்ட நிலேயில்தான் ஒருநாள் திடீரென்று அவள் மனம் என்னமோ செய்து அவளே ஒரு பயித்தியத்தின் செயலேச்செய்யும்

படிச் செய்தது. அவளுக்கே அவளுடைய செயல்கள் பயத்தைக் கொடுத்த படியால், ராமுவைக் கூப்பிட்டாள். அவனைக் கண்டதும் அவளுடைய இதயதாபம் பீறிட்டுக்கொண்டுவந்தது. பின்னும் அவளுடைய மனதைக் கிளறுவதுபோல் அந்த தம்பதிகள் தோன்றினார்கள். அவள் இருந்தநிலையில் அந்த பெண்ணின் சாதாரண நாகரீகம் அவளை குத்திக்காட்டுவதுபோல் தோன்றியது. ஒரு நிமிடத்தில் தன் வாழ்க்கை புளித்துப்போயிற்று. தன் நாகரீகம் அநாகரீகம் என்று புலனாயிற்று.

‘‘அந்த தம்பதிகளின் ஆனந்தம் எனக்கில்லாது போயிற்றே! எதற்காக இந்த நாகரீகவாழ்வை மேற்கொண்டோம். இப்படி செய்ய யாராவது கட்டாயப்படுத்தினரா! இல்லையே! என் தலையில்நானே மண்ணை போட்டுக் கொண்டேன்! பேசாமல் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்துவிட்டு மிரியலின் உதவியுடன் ஒரு வாலிபரை மணந்து வாழலாம். என்னே என் வாழ்வு.’’ என்று மனம் வெதும்பினாள். கண்கள் நீரை வர்ஷிக்கின்றன. இந்நிலைவிட்டு உயிரே போய்விடாதா என்று நினைத்தாள். அடக்கப்பட்டுக் கிடந்த தாபம் எழுச்சியடைந்து இதயத்தை வாட்டிற்று, அந்த யுவதியை காணக்காண அவள் தலை சுற்றியது.


* * * *

ராமசந்திரன் மிகவும் வருத்தப்பட்டான். மாதங்கள் இரண்டு ஓடின, வழக்கப்படி ‘பாப்’ செய்யும் நாவிதன் மூன்று முறைவந்து பார்த்துவிட்டு நிரந்தரமாக லீவு வாங்கிக்கொண்டான். டாக்டர் தங்கம் தன்னுடைய வாழ்வில் பெரிய மாறுதலை யடைந்தாள். அவளுடைய கேசம் முழங்கால்வரை வளர்ந்தது. இந்திய—தமிழ்—ஸ்திரீகளைப்போல் புடவையணிந்துகொண்டு மங்களகரமான குங்குமம் நெற்றியில் பிரகாசிக்க ஸௌந்தர்யவதியாக தோன்றினாள்.

‘தங்கம்’ என்று கூப்பிட்டான் ராமச்சந்திரன், ‘என்ன? எதற்காக கூப்பிட்டீர்கள்!’ ‘‘என்றாள் மிஸஸ் ராமச்சந்திரன் எம்.பி.பி.எஸ். (அலயஸ் தங்கம் எம்.பி.பி.எஸ்.)

ராமச்சந்திரன் தன் உயிர்த் துணைவிக்கு எதிரே தங்களுக்காக தயாராகும் டிஸ்பென்ஸரியை மகிழ்வுடன் காண்பித்தான்.

---



தன் மனைவி டெலிபோனில் தன்னைக் கூப்பிடுகிறாள் என்றதும் கணவன் நடுங்கிப்போய், ‘‘ஹல்லோ ! என்ன ! என்ன !’’ என்று பதறியவாறு கேட்டான்.

‘‘ஒன்றுமில்லை இன்று நான் டிப்பன் செய்யவில்லை. மத்தியானம் வரும்போது ப்ளாஸ்கில் காப்பியும் நிறைய டிபனும் வாங்கிண்டு வாருங்கோ !’’.

விருச்சிகம்

குமாரி ஸ்ரீமதி

# என் கட்டுரை

ஜனவரிமாதம் முதல்வாரம். நான் என் வேலைக்காரனைக் கூப்பிட்டு "இந்தவாரம் வெளியான, ஜனவினோதினி ஆண்டுமலரும், மனோல்லாசினி, ஆண்டுமலரும் வாரப்பத்திரிகைகளும் வாங்கிவா" என்று சொல்லி அவனிடம் பணத்தைக்கொடுத்தேன். அவன் சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு கட்டு புஸ்தகங்களுடன் காட்சியளித்தான்.

நான் அவைகளைப் படித்துப் பார்க்கையில் "ஜனவினோதினி" ஆண்டுமலரில் கல்கத்தாவிலிருந்த என் தங்கை ஒரு கதை எழுதியிருந்தாள். அதைப்பார்த்ததும் நான் திகைப்படைந்தேன். ஏனென்றால் என் தங்கைக்கு இவ்விடத்திலிருக்கும்போதே தமிழ் சரியாக தெரியாது. கல்கத்தாவிற்குச் சென்றதில் கொஞ்சநஞ்சம் தமிழும் மறந்துபோய்விட்டிருக்கும். அப்படிப்பட்டவளே எழுதுகையில் "தமிழை நிறையப்படித்து தமிழ்நாட்டிலேயே இருக்கிற நானும் ஏன் ஒரு கதை எழுதக் கூடாது!" என்று தோன்றிற்று. உடனே எழுதவேண்டுமென்று தீர்மானித்தேன்.

சற்றுநேரத்திற்குள் நான் எப்போதும் நிதானமாகச் செய்யும் சமையலை வெகு பரபரப்புடன் முடித்து யந்திரம்போல் என் புருஷருக்குப் பரிமாறினேன். அவர் ஆச்சரியத்தால் ஒன்றுமே பேசாமல் சாப்பிட்டுவிட்டு ஆபீஸிற்குச் சென்றார். நான் என் காரியங்களை மிக்க அவசரத்துடன் முடித்து எழுத உட்கார்ந்தேன்.

அப்போதுதான் "என்ன எழுதுவது, எப்படி எழுதுவது? என்று தெரிந்து கொண்டுதான் கட்டுரை எழுதவேண்டும்" என்கிற யோசனை என் மனதில் உதித்தது. அதற்குள் குழந்தை 'வீல்' என்று கத்த ஆரம்பித்தாள். அவளைத் தூங்கவைக்கலாமென்றால் லேசில் வாயை மூடுகிறாளா? அப்போது அவள் அழுவதில் தன் சாமர்த்தியமனைத்தையும் ஒருமணிநேரம் காண்பித்துச் சற்று ஓய்ந்தாள்.

அதற்குள் கோடிவீட்டு கோமளம் அவ்விடம் வந்தாள். அவளுக்கு,, ரேடியோ" என்று நாங்களெல்லோரும் பேர் வைத்திருக்கிறோம் (ஏனென்றால் அவள்மிகவும் மெதுவாகப் பேசுவள்) அவள் ஏதோதோ இரைச்சல் போட்டுக்கொண்டு இருந்தாள். நான் ஒன்றையும் கவனிக்கவேயில்லை. பிறகு பிரம்மப்பிரயத்தினம் செய்து அவளைச் சற்று அடக்கி "கோமளம்! நான் ஒரு கதைஎழுதலாமென்றிருக்கிறேன்; ஒரு யோசனைசொல்லேன்!" என்றேன்.

அதைக்கேட்டதும் அவள் "கதையாவது; மண்ணாங்கட்டியாவது! நம்முடைய கதையேதான் பெரிய கதையாகயிருக்கிறதே" என்று சொல்லிப் பின்னும் சிறிது காலம் இருந்துவிட்டுச் சென்றாள். மறுபடியும் யோசித்து யோசித்துப் பார்த்தேன். யோசனை தோன்றினால்தானே! இவ்வாறாகவே அன்று கழிந்தது.

மறுநாள் காலையில் என் புருஷர் ஏதோ ஆபீஸ் வேலையாக வேலூருக்குச் சென்றார். அவர் சென்றதும் என் வேலைகளை முடித்

துக்கொண்டு எழுதுவதற்கு உட்கார்ந்தேன். அப்போது எதிர்வீட்டு எச்சுமி என் முன்பு காட்சியளித்தாள். அவளைக் கண்டதும் "சிவ பூஜை வேளையிலே கரடி நுழைந்தாற்போல இந்தச் சனியன் இப்போது என்னத்திற்கு இங்கு வந்தது?" என்று என் மனதில் நினைத்தேனாயினும் அதை வெளிக்காட்டாமல் "வாருங்கோ! ஏது அபூர்வமான வருகை" என்றேன். (உண்மையில் அவள் முந்தா நாள்தான் வந்திருக்கிறாள்)

அதைக் கேட்டதும் அவள் "என்னமோ போ! வீட்டில் எப்போ பார்த்தாலும் வேலைதான் ஒரு நிமிஷம்கூட ஒழிவில்லை. இப்போதும் ஐந்து நிமிஷங்களுக்குமேல் இவ்விடத்தில் தங்க முடியுமா?" என்றாள்.

நான் அதைக் கேட்டதும் திகைப்படைந்தேன். (ஏனென்றால் ஐந்து நிமிஷங்கள் என்பது அவளுக்கு 'ஐந்து மணி நேரம்) பின்பு சமாளித்துக்கொண்டு "நான் ஒரு கதை எழுதலாமென்றிருக்கிறேன். ஒரு யோசனை சொல்லுங்கோ!" என்றேன். அதைக் கேட்டதும் அவள் "பேஷ்! நீயா கதை எழுதப்போகிறாய்? அதெல்லாம் முடியாத காரியம். வீணாக மனக்கோட்டைகள் கட்டாதே. கதை எழுதுகிறது என்பது எல்லோருக்கும் வராது. அதற்குத் தனி மூளை வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே மூளையைப் பற்றி பெரிதொரு பிரசங்கம் செய்ததைக்கேட்டதும் என் மூளை கொதிப்பெடுத்துக்கொண்டது. கடைசியில் பகீரதப் பிரயத்தனஞ் செய்து அவளை அரைமணி நேரத்திற்குள் அனுப்பினேன்.

அனுப்பிவிட்டு 'சூடாக காப்பி சாப்பிட்டால் மூளைக்கு சுறுசுறுப்பு ஏற்படும்' என்று தினம் நான் சாப்பிடுகிற அளவைக் காட்டிலும் கொஞ்சம் ஜாஸ்தியாகவே குடித்தேன். ஆயினும் என்ன பயன்! எனக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. கற்பனா சக்தியும் உதயமாகவில்லை.

சற்று நேரத்திற்கெல்லாம் என் தங்கையின் சிநேகிதையும் என்னுடைய சினேகிதையுமான பங்கஜம் வந்தாள்: (அவள் எப்போதும் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசுவாள்.) அப்போதும் "ஹலோ! கமலா, சௌக்யமா! உன்னுடைய பேபி (baby) எங்கே? உன் (sister)கல்கத்தாவில்தானே லிவ் (live) பண்ணுகிறாள்?"என்றாள்.

நான் "அவள் கல்கத்தாவில்தானிருக்கிறாள். அவள் தமிழில் ஒரு கதை எழுதியிருக்கிறாள்" என்றேன். அவள் "தமிழிலே ஸ்டோரீஸ் (stories) எழுதுகிறாளா? உன் ஸிஸ்டர்(sister)போல் நீயும் எழுதுகிறதுதானே! ட்ரை (try) பண்ணிக்கொண்டேயிருந்தால் கட்டாயம் எழுதமுடியும்" என்று சொல்லி எனது ஆவலை இன்னும் அதிகமாக்கிச்சென்றாள்.

மறுநாள் காலையில் எழுந்து யோசிப்பதற்கு ஆரம்பித்தேன். அதற்குள் ஒரு ஜட்காவந்து வாசலில் நின்றது. "யார் வருகிறார்கள்?" என்று போய்ப்பார்த்தேன். ஜட்காவிலிருந்து எனது நாத்தனாரும் அவளுடைய கணவரும் மூன்று பெண்களும் இறங்கிவந்தனர்.

என் நாத்தனர் "அவரை இந்த ஊருக்கு மாற்றிவிட்டார்கள். வீடு அகப்படும்வரை இங்குதான் இருக்கப்போகிறோம்" என்றார். வெகு நாளாக மாற்றாமலிருந்த என் நாத்தனர் கணவரை இவ்வூருக்கு மாற்றச்செய்த எனது கட்டுரையின் மகிமையை எவ்வாறெடுத்துரைப்பேன்! அவர்கள் வந்ததிலிருந்து மூச்சுவிடக்கூட நேரமில்லை அவர்களுக்கு உபசாரம் செய்வதிலேயே என்னுடைய நேரம் முழுவதும் செலவழிந்தது. அவர்கள் வந்து இருபது நாட்களாகின்றன. இதுவரை நான் என் கட்டுரையைப்பற்றி நினைக்கவேயில்லை. ஒருவழியாக அவர்களுக்கு வீடு அகப்பட்டு அவர்களும் போய்ச்சேர்ந்ததும் நான் என் புருஷரை நோக்கி "கட்டுரை எழுதுவதென்றால் ரொம்ப கஷ்டமோ?" என்றேன். அதைக் கேட்டதும் அவர் "கஷ்டமோ சுலபமோ? அதைப்பற்றி நமக்காவதென்ன?" என்றார். நான் "ஒருகதை எழுதலாமென்றிருக்கிறேன். ஒரு யோசனை சொல்லுங்கள்" என்றதும் "பேஷ்! கதையா எழுதப்போகிறாய்! அது ஒன்றுதான் பாக்கி. செய்யவேண்டியகாரியங்களைச்செய்யக்காணோம். கதை எழுதுகிறாளாம் கதை" என்று கோபித்து ஆபீஸிற்குச் சென்றார்.

எனக்கு "யாரை யோசனை கேட்டு கதை எழுதுவது" என்கிற யோசனை உண்டானதும் மதுரையிலிருக்கும் என் தமையன் ஞாபகம் வந்தது. அவன் ஒரு வக்கீல். அவன் மிகவும் நல்ல கதைகள், நாடகங்கள் முதலியவைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதி, பெரும் புகழடைந்தவன். உடனே எனக்கு அங்கு செல்லவேண்டும்போலிருந்தது. சாயந்திரம் என் கணவர் வருவதற்குள் சாமான்களையெல்லாம் தயாராகக்கட்டிவைத்தேன்.


அவர் மூட்டைகளையெல்லாம் பார்த்துவிட்டு "எங்கே பிரயாணம்? மூட்டையெல்லாம் தயாராகக் கட்டிவைத்திருக்கிறதே!" என்றார். நான் "மதுரையிலிருக்கும் என் தமையன் வீட்டிற்குப் போய் ஒரு வாரம் இருந்துவிட்டு வருகிறேன்" என்றேன். அவர் "குசாலாகப் போய்வா" என்று உத்தரவளித்தார். ரயிலில் கும்பல் அதிகமாக இருந்ததாலும், வெகு விரைவினில் பிரசுரிக்கும்படியான கட்டுரைக்கு நான் என் அண்ணாவிடம் யோசனை கேட்டு எழுதவேண்டும் என்கிற எண்ணத்தினாலும் இரவு முழுவதும் நான் தூங்கவேயில்லை. காலையில் மதுரை சேர்ந்ததும் ஒரு வாடகை வண்டியில் என் தமையன் வீட்டை அடைந்தேன். அவன் என்னைப் பார்த்ததும் "என்ன கமலா? கடிதம்கூடப் போடாமல் வந்துவிட்டாயே! உடம்பு சரியில்லையா" என்றான். நான் "உடம்பு சரியாகத்தானிருக்கிறது. மனம்தான் நல்ல கட்டுரை எழுதி பிரஸித்தமாகவேண்டும் என்று துடிக்கிறது" என்றேன். அவன் 'உன்னை பிரஸித்தமாக்ச் செயவது என் கடமை. நீ கவலையை விட்டொழி' என்றான். அதைக் கேட்டதும் என் மனம் நம்பிக்கையால் நிரம்பினது. அப்போதே என் கட்டுரை பிரசுரிக்கப்பட்டதுபோல் ஒரு பிரமை தோன்றிற்று.

நான் போனதுமுதற்கொண்டு என் தமையனிடம் அநேக கட்சிக்காரர்கள் வந்தார்கள். வரும்படியும் நிறைய வரத் தொடங்கிற்று. என் தமையன் புளகாங்கிதமடைந்து "எல்லாம் கமலா வந்த வேளையால்தான் இத்தனை வரும்படி வருகிறது" என்றான். ஆனால் எனக்கோ "என்னுடைய துரதிருஷ்டம்தான் அவனைப் பார்த்து யோசனை கேட்க முடியாமல் போகிறது" என்று என்னையே வெறுத்துக்கொண்டேன். ஏனென்றால் என் தமையனுக்கு நிற்கக் கூட நேரமில்லை. எப்போதும் கட்சிக்காரர்களோடு போராட்டம் தான். நான் மதுரைக்கு வந்து பத்து தினங்கள் ஆகின்றன. இது வரையில் என் கட்டுரையைப்பற்றி என் தமையனிடம் யோசனை கேட்க சமயம் வாய்க்கவில்லை.

இதற்குள் என் கணவரிடமிருந்து "நீ ஒருவாரம் இருப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றாயே. பத்துநாளாகியும் ஏன் இன்னும் வரவில்லை?" என்று ஒரு கடிதம் வந்தது. உடனே "கதையாவது கத்திரிக்காயாவது! அதெல்லாம் எழுதமுடியாது" என்ற மனத்தாங்கலோடு அன்றைய இரவே புறப்பட்டு சென்னைக்கு வந்தேனாயினும் எனக்கு கட்டுரை எழுதவேண்டுமென்ற பைத்தியம் நீங்கவில்லை. ஆனால் எழுதுவதற்கு யோசனை உதயமானால்தானே!

இப்போதும் உங்களில் யாராவது ஒரு யோசனை சொன்னால் எழுதத் தயார்! சீக்கிரம் யோசித்துச் சொல்லுங்கள்!

---



முதலாளி- நானும்பத்திரிகை உலகில் பிரவேசித்திருக்கிறேன் இப்போது புதிய பத்திரிகை ஆரம்பிப்பதற்கில்லையாதலால் "கிழவி மொட்டு"-பக்ஷத்திற்கு ஒரு புத்தகம் என்று ஆரம்பித்திருக்கிறேன். உங்களுடைய விஷயதானமும் அதை அலங்கரிக்க வேண்டும்.

ஆசிரியர் :- அதற்கென்ன ஆக்ஷேபனை "அழுகப் பிணம்" என்று ஏழுவருஷத்திற்கு முன் நான் எழுதி பிரசுரமான கதையைப் போடுங்கள். இப்போதுதான் பிரசுரமான கதைகளையேதொகுப்பது தான் சர்வ சகஜமாயிற்றே!

ஸ்ரீமதி செல்லம்மாள் வேலுப்பிள்ளை

# விதியின் வெற்றி

மலைநாட்டுப்பகுதி; வெயில் காய்ந்துகொண்டிருந்தது. புகைரதம் வீறிட்டுக்கொண்டு ஸ்தானத்தில் நின்றது. பிரயாணிகள் யாவரும் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கினர். இரண்டு பட்டினத்திற்குப் போகும் புகைரதங்கள் சந்திக்கும்இடமே அது.பிரயாணிகள் இங்குதாங்கள் போகும் பட்டணத்திற்குத் தக்கதாய்ப் பெட்டிகள் மாறவேண்டிய தவசியம்.

இந்த மர்மமறியாத ஓர் பெண் செய்வதறியாது திகைத்து நின்றாள். இவளது மனவதிர்ச்சியில் இடையிற்கழிந்த அரைமணி நேரங்கூடத்தெரியவில்லை. முன்பின் பிரயாணம் பண்ணியறியாத மனோகரி நின்றவிடத்திலேயே கற்சிலையானாள். தெளிவுபெற்றவுடன் நாற்புறமும் திரும்பிநோக்கினாள். யாண்டும் வெட்டவெளியாயிருந்தது. இடையில் புகைரதம் சென்றதையும் இவளறியாள்போலும். செய்வதறியாது கால் சென்ற திசையில் நடக்கலுற்றாள். ஜனநடமாட்டமற்ற அங்கு ஒரு சிலரே இறங்கினர். அவர்களில் தயாளமனதுடைய ஒரு சிறுவன் மனோகரியின் திகைப்பையும் பரிதாபமான பார்வையையும்கண்டு நெருங்கி விசாரிக்க விரும்பினன். வேற்றூரில் இத்தமிழ்ப்பெண் வழி தவறினளோவென ஐயுற்றான். எதற்கும் சங்கோசம் விட்டபாடில்லை, தன் வீட்டைநோக்கி நடந்தான். மனோகரியின் பரிதாபமானபார்வை அவன்மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது. வீட்டையடைந்த பிரபாகரன் நேரே தாயின் படுக்கையறையை அடைந்தான். மெலிந்த தேகத்துடன் கல்யாணி படுத்திருந்தாள். மகனின் வரவால் கல்யாணியின் முகம் மாறுபட்டது. புகைரதத்திலிருந்து களைத்துவந்த தன் மகனுக்குக் காப்பிகொடுக்கவும் தன்னாற் சக்தி இல்லையேயென ஏங்கினாள். பணமிருந்துமென்ன? பணியாளரில்லாதது பெருங் குறையாயிருந்தது. இதுவே கல்யாணியின் நோய்க்குக் காரணமென அவள் கணவன் சோமநாதன் தீர்மானித்து, எப்படியும் பிரபாகரனையனுப்பி ஒரு சிறுவனாகிலும் கொண்டுவரவேண்டுமென்றான்.

## 2

தன்போக்காய் நடந்த மனோகரி, கால்மைல்தூரம்போல் நடந்திருப்பாள். மேலே நடக்க கால்கள் பின்னிட்டன. தானோர் பெண்ணென்பதையும் தனக்கு வழித்துணையில்லையேயென்பதையும் உணர்ந்தாள். தெருவிலோர் மனிதவர்க்கமுமில்லை. இடையிடையே சிறுசிறு குடிசைகள் தோன்றின. வைராக்கிய சிகாமணியாகிய மனோகரி தன் தைரியத்தைக் கைவிடவில்லை. ‘‘பகவானை நம்பி வெளியேறினேன். அவரே எனக்குக் கதி’’ என மனோதிடங்கொண்டாள். அருகிலிருந்தவோர் மரநிழலில் உட்கார்ந்தாள்.

‘‘மகளே! இவ்வுலகை நம்பாதே! யாவுமனித்தியம். நீர்க்குமிழி போன்றது நம்வாழ்வு. ஆதலால் உன் மனவைராக்கியத்திற் குறையாதே, தீர வைராக்கியவதியாயிரு. பிறந்தவர் யாவருமிறப்பது சத்தியமல்லவா? ஆதலால் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அண்டினோரை ஆதரிக்குமண்ணலைக் கைவிடாதே. அவர் திருவடித்தாமரைக்கே உன்னை அர்ப்பணஞ்செய். என்னிலை நம்பிக்கையற்றது, என் ஜீவனோடு உன்னையோர் பக்த சிகாமணியாய்க் காண்பேனென நினைத்தேன். அது பகவானுக்கு விருப்பமில்லைபோலும். என்னிஷ்டப்படியே யாவும் நடக்குமென நினைத்தேன்,அப்படியொன்றும் நடக்காது விதியே வெற்றிபெறுமென இன்றுதா

னுணர்கிறேன், எனக்கும் அந்திமகாலம் நெருங்கிவிட்டது. உலகப்பற்றே எனக்குவேண்டாம், தீரா வைராக்கியவதியாய் நீயும் எனக்குக் காட்சி தருகிறாய். அதுவே எனக்குப்போதும், இனி உன் விதிவிட்டபடி நடக்கட்டும். இப் பிரபஞ்சத்தைத் தீரவறிந்த நீ என் மரணத்தால் துன்புறமாட்டாய்'' என்று தந்தை கூறிய வாக்கு அவள் மனத்தில் ஒலித்தது.

தந்தையின் மரணத்திற்குப் பின்பு சுற்றத்தாரும், தாயாரும் சேர்ந்து அவளை மணக்கும்படிக் கட்டாயப்படுத்தியதை அவள் மனம் வெறுத்தது. தந்தை தனக்களித்திருந்த 50000 ரூபாயையும் தர்ம நிதிக்குப் பத்திரம் எழுதி அனுப்பிவிட்டு, விரக்தியுடன் வீட்டைவிட்டு வெளியேறிய மனோஹரியின் மன நிலை எப்படி இருந்திருக்கும்?

## 3

அந்தி நேரம்; எப்படியாகிலுமோர் சிறு பையனுடன் வீடுதிரும்ப வேண்டுமென உறுதிகொண்டான் பிரபாகரன். வெயிலினருமை நிழலிலல்லவா தெரியும்? அற்ப காரியமென நினைத்த வேலையாட்பிடித்தலும் பெரிய காரியமாயிற்று. பகவானை வேண்டிக்கொண்டான். வேலைக்காரனுடன் சென்றுதான் கல்யாணியைச் சமாதானப் படுத்தவேண்டுமென்பது அவனெண்ணம். மனதில் தனக்குச் சகாயம் செய்யும்படி பகவானை வேண்டிக்கொண்டு நடக்கலுற்றான். தன்போக்காய் நடந்த பிரபாகரன் திரும்பினான். தான் புகைரத ஸ்தானத்திற் கண்ட சோபையான பார்வையவனுக்குத் தெரிந்தது. அவனையும் மீறிக் கால்கள் அவ்விடத்தையடைந்தன. 'சகோதரி! நீ யார்? இச் சிங்களநாட்டில் எவ்வாறு வந்தாய்?' என விசாரித்தான். தன் துணிவை நினைத்துத் தன்னையே மெச்சினான். மனோகரிக்கு எதிர்பாராதவிதமாய் இக் கேள்வி திகைப்பை உண்டாக்கிற்று. அடுத்த நிமிஷம் எழுந்து நின்றாள். இவள் பயத்தைக்கண்ட பிரபாகரன் நீ யாரெனவும் எங்கு செல்கிறாயெனவும் சொன்னால் என்னாலியன்ற உதவி செய்வேனென்றான். இவ்வேகாந்தமானவிடத்தில் வழிதவறினாளென்பதே அவனெண்ணம். மனோகரிக்கு ஒன்றும் பேச நாவெழவில்லை. நானோரனாதையென மௌனமானாள். பிரபாகரனும் தனிமையில் அவளுடன் பேச விரும்பவில்லை. ''சகோதரி! பயப்படாதே இதுவோர் சிங்கள நாடு. நாங்களோரே குடும்பந்தானிங்கு தமிழர்கள். விரும்பினாலென்னுடன் வா. என்தாயும் இங்கிருக்கிறாள். அவளிடம் சேர்ப்பிக்கிறேன்'' என்றான். மனோகரியும் பிரபாகரனைப் பின்தொடர்ந்தாள்.

பிரபாகரன் தாயிடம் போய் ''அம்மா! உங்களுக்கு ஓர் நல்ல உதவியைப் பகவான் தந்திருக்கிறார்'' என்றான். பகவானே தன் தாய்க்கு ஓர் உதவி காட்டினாரென்பதே அவனெண்ணம். நடந்த வரலாற்றைப் பிரபாகரனாலறிந்த கல்யாணி மனோகரியை அழைத்து வினவினாள். அவளது சோர்ந்த வதனமும் சோபையான விழிகளும் கல்யாணியை வசீகரித்தன. மனோகரியோ, தானோரனாதையெனவும் தாய் தந்தையருறவினரில்லையெனவும் அனாதைநிலையத்தை அடைய வெளியேறி இடையில் வழிதவறியதாயும் தன் பெயர் தங்கம்மாளெனவும் கூறினாள். தன்னுடைய தனிமையான சீவியத்தையும் தற்போதைய நிலையையும் சொல்லித் தனக்குத் துணையாயிருக்கும்படி வேண்டிக்கொண்டாள். அவள் பேச்சு மனோகரியை விருப்பப்பண்ணிற்று. எங்கிருந்தாலும் மனம் பரிசுத்தமாயிருந்தாற் போதுமென விரும்பினாள்.

நாட்களோடிக்கொண்டிருந்தன. தற்போது தங்கமே கல்யாணிக்குப் பெருந் துணையானாள். ஓய்ந்த நேரத்தில் கல்யாணியின் இளைய மகனுக்குத்


தமிழ்பாடங் காற்றுக்கொடுத்தாள். கல்யாணியின் புதல்வரான பிரபாகரன், மனோகரன், கமலாகரன் என்னும் மூவரும் தங்கத்தைத் தங்கள் சகோதரிபோற் பாவித்தார்கள். மனோகரியின் அடக்கவொடுக்கமும் உண்மையன்பும் அக் குடும்பத்தையே வசீகரித்தது. பெண் குழந்தையில்லாத கல்யாணி பகவான் தனக்கு வயது வந்த வோர் குழந்தையைத் தந்தாரென வெண்ணினாள், கல்யாணியின் நோயும் அவளைவிட்டு விலகிற்று. சோமநாதனும் அந்த ஆபீஸில் தலைமை கிளார்க் பதவியேற்றான். பிரபாகரனும் மெடிக்கல் கொலிச்சில் படித்துப் பாஸ்பண்ணி அவ்வூர் வைத்திய சாலையிலேயே டாக்டரானான். கல்யாணியோ கிரகலட்சுமிபோல் தங்கம் வந்ததாலேயே யாவும் நடக்கிறதெனத் தீர்மானித்தாள். தங்கத்தின் நடை அவளோர் உயர்ந்த குலத்திற் பிறந்தவளென்பதைத் தெற்றெனக் காட்டிற்று. தருணம் வரட்டும்; தங்கத்தாலேயே அவள் சீவிய சரிதையை அறியலாமெனக் கல்யாணி பேசாதிருந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மனோகரன் தினசரிப்பத்திரிகையொன்று வாசித்துக்கொண்டிருந்தான். அதிலோரதிசய சம்பவத்தைக் கண்டு தன் தாய்க்கு வாசித்துக் காண்பிக்கச் சமையலறையையடைந்தான். கல்யாணியும் தங்கமும் ஏதோ காரியார்த்தமாய்ச் சமையலறையுள் நின்றார்கள். மனோகரன் 'அம்மா! ஒரு அதிசயத்தைக் கேளுங்கள் என வாசிக்கத் தொடங்கினான்.

18 வயது பெண்ணினால் ரூ. 50000 தருமநிதிக்குக் கொடுக்கப்பட்டது.

18 வயதுள்ளவோர் பெண் தன் பெயரிலிருந்த 50000 ரூபாய் பெறுமதியான நிலன் புலன்களடங்கிய பத்திரத்தை தரும நிதிக்காக எழுதிவிட்டு மாயமாய் மறைந்தாள்.

சென்றவிடந் தெரியாது உலக வாழ்க்கையை வெறுத்த இப்பெண் தந்தையின் மரணத்தாலும் தாய் வாழ்க்கைப்பட வேண்டுமென வற்புறுத்தியதாலுமே வெளியேறினாள். இவளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 1000



ரூபாய் பரிசு. முக்கிய விஷயம். இவள் மறைந்தபின் இவளின் தாய் படுக் கைவிட்டெழுந்திருக்கவில்லை. கடுமையாய் வருத்தப்படுகிறுள். அந்தம் மாளே இதனைப் பிரசுரிக்கும்படியும் தெரிவித்தாள்—என நிறுத்தினன்.

யாவற்றையும் கேட்டுத் திகைத்து நின்ற மனேகரி தாயின் அபாய நிலையை வாசிக்கக் கேட்டதும் அப்படியே நடுங்கினுள். கையிலிருந்த பாத் திரம் நழுவிக் கீழே விழுந்தது. கண்ணீர்த்துளிகளும் வீழ்ந்துடைந்தன. மயக்கம் மேலிட்டதால் கல்யாணி படுக்கையில் கிடத்தித் தெளியப் பண்ணினுள்.

"மகளே! என்னை உன் தாய்போல் நினைத்துக்கொள். இனிமேல் உன் ஞல் ஒன்றையும் மறைக்க முடியாது. உன் விபரமறிய நானும் எதிர்பார்த் திருந்தேன். யாவற்றையுஞ் சொல்" என்றுள். மனேகரியும் நடந்தவை முழுவதையுஞ் சொன்னுள். தாயின் அபாய நிலை அவளைப் பெரிதும் பாதித்தது.

## 4

கல்யாணியால் விபரமறிந்த சோமநாதன் இனிமேல் தாமதிக்க முடி யாதென லீவிற் கெழுதிவிட்டு எல்லோரும் தங்கள் சொந்தக் காரிலேயே கிளம்பினுர்கள். மனேகரியின் பிரிவால் கௌரியின் வாழ்வே இருண்டு விட்டது. மனேகரியி னெண்ணத்திற்கு மாருய்த் தான் நின்றதாலேயே அவளை இழக்க நேர்ந்ததென உருகினுள். அன்னுகாராதிகளை வெறுத்தாள். படுக்கையிலிருந்த கௌரி "மகளே! உன் எண்ணத்திற்கு மாருய் நின்றதா லேயே உன்னை இழந்தேன். இனிமேல் அரை நிமிஷமும் என்னுற் தாங்க முடியாது. என்கிட்டே வா" என பிதற்றிக்கொண்டிருந்தாள். தெருவிற் கார் நின்றது. எல்லோரு மிறங்கி உள்ளே சென்றுர்கள். மனேகரியின் வரவைத் திடீரெனவறிந்த கௌரி மூர்ச்சையானுள். கண்களில் நீர் தாரை யாய் வழிய மனேகரியும் தாயின் பக்கலில் உட்கார்ந்தாள். தெளிவு வந்த வுடன் கௌரி மனேகரியின் கரத்தைக் கண்ணிலொற்றிக்கொண்டாள். மனநோய்க்கு மருந்துபோல் மனேகரி வந்ததிலிருந்தே கௌரியின் நோயும் குறையவாரம்பித்தது.


மனேகரிக்கு தருமநிதிலிருந்து அழைப்பு வந்தது, யாவரும் சென் றுர்கள். மனேகரிக்கு மாலையிட்டு வரவுபசாரப் பத்திரம் வழங்கப்பட்ட பின் ஸ்ரீமத் சுவாமி கணேசானந்தஜீ அவர்கள் இல்லறமும் துறவறமும் என்பதையிட்டு உபன்யசித்தார். அவர் இவ்விரண்டையும் விளக்கித் துற வறத்திலடைய முடியாதவைகளையும் இல்லறத்திலிருந்தே அடையலா மெனவும் நன்றுய் விளக்கிக்காட்டினுர். இவ்வுபன்னியாசத்திலேயே மனே கரி லயித்தாள். கல்யாணியும் இனிமேல் மனேகரியை விட்டு ஒரு நிமிஷ மும் தன்னுலிருக்க முடியாதெனவும் அவளைத் தனக்கு மருமகளாய் ஏற்றுக் கொள்ளவும் கௌரியிடம் கேட்டாள். கௌரியும் மனேகரி விரும்பினுல் தனக்குப் பூரண விருப்பமெனவும் கூறினுள்.

"அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாள்" கல்யாணியினன்பு மனேகரியை மாறுரைக்கவிடவில்லை. தன் தோல்வியை ஒப்புக்கொண்ட மனேகரிக்கும் ப்ரபாகரனுக்கும் சகல விமரிசைகளுடன் விவாகம் நடந்தது. கௌரியின் முகமலர்ச்சியுடன் இதயம் மலர்ந்தது. தம்பதிகளிருவரும் திருவள்ளு வரும் பத்தினியும் போலில்லறம் நடத்துவாரென்பதிலய்யமுண்டோ?

மனேகரியும் "விதி யாரையும் விடாதே அதை யார் வேல்வார் புவி மீதே" என்னு மடிகளை உச்சரித்துக்கொண்டிருந்தாள்.

ஸ்ரீமதி. நீ. ல. பட்டம்மாள்

# மன்னிப்பு



பம்பா என்னும் ஊரில் ஓர் நாடகக் கம்பெனி இருந்தது. அதில் வீரண்ணு பெரிய நடிகனுக இருந்தான். 'ராஜாபார்ட்' டில் அவனுக்கு நிக ராக ஒருவரும் நடிக்க முடியாது. அவனுடைய நடிப்பின் திறமையைக் காண வரும் கூட்டங்களேச் சொல்லியே முடியாது. அதில் இருக்கும் மேனேஜர் வீரண்ணுவை தன் சொந்த பிள்ளேயைப்போல் நடத்த ஆரம்பித்தார். அவ்விதமே அவர்கள் இருவரும் உயிரும் உடலும் போல் இருந்து வந்தார்கள்.

சில மாதம் ஆனபிறகு வீரண்ணுவின் குணம் மாறத் தலேப்பட்டது. ஒருதினம் பெரிய புராண நாடகத்தில் வீரண்ணு வெகு தடபுடலாக நடிக் கப் போவதாய் எங்கும் செய்தி பரவியது. அன்றைய தினம் கொட்டகை யில் கூட்டம் சொல்லி முடியாது. நாடகம் ஆரம்பம் ஆக இன்னும் ஐந்து நிமிஷங்களே இருந்தன. அதுவரையிலும் வீரண்ணுவைக் காணவில்லே. மேனேஜருக்கோ பெரிய கவலேயாய்விட்டது. மணி ஆக ஆக அவர் மனத் தில் திகில் அதிகமாகிக்கொண்டே இருந்தது. நாடகம் ஆரம்பம் ஆவதற்கு மேல் கால்மணியும் ஆய்விட்டது. அதற்குமேல் ஜனங்களுக்குப் பொறுமை இருக்குமா? கலாட்டா செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். மேனேஜர் என்ன செய்வது என்று தெரியாமல் முழித்துக்கொண்டிருக்கும்பொழுது வீரண்ணு வெகு அவசர அவசரமாய் அங்கு வந்தான். அவனேப் பார்த் ததும் ஜனங்கள் வெகு அமைதியாய் இருந்துவிட்டார்கள். அன்று ஏதோ ஒரு வழியாக நாடகத்தை முடித்தார்கள். தினத்தைவிட அன்று அவ னுடைய நடிப்பு ரொம்ப மோசமாயிருந்தது.

இடையில் ஜனங்கள் கூச்சல்போடுவதைக் கண்ட மேனேஜருக்கு ரொம்ப வருத்தமாயிருந்தது. நாடகம் முடிந்ததும் வீரண்ணுவைத் தனியாக

அழைத்துச்சென்று "அப்பா! உன்னை நான் என் சொந்த பிள்ளையைப் போல் நினைத்திருக்கிறேன். உன் நடிப்பின் திறமையோ உலகமெல்லாம் பிரகாசிக்கிறது. உன் மதிப்பிற்குத் தகுந்தாற்போல் நீ நடந்துகொள்ள வில்லை. உன் அன்பார்ந்த காதலை கேவலம் ஓர் செம்படவப் பெண்மீது வைப்பது நன்றாகவே இல்லை. நான் உனக்கு எத்தனையோ தடவை சொல்லி இருக்கிறேன். நீ என் பேச்சை கேட்கவில்லை. அவள் ரொம்ப மோசக்காரி. அவளை நீ நம்பாதே. அவளுடன் சேர்ந்து, அநியாயமாய் உன் வாழ்வை கெடுத்துக்கொள்ளாதே" என்றார்.

இதைக் கேட்ட வீரண்ணாவுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. "ஐயா! என்னை உங்கள் பிள்ளையைப்போல் நினைத்திருந்தால் இவ்விதம் பேசமாட்டீர்கள். என் சொந்த விஷயத்தில் இனி நீங்கள் தலையிடவேண் டாம். இனிமேல் உங்கள் கம்பெனியில் நடிக்கும் நடிகன் என்று மட்டும் நினைத்துக்கொண்டால் போதும்." என்று கோபத்துடன் சொன்னான்.

மானேஜருக்கோ அவன் தன்னுடன் கோபமாய் பேசுவதும், தன்னை அலக்ஷியம் செய்வதும்பற்றி வருத்தமில்லை. அவன் அநியாயமாய் கெட்டு விடுகிறானே என்றுதான் வருத்தப்பட்டார்.

இவ்விதம் சிறிது நாள் சென்றது. வீரண்ணாவின் நடத்தை வரவர ரொம்ப மோசமாகி கொஞ்சநாள்களுக்கெல்லாம் அந்த கம்பெனியை விட்டு வெளிவரும்படியுமாயிற்று. வீரண்ணாவுக்கு தன் அருமைக் காதலி பொன்னியைவிட எதுவும் மனதிற்கு சந்தோஷம் அளிப்பதாகத் தோன்ற வில்லை. தான் பொன்னியுடன் இருப்பதுதான் சுவர்க்கப் பதவி என்று நினைத்தான். அந்த வாழ்வு எத்தனை நாளைக்கு? கையில் பணம் இருக்கும் வரையில்தான். அவனுடைய பணம் சிறிது சிறிதாக செலவழிந்துவிட்டது. கடைசியில் இவனுக்கு வெற்றிலைபாக்கு வாங்கக்கூட கையில் பணம் கிடையாது. ஓர் தினம் பொன்னியைப் பார்த்து "பொன்னீ! எனக்கு ஒரு காலணா கொடேன் நான் வெற்றிலைபாக்கு வாங்கவேண்டும்" என்று வெகு தாழ்மையுடன் கேட்டான்.

அதற்கு பொன்னி "போ போ! உனக்கு வேறு வேலை கிடையாது. எப்பொழுது பார்த்தாலும் என்னைப் பணம் கேட்பதுதான். இதுகூட நாட கம் ஆடும் இடம் என்று நினைக்காதே. காலணாவுக்கு வழி இல்லாத நீயா ஒரு ஆண்பிள்ளை?' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள்.

அவள் அவ்விதம் கோபித்துக்கொண்டதும் நம் வீரண்ணாவுக்கு "வாஸ் தவம். பொன்னி நம்மிடம் கோபித்துக் கொள்ளவேண்டியதுதான். நாம் இன்று எங்கேயாவது சென்று கொஞ்சம் பணம் சம்பாதித்துக்கொண்டு தான் வீடு திரும்புவது" என்று வெளிக்கிளம்பினான். அன்று இவன் எங் கெங்கேயோ அலைந்தும் ஒரு நாலணாதான் கிடைத்தது. அதை வெகு சந் தோஷத்துடன் பொன்னியிடம் கொடுக்கவேண்டுமென்று அவசரமாய் வீட்டுக்கு வந்தான். ஆனால் பொன்னி வீட்டில் இல்லை. அவள் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தான். நேரம் ஆகஆக பொன்னி வீட்டிற்கு வராத தால் வீரண்ணாவின் மனம்உடைந்துவிட்டது. அதன்பிறகுதான் அவனுக்கு தன் மானேஜர் சொன்னதெல்லாம் நினைவிற்கு வந்தது. அவரை அவ மதித்ததினால்தான் தனக்கு இந்த நிலைமை வந்தது என்று வருந்தினான். அந்தக் கம்பெனியில் போய்ச் சேரலாமா என்று முதலில் நினைத்தான். அதன் பிறகு அவர் எதிரில் போவதற்கு வெட்கி அந்த ஊரைவிட்டுப் போ னான். அவனுடைய மனோ வியாதியினால் அவன் உருவமும் மாறிவிட் டது. தன் ஜீவனத்திற்கு என்ன செய்வது என்று வேதனை அடையும் பொழுது கடவுள் அவனுக்கு ஓர் வழியைக் காட்டினார்.

அந்த ஊரில் சித்திரம் எழுதும் ஒருவரிடம் போய்ச் சேர்ந்தான். வீரண்ணாவுக்கு ஏற்கெனவே சித்திரம் எழுதும் பழக்கம் உண்டு. அதனால் அவனுக்கு அந்த தொழில் வெகு ஆனந்தத்தைக் கொடுத்தது. சித்திர சாலையின் முதலாளி இவன் சித்திரத்தைக்கண்டு பிரமித்துவிட்டார். வீரண்ணா முன்பு எந்த நாடகக் கம்பெனியில் சேர்ந்திருந்தானோ அதே கம்பெனிக்கு சித்திரத்திரை எழுதிக் தருவதால் பின்னும் அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. அந்த நாடகக் கம்பெனியின் மானேஜர் முன்னால் இருந்ததை விட திரைகள் வெகு அழகாக இருப்பதாயும் இன்னும் இதேபோல் திரைகள் வேண்டுமென்றும் சித்திரத்தைப் புகழ்ந்து எழுதி இருந்தார். வீரண்ணாவால் சித்திர முதலாளிக்கு அதிக வேலைகள் வந்துகொண்டிருந்தன. இவ்விதம் இருக்கும்சமயத்தில் அந்த மானேஜரை வேறுவேலையாக வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள். மறுநாள் சித்திர முதலாளிக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "உங்களுடைய சித்திரங்கள் என் மனதை மிகவும் கவர்ந்து விட்டன. அவற்றை அடிக்கடி கண்டு மகிழ நினைத்து இருந்தேன். என்னை திடீரென்று வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள் நான் நாளைக் காலை இந்த ஊரை விட்டுக் கிளம்புகிறேன். உங்களிடத்தில் நேரில் சில விஷயங்கள் பேச வேண்டும். அதனால் நீங்கள் கட்டாயம் ஸ்டேஷனுக்கு வரவேண்டும். என்னால் முடிந்த வரையில் உங்கள் சித்திரத்தை பிரஸித்திப் படுத்த முயற்சிக்கிறேன்" என்று அந்தக்கம்பெனி மானேஜர் எழுதியிருந்தார். சித்திர முதலாளிக்கு வெகு சந்தோஷமுண்டாயிற்று. அந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு வீரண்ணாவிடம் போனார்.

"அப்பா! நமக்கு இவ்வளவு நாளாய் நன்மை செய்து கொண்டிருந்த மானேஜரை வேறு ஊருக்கு மாற்றி விட்டார்கள். ஆகையால் நாளைதினத்திற்குள் ஓர் அழகான சித்திரத்திரை நீ எழுதித்தரவேண்டும். அதை அவருக்குப் பரிசாக அளிக்கப் போகிறேன்" என்று சொன்னான். மானேஜரை மாற்றிவிட்டார் என்று கேட்டதும் வீரண்ணாவிற்கு மனம் வெடித்து விடும்போலிருந்தது. "ஐயோ! என்னை அன்புடன் ஆதரித்து வந்தவரை நான் செய்த சதிக்கு இந்தச் சித்திரத்தின் மூலமாவது சந்தோஷப் படுத்தி வந்தேன் என்று நினைத்தேனே. இப்பொழுது அதுவும் இல்லாமல் அவரை வெளி ஊருக்கு மாற்றிவிட்டார்கள். நான் செய்த தப்பிதத்திற்கு அவரிடம் நேரில் சென்று மன்னிப்பு கேட்பதற்கும் வெட்கமாயிருக்கிறது. அந்த மூர்த்தியின் மன்னிப்பு எவ்விதமாவது எனக்குக் கிடைத்தால்தான் என் மனதிற்கு கொஞ்சம் நிம்மதி ஏற்படும் போலிருக்கிறது". என்று பலவிதமாய் யோசனை செய்துகொண்டிருக்கையில் ஒரு யோசனை தோன்றியது.

"சரி" சித்திரத்தின் மூலமேதான் அவர் மன்னிப்பை பெறவேண்டும் என்று ஓர் சித்திரம் எழுதத் தொடங்கினான். அன்று இரவு முழுவதும் தூங்காமல் சித்திரம் வரைந்துகொண்டிருந்தான். இதைக்கண்ட முதலாளி "நான் சொன்னதைவிட்டு நீ வேறு ஏதோ வரைந்துகொண்டிருக்கிறாய். உன்னால் எனக்கு பலநஷ்டங்கள் ஏற்படும் போலிருக்கிறது. நீ முன்போல் நடந்து கொள்வதில்லை. அந்த திரையை நாளைக் காலைக்குள் கொடுக்காவிட்டால் எனக்கு ரொம்ப வருத்தமாய்விடும். என் வார்த்தையை நீ அலக்ஷ்யம் செய்வாயென்று நினைக்கவில்லை" என்று சொல்லிவிட்டு வெகு கோபமாய்ப் போய்விட்டான். நம் வீரண்ணாவின் மனோ நிலைமையைக் கேட்கவேண்டுமோ? ஆதியில் அந்த மானேஜருடைய பேச்சைக் கேட்காததினால் அல்லவா என்கதி எல்லாரிடமும் கேட்கவேண்டி இருக்கிறது. சீ!


இந்தத் தொழில் வேண்டாம். நாம் எவ்விதமாவது அவரிடமே சென்று விடலாமென்று தான் எழுதிய சித்திரத்தை எடுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு வெளியேறினன்.

மறுநாள் காலே வீரண்ணவை அங்கு காணததினல் முதலாளிக்கு ரொம்ப வருத்தமாய் விட்டது. "சரி நாம் நினைத்தபடி நடக்க முடியவில்லே. நேரில் சென்ருவது அவரைப் பார்த்து வரலாமென்று ஸ்டேஷனுக்குப் போனன். அங்கு மானேஜரைக் கண்டு பேசிக் கொண்டு இருக்கும் போது வீரண்ண ஒரு பக்கத்தில் தயங்கி நிற்பதைப் பார்த்து, பிரமித்து விட்டான். வீரண்ணவோ "அவர் எதிரில் நாம் எவ்விதம் செல்வது?" என்று யோசனே செய்து கொண்டிருக்கும் போதே வண்டி கிளம்பி விட்டது.

அச்சமயத்தில் அவசர அவசரமாய் ஓடி தான்கையில் கொண்டுவந்த சித்திரத்தைக் கொடுத்துவிட்டு, "ஐயா! என்னே மன்னிக்கவேண்டும்" என்ருன். இவன் உருமாறி இருப்பதால் மானேஜருக்கு இவனே அடையாளம்கண்டுகொள்ளமுடியவில்லே. அவனே சரியாய் பார்ப்பதற்குள் வண்டி வேகமாய்ப் போக ஆரம்பித்து விட்டதினல்அது முடியாமல் போய்விட்டது.

சில ஸ்டேஷன்கள் தாண்டியபிறகு அவன் கொடுத்த சித்திரங்களே கவனித்தார். அந்த சித்திரம் முழுதும் வீரண்ணவின் வாழ்கைச் சித்திரமாக இருந்ததால் அவருக்கு அடக்கமுடியாத அழுகை வந்துவிட்டது. "ஐயோ நான் அருமையாய் வளர்த்த புதல்வனின் சித்திரமா இது! அவன் என்னுடைய் மன்னிப்பைப் பெறுவதற்கு எவ்வளவு அழகாய் எழுதியிருக்கிருன்? கடவுள் அவனுக்கு சித்திரம் எழுதும் திறமையுமா கொடுத்திருக்கிருர்? அந்தோ! இவ்வளவு நாளாக எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! என் அருமை மைந்தன் என் அருகில் இருந்தும் அவனேக் கவனியாமல் இருந்து விட்டேனே!" என்று அந்த சித்திரத்தின் காட்சியில் மனதைப் புதைத்து விட்டார்.

---



எஜமானியம்மாள்:--அடே! சிமாசு! உன்னேத்தேடிண்டு யாரோ அழகா ஒருத்தி வந்திருக்காடா, ஜம்முனு சினிமாக்காரி மாதிரி!

சமையற்காரன்:--- (ஓடிவந்து பல்லே இளித்துக் கொண்டு) இவ என் ஆம்படையாதாம்மா! யாரோன்னு பாத்தேகளே!

—விருச்சிகம்

# குண்டலகேசி

"இவள் யார்? பெண்ணு? பூங்கொடியா? மனிதவடிவந்தாங்கிய தெய்வ மகளா?" என்று சந்தேகிக்கும்படி அமைந்திருந்தது அவளது சௌந்தர்யம். நிலவினல் மெருகிடப்பட்டதுபோன்ற அவளது பொன் மேனியில் இரண்டொரு ஆபரணங்கள், சுருண்டுசுருண்டு படிப்படியாய்த் தொங்கிக் காற்றுடன் விளையாடும் குழல் கற்றைகளைப் பார்க்கும்பொழுது குண்டலகேசி என்பது இயற்கைப் பெயரா? காரணப் பெயரா? என்று தோன்றும்படி அமைந்திருந்தது. அகன்ற நெற்றியிலே கஸ்தூரி திலகம். அழகிய நீண்ட கண்களிலே மை. தம்பலத்தாற் சிவந்த கோவை இதழ்கள். மடிமீது ஒரு புஷ்பக்கூடை. அதில் பல்வேறு ஜாதி மலர்கள். இடது கையினுல் புஷ்பங்களை பற்றியவளாய் வெகு ஊக்கமாய்த் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

வேறொரு உலகில் அற்புதமாக சஞ்சரித்துக்கொண்டிருக்கிருள் என்பதை அவள் முகம் காட்டிற்று. சற்று நேரத்திற்கொருமுறை புருவத்தை நெறிப்பதிலும், இடையிடையே புன்முறுவல் கொள்வதனுலும் அவள் முகம் மாறிக்கொண்டிருந்தது. திடீரென்று இரு கரங்கள் அவள் கண்களை மூடின. கனவு தடைப்பட்டது. மெதுவாய்க் கைகளைப்பற்றித் தடவிப் பார்த்து, 'மேகலே!' என்ருள் அவள்.

"அப்ப! இதற்கு இவ்வளவு நேரமா? மனிதர் நடமாட்டம்கூடத் தெரியாமல் என்ன அவ்வளவு ஆழ்ந்த சிந்தனையோ?" என்று நகைத்தாள் வந்தவள். குண்டலேயின் முகம் நாணத்தாற் சிவந்தது. "வேறென்றுமில்லே. நேற்று அப்பா சொல்லவில்லையா? காளன் என்னும் மிகப்பெரிய கொள்ளேக்காரன் பிடிபட்டுவிட்டானென்று, அதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவன் சாமர்த்தியத்தைப்பற்றிச் சொல்லிச்சொல்லி ஆச்சர்யப்படுகிருர் அப்பா. இவ்வளவு தீவிரபுத்தியும், யோசனையும் நல்ல வழியிலே செலவானல் எவ்வளவோ அருமையான காரியங்களைச் சாதிக்கலாமே" என்ருள்.

"நானும் அதையேதான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். நாம் மட்டும் என்ன! நகரமுழுவதும் அதேதான் பேச்சு. பாவம்! அவனும் செட்டிப் பிள்ளேதானும். இள வயதிலே சகவாச தோஷம்..."என்ன? அவனும் செட்டிப்பிள்ளேயா? அடபாவமே!" என்று ஆச்சரியமும் இரக்கமும் கலந்த குரலிற் கூவிவிட்டாள் குண்டலே.

"அதுமட்டுமா? பார்ப்பதற்கு எப்படி இருக்கிருன் தெரியுமோ? மறக் குலவீரப்பிள்ளே தோற்றுப்போவானும். ராஜகுமாரனைப்போலே இருக்கிருனும் என்று ஆச்சரியமாய்ச் சொன்னுர் என் கணவர்" என்ருள் மேகலே.

இதற்குள் வீதியிலே "ஹோ" வென்று பேரிரைச்சல். எழுந்து எட்டிப் பார்ப்போமென்று மேன்மாடத்திலுள்ள சாளரத்தை நெருங்கினுர்கள் இருவரும். "இன்று என்ன விசேஷம்? ஏதாவது ஊர்வலமோ? அரசர் தான் பவனி வருகிருரோ?" என்று எண்ணியவளாய் எட்டிப் பார்த்த வண்ணம் நின்ருள் குண்டலே.

தெருவிலே பெருங்கூட்டம். சிறுவர்களும் முதியவர்களும் சூழ அரசாங்கக் காவலர் கூட்டத்தின் நடுவில் கம்பீரமாகக் கையில் விலங்கோடு நடந்துவரும் ஒரு அழகிய இளைஞனைக் கண்டதும்-அவள் கண்கள் மேலே செல்ல மறுத்தன. பளிச்சென்று விஷயங்கள் நினைவுக்கு வர, "என்ன!

திருடனு? பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே, என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.



கூட்டம் மெல்ல மெல்ல நகர்ந்து வந்து கொண்டிருந்தது. அவர்கள் இவளது வீட்டை நெருங்க நெருங்க இவள் மனம் இன்ன தென்று விவரிக்க இயலாத ஒருவகை வேதனை யினால் துடிக்கலாயிற்று. வைத்த கண் வாங் காது கட்டழகனையே பார்த்து மெய்மறந்து நின்றுவிட்டாள் அவள்.

* * * *

ஊரெங்கும் ஒரே ஆச்சர்யம்! வீடுகளி லும், வீதிகளிலும், சாலைகளிலும், சந்துகளி லும் இதேதான் பேச்சு. இதுவரையில் கண் டும் கேட்டுமிராத அந்த அதிசயச்செய்தி ஜனங் களை ஆச்சரியத்துள் மூழ்க வைத்ததில் ஆச் சர்யமென்ன! இரண்டொருநாள் முன்பு கைதியாகிச் சென்ற அந்தக் கள்வர்தலைவன் இன்று மணக்கோலத்துடன் பவனி வருகிறு னென்றால் யார்தான் திகைக்கமாட்டார்கள். அதிலும் நகரத்திலே சிறந்த செல்வரும் அரச



னது தோழருமான செட்டியாருக்கேமரு மகனாய் வந்தால்? நகரத்திலுள்ள இளை ஞர்களெல்லாம் இந் தக் கட்டழகி தமக்கு மாலையிட மாட்டா ளா? என்று ஏங்கி நின்ற அந்தகுண்டல கேசியே வலியவந்து இவனுக்கு மாலையிட் டாள் என்றால்?

அந்த திருடனுக்கு அடித்ததையா அதி ருஷ்டம் என்பார் ஒருவர். இருந்திருந்து அந்தப் பெண்ணுக்கு இப்படி புத்தி போக வேண்டாம். செல் வத்திலே குறைவா? கல்வியறிவிலே குறைவா? கள்வ னைக் கண்டா ஆசைப்படவேணும்? என்பார் இன்னொருவர். இது புதிய சம்பவமோ? பழைய தொடர்போ? பெரிய இடங்களிலே எதுவேணுமா னலும் நடக்கும் என்பார் சந்தேகமும் பொறுமையுமே உருக்கொண்ட ஒரு பெரியார்.

ஏன் ஓய்! பிதற்றுகிறீர்? செட்டியாரையும் சொல்லி அதே வாயால் வேறொருவரையும் பேசுவதா? அவர் சீலமும் நற்குணமும் உலகமறியும்.

வாயை மூடுமையா என்று அதிகாரத்துடன் சொல்வார் இன்னொருவர்.

இதெல்லாம் வீண்விவகாரம். விதியென்பது மனிதனை எப்படி எல்லாமோ ஆட்டிவைக்கிறது. விதிவழி மதிசென்றது. அந்தப் பெண் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். இல்லாவிட்டால், நாடறிந்த கள்ளன் சிறைக்கூடம் போகும்பொழுதுகூடக் கண்டு காதல் கொள்வதுண்டோ? முதலில் அரசர் விடுதலை செய்யச் சம்மதிக்கவில்லை. பிறகு செட்டியாரின் நிலைக்கு இரங்கி விட்டுவிட்டார். ஒரே மகள். அவளோ உயிர் தரியேன் என்கிறாள். எல்லாம் விதியின் விளையாட்டு என்கிறார் இன்னொருவர். இவைகளையெல்லாம்பற்றிக் கவலையில்லை அவளுக்கு. தன் இஷ்டம் நிறைவேறிவிட்டது. ஒரே ஆனந்தவாரிதியில் மூழ்கிக்கிடந்தாள் அவள்.

* * * *

வருஷங்கள் பல ஓடின. குண்டலையின் வாழ்க்கை இன்ப மயமாகவே இருந்தது. ஒருநாள் பூர்ணிமை. மேன்மாடத்திலே நிலவிலே உட்கார்ந்திருந்தாள் அவள். தன் இன்பமயமான வாழ்க்கையை எண்ணி எண்ணி அவள் மனம் சந்தோஷத்தினால் நிறைந்திருந்தது. தன் கணவன் "திருந்திய வாழ்க்கை மருந்தினும் இனிது" என்பதற்கேற்க நடந்து கொள்வதை நினைக்கும் பொழுதெல்லாம் அவள் முகத்தில் புன்சிரிப்பின் ரேகைபடர்ந்தது. குண்டலா ! என்றகுரல் கேட்டு மெய் சிலிர்த்தாள் அவள். மறுவிநாடி அவள் எதிரே நின்றான் காளன்.

அவன் கண்கள் பாதிமூடியிருந்தன. கட்டமைந்த அவனது அழகிய மேனியினின்றும் சந்தனப் பூச்சின் சுகந்த மணம் அங்கே நிறைந்து நின்றது. அழகிய மலர்மாலை அவன் அகன்ற மார்பின்மீது புரண்டு கொண்டிருந்தது. கண்களை மலரவிழித்து அவனது பேரெழிலை அப்படியே பருகிவிடுபவள் போல் பார்த்தாள் குண்டலை. அவள் அருகே நெருங்கி அந்தப் பளிங்காசனத்தின் மீதே அவனும் உட்கார்ந்தான். அவள் மெல்லநகரத் தொடங்க அவளது இருகரங்களையும் பற்றி "எங்கே! எழுந்து ஓடி விடுவாயோ ? பல வருஷங்களாகியும் இன்னும் நீ மணப் பெண் போலவேதானிருக்கிறாய் என்று அவளை இழுத்து உட்காரவைத்தான். அவள் முகம் நாணத்தாற் சிவந்தது.

* * * *

நடு நிசி. அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். சாளரத்தின் வழியே வீசிய நிலாக் கதிர்கள் அவள் முகத்திற்குப் புதியதோர் சோபையைக் கொடுத்துக்கொண்டிருந்தன. மாசற்ற அந்த முகத்திலே இளமுறுவல் அரும்பிக்கொண்டிருந்தது. ஒரு வேளை ஏதாவது இன்பகரமான கனவு காண்கிறாளோ ?

அவன் தூக்கம் பிடியாதவனாய் எழுந்து உட்கார்ந்திருந்தான். அவன் கண்கள் குரூரமாய் அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன.

"ஊடலானால்தா னென்ன ? அதற்கும் ஒரு எல்லையில்லையா ? என்ன அகங்காரமும் கர்வமும், அடேயப்பா ? நீ கள்வனல்லவா? என்று நெஞ்சும் குடலும் அஞ்சாமல் நேருக்கு நேராய் என்னையே கேட்டாளே ! என்ன தைரியம் ! என்ன துணிச்சல் ! இவளுக்குச் சரியான தண்டனை விதிக்காவிட்டால் நான் கள்ளனா ? கள்வன் என்று தெரிந்துதானே ஆசைகொண்டாள்! பிறகு இகழ்வதா ? ராஜ தண்டனையிலிருந்து விடுவித்ததனால் என் உயிர் இவளுக்கே சொந்தமென்று நினைத்துவிட்டாளோ ? மற்ற சாமான்ய மனிதர்களைபோல நீ ஆட்டிவைத்த கூத்திற்கெல்லாம் ஆளாகிநிற்பான் என்று நினைத்தாயோ ? மனதிலிருப்பதுதானே வாயில்வரும். நெடுநாளாகவே கள்வன்தானே என்று ஒருஅலக்ஷியம் இருந்திருக்கும் உன்நெஞ்சில்,

அது சொல்லளவில் வந்துவிட்டது. படித்தவளல்லவா? அதற்குமேல் சாக சமும் சாமர்த்தியமும்! உள்ளம்கவர் கள்வன், கண்விழி நுழைந்த கள்வன் என்றெல்லாம் கதைக்கிருள்! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிவா? இருக்கட்டும், இருக்கட்டும். நாளைக்கு மலைக்குப் போகலாமென்று அழைத்துப்போய் தகுந்தபடி செய்கிறேன். இந்தக் காளனை அவமதித்தவர்கள் எந்தக் கதிக்கு ஆளாவார்கள் என்பதை அவள் உணரட்டும் என்று எண்ணியவனுய் அவ்வறையில் முன்னும் பின்னுமாய் உலவலானுன்.

* * * *

வானை அளாவிநின்ற செங்குத்தான மலை. மிகுந்த உற்சாகத்தோடு துள்ளி விளையாடும் சிறு குழந்தைபோல காளனைப் பின்தொடர்ந்து அந்த மலைமீது தாவியும், குதித்தும் ஏறிக்கொண்டிருந்தாள் குண்டலகேசி. அற்புதமான காட்சிகளைக் காணப்போகிறோமென்ற எண்ணத்தினுல் அவள் மனம் துடித்துக்கொண்டிருந்தது. களைப்பினுல் மூச்சுத்திணற மார்பு படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. முகத்திலே முத்து முத்தாய் வியர்வை அரும்பி நின்றது.

ஆயிற்று. உச்சியை அடைந்து விட்டோமென்று சொல்வதுபோல் அவளைத் திரும்பிப் பார்த்தான் அவன். அவளோ மிகுந்த குதூகலத்துடன் "ஆயிற்ரு? இதுதான் சிகரமா? கோயிலும் அருவியும் எந்தப்பக்கம்?" என்ருள். அப்பொழுது அவன் முகத்தில் தோன்றிய மாறுதல்களைக்கண்டு அவள் திகைத்து நடுங்கிப்போனுள். அந்த நிலையிலேயே மிகவும் பயங்கரமான இடிக்குரலிலே காளன் அவள் மீது குற்றச்சாட்டைச் சொல்லத் தொடங்கினுன். அவள் மனம் பரம வேதனையை அடைந்தது. "அடாடா! நாமே நமக்கு நமனுகி விட்டோமே! விளையாட்டு வினையாய் முடிந்ததே!" என்று தவித்தது அவள் நெஞ்சம். இன்னும் என்ன சொல்லப்போகிருனே என்று சிந்திக்கவும் அவகாசமில்லை.

"உன் குற்றங்களுக்கு ஏற்ற தண்டனை இங்கிருந்து உன்னை உருட்டி விடப் போகிறேன். கடைசியாய் ஏதாவது சொல்லிக்கொள்ள விரும்பினுல் சொல்" என்ருன்.

ஒரே ஒரு க்ஷணம், எதிர் பாராத இந்தப் பயங்கரமான நிகழ்ச்சியினுல் அவள் இதயம் தூள் தூளாய்ச் சிதறிப்போனதுபோல் தோன்றிற்று, சமாளித்துக் கொண்டாள். பளிச்சென்று அவள் மனதிலே என்ன தோன்றிற்ரே?


தலை குனிந்து கரங்களைக் குவித்தவளாய் "நானே தங்களைத் தெய்வமாக வரித்து மாலையிட்டேன். இப்பொழுது உங்கள் கையினுலே மரணமடைவதும் சந்தோஷமே; கடைசியாகத் தங்களை மும்முறை வலம்வந்து வணங்கி உயிரை விடுகிறேன்" என்ருள். அவள் குரல் கம்மிப்போயிற்று.

'ஓகோ! அப்படியா?' என்று கேட்பவன்போல் ஒரு பயங்கரமான பேய்ச் சிரிப்புச் சிரித்தான் அவன். அந்தச்சிரிப்பின் ஒலி நிர்மானுஷ்யமான அந்த மலைப் பிரதேசமுழுவதும் சிலை ஓடிற்று. அவள் கரங்குவித்தவளாய் மெல்ல மெல்ல அவனைப் பிரதக்ஷிணம் செய்யலானுள்.

ஆயிற்று, ஒருமுறை; இரண்டாவதும் ஆயிற்று, இன்னும் சில நிமிஷங்களோடு அவளுடைய இந்த உலக வாழ்க்கை முடிந்துவிடும். மூன்ருவது முறை அவனைச் சுற்றி வரும்பொழுது எங்கிருந்துதான் அந்த அசுர பலம் அவளுக்கு வந்ததோ? அயர்ந்து நின்றுகொண்டிருந்த அவனைத் தடாலென்று தள்ளிவிட்டாள்-

'ஐயோ!' வென்ற அலறல் அந்த மலையிலே மீண்டும் எதிரொலித்தது. பின்பு, தன் செயலினுல் மனம்நொந்த அவள் துறவியாகி மதப் பிரசாரம் செய்து எஞ்சிய நாட்களைக் கழித்தாள் என்று சரித்திரம் சொல்லும்,

# நந்தவனம்



## வஸந்தருது மலர்

183092

183092

# ரிஸர்வேஷன் கூபன்

பெயர் ..........................................................................................

முழு விலாசம் ..................................................................................

தபாலாபீஸ் பெயர் (இங்கிலீஷில்)..........................................................

தேதி.......................1944

## நிபந்தனைகள்

கையெழுத்து

1. மணியார்டர் மூலமாகத்தான் பணம் அனுப்பவேண்டும். போஸ்டல் ஆர்டரோ, செக்கோ அனுப்பவேண்டாம். ஏஜெண்டுமூலம் ஆர்டர் செய்வோர் இந்த கூபனை பூர்த்திசெய்து, பணத்தை ஏஜண்டிடம் கொடுக்கவும்.

2. 12-5-44ல் தபாலில் "ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்" வாங்கி அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பிய பிரதி தங்களுக்குக் கிடைக்காவிடில் நாம் ஜவாப்தாரியல்ல. ரிஜிஸ்தர் போஸ்டு மூலம் அனுப்பவேண்டுமானால் 3 அணா அதிகம் செலுத்தவேண்டும்.

3. கூபனில் கொடுக்கும் விலாசத்திற்கு நந்தவனம் அனுப்பப்படும். விலாசம் மாறும் நேயர்கள் உடனே புதிய விலாசத்தைத் தெரியப்படுத்தவும்; அவ்வாறு தெரிவிக்காது பழைய விலாசத்திற்கு மலர் அனுப்பப்பட்டு தங்களுக்குக் கிடைக்காவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

4. கூபனை புக்போஸ்டில் முக்காலணா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பலாம். கடிதம் எழுதினால் தபால் கவரில் அனுப்பவேண்டும்.


## 23

அன்று இரவு புண்ணியமூர்த்தி வருவதற்கு சற்று நேரமாகியது. அவரது வருகைக்காக கீர்வாணிகாத்திருந்து ஆகாரங்கொடுத்து உபசரித்த பின் மெல்லஉட்கார்ந்தாள். "டாக்டர்! நான் சத்தியமாகச்சொல்கிறேன். எனக்கு உடன்பிறந்த ஒரேதம்பியிடம் என்னுயிரையே நான் வைத்தது போக இப்போது எனக்கு அவனிடம் அன்புக்குப் பதில் அருவருப்பும் ஆத்திரமும்தான் உண்டாகின்றன. இந்தச்சினிமாக் கூட்டம் வருவதும் போவதும் எனக்குக் கட்டோடு பிடிக்கவே இல்லே. இவர்கள் என்று நம் வீட்டைவிட்டுத் துலேவார்கள்? இதற்கோர்வழி செய்யக்கூடாதா! இந்த அவமானம் என்னல் தாங்கவேமுடியவில்லே." என்று மெல்ல ஆரம்பித்தாள்.

புண்ணியமூர்த்தி பதில் பேசாமல் சிரித்தார். கீர்வாணியின் களங்க மற்ற முகத்தின் சோபையும் தூயஇதயத்தின் வேகமும் அவர் மனக் கடலின் ஆழத்தைத்தொடுவதுபோலிருந்தது. கீர்வாணியின் கைகளேப் பிடித்துக்கொண்டு "வாணீ! பதருதே...முள்ளுமீது சீலேயைப்போட்டால் மெள்ளத்தானே வாங்கவேண்டும். வெளியில் எனக்குக்கூடத் தலேகாட்ட முடியவில்லே. நானே சினிமாக்கம்பெனி வைப்பதாயும், சினிமாவில் நடிக் கப்போவதாயும், நிருபமாவை வைத்து முதல்தரமான படம் எடுக்கப் போவதாயும், முடிவில்லாத வதந்திகள் உலாவுகிறதைக் காதால் கேட்க முடியவில்லே. நம் வீடேறிவந்தபிறகு என்ன செய்வது? கழுத்தைப்பிடித்தா தள்ளுவது? பொறு. துலேந்துபோகட்டும். உன் தம்பியின் வாழ்வு பாழ்பட்ட தில்லாமல் லலிதாவையும் பாழாக்கிவிட்டதுதான் எனக்கு ஆறவில்லே... சரி...அதைப்பற்றி இப்போதெதற்கு பேச்சு? மணி 10 அடிக்கப்போகிறது. அனுராதா இன்று மிகவும் பயந்துபோய் ஏதோமாதிரி இருக்கிருள். துணேக்கு நர்ஸுகள் இருந்தும் அவள் மனது சாந்தியடையவில்லே. இந்த திகிலில் ஏதாவது ஜுரம் அதிகரித்துவிட்டால் கஷ்டம். ஆகையால் உன்னேயும் சிவகுமாரனேயும் துணேக்கு அனுப்புவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். காரை இன்னும் ஷெட்டில் விடவில்லே. சிவகுமாரனே அழைத்துக் கொண்டு போகிருயா!" என்று அன்பொழுகக்கூறினர்.

கீர்வாணி தடைசொல்லாது எழுந்து சிவகுமாருடன் ஆஸ்பத்ரிக்குச் சென்ருள். எத்தனே ச்ரமமான வேலேகள் செய்துவந்தபோதிலும் அவர் முகத்தைச் சுளிக்கவேமாட்டார். புண்யமூர்த்தியின் புகழுக்குக் காரணம் அவருடைய கைராசிதான் என்பார்கள் சிலர். சிலர் தெய்வ பக்தியும் உத்தம குணமுந்தான் என்பார்கள். வேறு சிலர் அவுடதத்தைவிட பரம அவுடதமானது அவருடைய அன்பும் தைரியமும் நம்பிக்கையும் கலந்த மொழிகள்தான் நோயாளிகளின் மனதில் பதிந்து நோயை குணப்படுத்து கின்றன; வாக்கு வன்மையும் நேசமுந்தான் காரணம் என்பார்கள்.

எது எப்படியானுல் என்ன? அவரைப் புகழும் கூட்டம் 100 பேர் இருந்தால் இகழும் ஆத்மாக்களும் ஒன்றிரண்டு இல்லாமலா போகும்? சாக்ஷாத் சர்வேச்வரனுக்கே எதிரிகளும், இகழ்ச்சிகளும் இருக்கும்போது சாதாரண மனிதர்களுக்குக் கேட்கவேண்டுமா! எத்தனே அலுப்பானுலும் தினசரி பத்திரிகையைப் பார்க்காது இருக்கமாட்டார். யுத்த சமாச்சா ரத்தை ஸ்வாரஸ்யமாகப் படிக்கும்போது மணி 11 அடித்தது. அச்சமயம் அவருக்குப் பக்கத்தில் பூனேபோல் சந்தடி செய்யாமல் மாயாதேவி வந்து அவரது கரத்தைப் பற்றிக்கொண்டு "மணி பதினென்ருகிவிட்டதே இன் னும் தூங்கவில்லேயா! டாக்டர்!" என்று கூறிக்கொண்டே அந்த சோபா



வின் பிடியில் உட்கார்ந்து மற்றொரு கரத்தை புண்ணியமூர்த்தியின் தோள் மீது சற்றும் கூச்சமோ,பயமோ ஏதுமின்றி போட்டுக்கொண்டாள்.

புண்ணியமூர்த்தி திடுக்கிட்டார். அவர் தேகம் நடுநடுங்கியது. அவருடைய வாழ்க்கையில் இதுவரையில் ஆயிரக்கணக்கான நோயாளிகளின்—அதிலும் நல்ல யுவதிகளின்—கையைப் பிடித்து நிஷ்களங்கமான இதயத்துடனும் பார்க்கும்போதுகூட அவர் மனது அச்சத்தினால் சில வினாடி துணுக்குறும்.தனது கீர்வாணியைத் தவிர இதுவரையில் இதரப்பெண்களை அவர் களங்கத்துடன் பாரத்ததில்லை. ஆடவராகிய அவருக்கே அச்சமும் நடுக்கமும் உண்டாகும்படி இச்சினிமாசுந்தரியின் - செய்கையால் வெருண்டுபோய் துடிதுடிப்புடன் சடக்கென்று எழுந்துநின்று "ஹா!...

தாங்களா! மிஸஸ்காப்டன் காந்தனு...என்ன சமாச்சாரம்?'' என்று வெறுப்பை உள்ளடக்கியவாறு கேட்டார்.

மாயாதேவி சடக்கென்று எழுந்து அவரை ஒரே இழுப்பாக இழுத்து சோபாவில் உட்காரவைத்துப் பின், "டாக்டர்! இதென்ன ஓட்டம்? நான் வந்ததுமுதல் ஒருநிமிஷம்கூடத் தாங்கள் என்னிடம் நின்று ஒரு பேச்சு பேசவில்லையே! என்மனத்தை ஜாடைமாடையாக நான் எப்படித்தான் தெரிவித்தும் தாங்கள் அடியோடு...என்று சற்றும் நாணமின்றி மானங் கெட்டுப் பேசவாரம்பித்ததைக் கண்டதும் புண்ணியமூர்த்திக்கு இன்ன தென்று விவரிக்க முடியாத ஆத்திரம் மிதமிஞ்சிவிட்டது.

"கெட்டுப்போனக் கழுதை. அழுகப்பிண்டம். மானத்தை விலைக்கு விற்கும் அற்ப நாய்க்கு இனிமேல் மரியாதை வைப்பதா!'' என்று மகத் தான ஆக்ரோஷத்தையடைந்து, "அடாடாடா! நானும் இத்தகைய அருமை யான சந்தர்ப்பம் வருமா! என்று வெகு ஆவலுடன் காத்திருந்தேன். அது இப்போதுதான் கைகூடியது. தாங்கள் என்னிடம் எதிர்பார்த்தது இதுதானே!''என்று கூறியவாறு கன்னம் புடைக்க பளீரென்று அறைந்து அந்த ப்ரம்மராக்ஷஸியே திகைக்கும்படி அவ்விடத்திலிருந்து தரதர வென்று கையைப் பிடித்து இழுத்து வந்து வெளியே தள்ளிப் பின் "உம். இதுவும் ஒரு கதையில் நடிக்கும் பாகமாயின் ஜனங்களெல்லோரும் கண்டு களித்திருப்பார்கள். அதற்குப் பாக்கியமில்லாது போய்விட்டது. பிசாசே! காந்தனின் அறிவை மயக்கி அடிமைகொண்டதுபோல் இந்த புண்ணிய மூர்த்தியையும் எண்ணிவிட்டாயா! நாயே! வீட்டைவிட்டு ஓடு, ஆபாஸக் குப்பையின் நாற்றம் சகிக்கமுடியவில்லை. இனி இப்பக்கம் தலைகாட்டாதே'' என்று கடுமையான த்வனியில் கூறினர்.

மாயாதேவியின் விசும்பலும் பொருமலும் மட்டும் கேட்டன. ஆனல் பேச்சு சந்தடியே இல்லை. "இப்படியும் ஒரு பெண்பிள்ளையிருப்பாளா! பெண்கள் கற்பலங்காரிகள்; உத்தம சதிகள்; சத்குண சம்பன்னைகள், மானத்தின் ஆதிதேவதைகள் என்றெல்லாம் புராணங்களும், பெரியோர் களும் பறைசாற்றுகையில் அத்தகைய குலத்தில் பிறந்தும் பேயாகவிருப் பது காண உள்ளம் துடி துடிக்கின்றதே.'' என்று புண்ணியமூர்த்தி அபார மான வெறுப்பும் துக்கமும் அடைந்து கலங்கித் தவிக்கிருர்.

"ஐயோ! இத்தனை படிப்பும் படித்துவிட்டு அறிவுக்களஞ்சியமாகவிருந்த காந்தனின் மதி இப்படியா பாழாகிவிடவேண்டும்? மகா ரூப சுந்தரியாயும் குணவதியாயுமிருந்த மனைவியைப் போக்கடித்துவிட்டு இந்த ஊழல் பிண் டத்தினிடம் சிக்கிக்கொண்டு கண்ணியமிழந்து கௌரவமழிந்து கண்ட வர் காரியுமிழ்ந்து எண்ணி நகையாடும்படிக்கு ஆய்விட்டானே! அதுதான் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. தான் கெட்டதுமின்றி அப்பெண்ணையும் கெடுத்துக் குட்டிச்சுவரடித்த வயிற்றெரிச்சல் எப்படி ஆறும்?'' என்று தன்போக்காகச் சொல்லிக்கொண்டிருக்கும்போது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க சுகுமாரன் வந்து 'வயது ஆகஆக புத்தி தடுமாற்றமும் விபரீதமுமாகிவிட்டதுபோலிருக்கிறது. எடுத்த புகழை எரித்துக்கொள் ளவா பார்க்கிறீர்கள்? மாயாதேவி தங்களிடம் ஏதோ முக்யமான விஷ யத்தைப் பற்றிப் பேசவந்தால் அவளை அவமானப்படுத்தி கன்னத்தில் விரல்கள் பதியும்படி அடித்துத் துரத்துவதுதான் யோக்யதையோ? மாமா மிகவும் ஆத்திரங்கொண்டு இந்த இரவிலேயே அவளையும் லலிதகுமாரியை யும் அழைத்துக்கொண்டு ஹோட்டலிலேயே தங்குவதற்குப் புறப்பட்டு விட்டார். வீடேறி வந்தவர்களை, அதிலும் சம்மந்தியாகப்போகின்ற கண்ணி யம் நிறைந்தவர்களை இப்படியா அவமானப்படுத்துவது? அவர்கள் மனது

நொந்துபோனதால் லாபநஷ்டம் யாருக்கு? எத்தனையோ மரியாதை தெரிந்த நீங்களே கேவலமாக நடந்துகொண்டால் உலகம் சிரிக்காதா! அதோ அவர்கள் போகிருர்கள் என்று ஆத்திர மிகுதியால் தகதகவென்று குதிப்பதை வெகு சாந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்த புண்ணியமூர்த்தி கலகலவென்று பெருநகை புரிந்தவாறு, "அடாடாடா சுகுமார்! எத்தனை நல்ல சங்கதியைச்சொன்னுய்! நம்மை பிடிக்கவந்த பிசாசு தொலைந்துவிட்ட சுபகரமான செய்தியைக் கேட்டு என் மனது எப்படித்தான் பொங்குகிறது தெரியுமா? இந்த ஆனந்தகரமான விஷயத்தைக் கூறியதற்காக உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்?" என்று கூறியதைக் கேட்டு நரஸிம்மாவதாரமே எடுத்துவிட்ட சுகுமாரனின் தோற்றம் புண்ணியமூர்த்தியை அப்படியே அடித்துவிடுவான்போல் தோன்றியது. பல்லைக் கடித்து "உண்மையில் பித்தம் தலைக்கேறிவிட்டதோ! அன்றி அகம்பாவமும், கர்வமும் தேவடியாள் சிறுக்கியின்மீது கொண்ட மோகமும் கூடி அறிவை அழித்துவிட்டதோ! தெரியவில்லை. விபரீதகாலத்திற்குத்தான் இத்தகைய புத்தி தோன்றியிருக்கிறது. இத்தகைய மரியாதை கெட்ட வீட்டில் இனி நான் வாழ முடியாது. மாமாவுடன் நானும் சீமைக்குப் போகிறேன். அவர் லலிதாவையும் என்னையும் அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்து, அதைத்தெரிவிக்கவே மாமி இங்கு வந்திருப்பார்கள். நானும் போகிறேன்" என்று படபடத்துக் கூறினன்.

புண்ணியமூர்த்தி "அப்பனே! போய்வருகிறேன்" என்று சொல்லு; போகிறேன் என்று சொல்லக்கூடாது. ஒரே மரத்தில் காய்த்த எலுமிச்சம்பழங்களில் சில ராஜாக்களின் தரிசனத்திற்கும், சில எம்பெருமானின் திவ்ய மங்கள விக்ரகத்தை சுத்தி செய்வதற்கும் சில உத்க்ருஷ்டமான மருந்துகள் ஊறுகாய்கள் சமையல் முதலியன செய்வதற்கும், சிலவோ, மந்திரம், தந்திரம், சூனியம், த்ருஷ்டி, பலி, காவு முதலிய கெட்ட காரியங்களுக்கும் உதவுகின்றன. அதது செய்த பாவம். என் வயிற்றில் நீ இப்படி பிறந்திருப்பது நீ செய்த பாவந்தான்.

சுகுமார்! உன்னை நான் அடக்கிஆளத் தயாராகவில்லை. உனது பலங்கொண்டமட்டும் தூக்கி உயரத்தில் பந்தை அடித்தாலும் அது மறுபடியும் கீழேதான் வந்துவிழவேண்டும். ஓடியாடித் திரிந்து மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாக டாக்டராகிய என்னிடமே மருந்துக்கு வந்துசேரு. நீ எப்படித் திரிந்தாலும் நீ க்ஷேமமாக தீர்க்காயுஸுடன் இருக்கும்படி நான் பகவானை ப்ரார்த்தித்தபடியே இருப்பேன். உன்னை வேண்டாமென்றுல் நீ நிற்கப்போவதில்லை. நான் ஏன் எனது மரியாதையைக் குலைத்துக்கொள்ளவேண்டும்? மகாராஜனுகப் போய்வா" என்று வெறுப்பும் கோபமும் த்வனிக்கக் கூறினர்.

ஆனல் அவர் வார்த்தைகள் முடியும் வரையில் அவன் அங்கு நிற்கவில்லை. பெத்த மனத்தின் போராட்டம் இளங்காளையின் முரட்டுப் பிடிவாதத் திமிரிலும், புது மோகவெறியிலும் எங்ஙனம் தெரியும்? தாய் உள்ளத்தின் மகிமையையும், தந்தை இதயத்தின் துடிப்பையும் அறியும் சக்திதான் ஏது?

## 24

அதிகாலையில் கீர்வாணி சிவகுமார் இருவரும் வந்தார்கள். வாசற்படி ஏறும்போதே வீடு சந்தடி இன்றி ஜில்லென்றிருப்பதைக் கண்டு வியந்தவாறு உள்ளே வந்ததும் வீட்டில் தாறுமாருக சாமான்கள் இருப்பதோடு மனிதர்களையே காணுது காலியாயிருந்தது கண்டு வியப்புற்றவாறு வேலைக்

கார குப்பனை நோக்கி "எல்லோரும் எங்கேடா காணவில்லை! அதிகாலை யிலேயே விருந்து வந்துவிட்டதா என்ன!" என்ருள்.

குப்பன்:—எனக்கு விவரம் தெரியாதம்மா! இரவு 12 மணிக்கே எல்லோரும் நம்ப சின்ன எஜமான்உள்பட வெளியே போய்விட்டார்கள். பெரிய ஐயா இன்னும் கீழே வரவில்லை.........

என்று அவன் சொல்கையில் புண்யமூர்த்தி கீழே வந்தார். கீர்வாணி யின் வியப்பையும் திகைப்பையுமறிந்து நகைத்து "என்ன யோசிக்கிருய் கீர்வாணீ! எல்லாப் பரிவாரங்களும் இரவோடிரவாக போய்விட்டன. உன் னருமை மகன்கூட போயிருக்கிருன் கீர்வாணி! பயப்படாதே. (நடந்த விஷயங்களைக் கூறி) எல்லாம் நல்லதற்கே என்று மனந்தேறு. பகவானை நம்பியிருந்தால் நன்மை கிடைக்குமேயன்றி தீமை வராது" என்று கூறி முதுகில் தட்டிக்கொடுத்தார்.

என்னதான் வைராக்யத்தை வரவழைக்க நினைப்பினும் அது அத் தனை எளிதில் வந்துவிடும் பொருளா! தன் உடன்பிறந்த சகோதரன், தாயில்லாப் பெண்ணுகிய மருமகள், வயிற்றில் பிறந்த பிள்ளை ஆகியவர் களின் பாசத்தை அறுத்தெறிவதென்பது கிள்ளுக்கீரையா?

"சுகுமாரனு சீமைக்குப் போகிருன்? அந்த சினிமாக் கள்ளியா மகா பரிசுத்த ஆத்மாவாகிய தங்களை இவ்விதம் செய்தாள்!" என்று அன்னமாறி அங்கலாய்த்துக் கண்ணீரும் விட்டாள். என்னிடம் சொல்லிக் கொள்ளாமலா சுகுமாரன் போய்விட்டான்! அதற்குக்கூட நான் அரு கதையற்றுவிட்டவள் என்று ஒதுக்கிவிட்டானு! இதற்குள் கப்பலேறி இருப் பார்களா? அவனைப் பார்த்து செஞ்சிக் கூத்தாடி போகவேண்டா மென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று பொருமிக்கொண்டே கூறினுள்.

புண்:—உம்...பேதைப் பெண்ணே! பெத்தமனம் பித்தல்லவா! கீர்வாணீ! உனக்குமுன் நான் அவனை நிறுத்தவேண்டுமென்ருல் நிறுத்தி யிருக்கமாட்டேனு! அவனுடைய அப்போதைய ஆவேசத்தை நீ பார்த் திருந்தால் நடுங்கிப்போயிருப்பாய், எந்த தெய்வத்தின் அனுக்ரகமோ! என் மீது அடிவிழாது தப்பினேன், அவன் உன் சொல்லுக்குக் கட்டுப்படும் நிலைமையிலிருப்பவனுயிருந்தால் அவன் நடந்துகொள்ளும் மாதிரியே வேருக விருக்குமல்லவா! பொறு! மனத்தைத் தளரவிடாதே. என் னென்ன நடக்கிறதோ பார்க்கலாம். அல்பர்களிடம் நாம் அகப்பட்டுக் கொண்டிருப்பதால் அதையொரு பரிக்ஷை என்று திடமடைய வேண் டாமா! கீர்வாணீ! அநுராதா எப்படியிருக்கிருள்? இரவு தூங்கினுளா! நிருபமாவை அங்கேயேவிட்டுவந்தாயா!" என்று வார்த்தையை மாற்றினுர்.

கீர்:—அநுராதா சவுக்யமாயிருக்கிருள். நன்ருகத் தூங்கினுள். அவ ளும் நிருபமாவும் இணை பிரியாத தோழிகளாகிவிட்டதால் அவளிடமே விட்டுவந்தேன், இன்றுதான் நம்வீட்டு கலாட்டாவெல்லாம் அடங்கிவிட் டதே. குழந்தைகளை வீட்டிற்கே அழைத்துவந்து விடலாமே,

புண்:—நானும் அதற்காகத்தான் கிளம்பினேன். சிவகுமாரன் என்ன இத்தனை மவுனம் சாதிக்கிருன்? ஆனுல் முகத்தைப் பார்த்தால் ஏதோ பல மான விஷயத்தைக் கூறப்போவதாக உதடுகள் சொல்கின்றன. அப்படித் தானே!...என்ருர்.

அத்தனை கலக்கத்திலும் கீர்வாணி களுக்கென்று சிரித்துவிட்டாள். சிவகுமாரனும் சிரித்தபடியே "ஆமாமப்பா! மிகவும் முக்கியமான விஷ யம் ஒன்றை உங்களுக்குத் தெரியாமலேயே நான் கண்டுபிடித்துவிட்டேன். அதைக் கூறவே சமயம் பார்த்திருந்தேன். இப்போதுதான் கிடைத்தது. காந்தாமணி இறந்துபோகும் சமயம் தன் சரிதையை உங்களுக்குச்

சொன்னுளே! அப்போது நிருபமா குழந்தையாக விருக்கும் போது எதிர்வீட்டில் யாரோ இருந்ததாயும் அவர்களுடைய பையனுக்கு நிருபமாவை தாசிப் பெண்ணில்லாதிருந்தால் கட்டாயம் கல்யாணத்தைச் செய்துவிடுவேன் என்று சொல் லியதாயும் சொன்னுர்களே! நினைவிருக்கிறதா!

இதைக் கேட்டு பரம ஆச்சரியமடைந்த புண்ணியமூர்த்தி...' ஆமாம் ... ஆமாம்... நன்ருக ஞாபகமிருக்கிறது. நான்கூட அன்றுமுதல் அவர்கள் யாரு, எங்கிருக்கிருர்கள் என்பதை ஆராய்ந்தறிய வேண்டுமென்றுதா னிருக்கிறேன். ஏதாவது தகவல் கிடைத்ததா?' என்று வியப்புடனும் ஆவலுடனும் கேட்டார்.

சிவ;—கிடைத்திருக்கிறதப்பா! அவர்கள் வடக்கே வெகுதூர தேசத் திலுள்ள ராவல்பிண்டியில் இருக்கிருர்களாம். பையன் கல்கத்தா யுனிவர் ஸிடியில் படிக்கிருனும்; இதுவரையில் தகவல் கிடைத்தது, இனிமேல் மற்றவைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

புஸ்:—ஓகோ! இத்தனை விவரங்கள் தெரிந்துவிட்டதா! ஆமாம்! நான் ஒரு சின்ன விஷயம் கேட்கிறேன். கோபிக்காமல், ஒளிக்காமல் பதில் சொல்...நீ உன் மனப்பூர்வமாக நிருபமாவைக் காதலிப்பதாக நான் இதுவரையில் நினைத்திருந்தேனே! அது உண்மையா! பொய்யா! உன்மன விருப்பம் அப்படியிருக்குமாயின் நான் அதை முடித்துவைக்கவே தயாராக இருக்கிறேன். உன் தாயாரும் அதற்கு மறு பேச்சு சொல்லமாட்டாள்...

கீர்:—(இடைமறுத்து) ஆம். சிவகுமார்! நான்கூட அப்படியேதான் நினைத்திருக்கிறேன். ஏன்? நேற்றுவந்த அநுராதாகூட அப்படி நினைப் பதை பூடகமாகத் தெரிவித்தாள். உனக்கு ப்ரேமையிருந்தால் நீ கட்டாயம் தைரியமாகத் தெரிவித்துவிடு—என்று சந்தோஷத்துடன் தெரிவித்தாள்.

சிவ;—(சிரித்துக்கொண்டே)...ஆம்... நீங்கள் நினைப்பதுபோல் இன் னும் எத்தனையோ பேர்கள்கூட நினைத்திருக்கலாம்...நான் நிருபமாவை மனைவி என்கிற ஸ்தானத்தில் வைத்து ப்ரேமிக்கவில்லை. இது நிச்சயம். அவள் என்னுடன் பிறந்த செல்வச் சகோதரியாக முழுமனத்துடன் ப்ரே மிக்கிறேன். நீங்கள் அவளை உங்கள் வயிற்றில் பிறந்த மகளாக எண்ணி நீங்களே கன்யாதானம் செய்து கொடுக்கவும். நான் உடன் பிறந்தின் முறையில் பொறியிடவும் தாம்பூலம் மடித்துக்கொடுக்கவும் என் மனது துடிக்கிறது. ஒரு சகோதரியில்லாக் குறையை அவள் தீர்த்துவிட்டாள்.

அவளுக்குப் பிறக்கும் குழந்தை என்னை வாயாற மாமா! என்று அழைக்கவும், நான் அதற்கு அம்மான் சீர் செய்யவும் எனக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அதற்கும் கல்யாணமாகிக் கண்குளிர நீங்கள் பார்க்க வேண்டுமென்பதையும் நான் என் மனப்பூர்வமாய் இப்போது முதல் எதிர்பார்க்கிறேன்—

என்று கூறி முடிக்குமுன் கீர்வாணியும், புண்ணியமூர்த்தியும் கட கடவென்று நகைத்து "அடேயப்பா! எத்தனை பெரிய ப்ளான் போட்டிருக் கிருய்? இன்னும் "அடி என்பதற்கு அகமுடையாளைக் காணமாம்: அஷ்ட புத்திரர்கள் எத்தனைபேர்' என்கிற பழமொழிபோல் இருக்கிறதே. பேஷ்! சிவகுமார்! உன்னபிப்ராயத்தை அறிய நான் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தேன், உனக்கு அவள் சகோதரிதானு!...

சிவ:—ஆம் அப்பா! பரிசுத்தமான இதயத்துடன் அவளை என்னு டன் பிறந்த அருமைச் சகோதரியாகவே, பார்த்த நாள் முதல் எணிண்த் தான் நாட்டிய சுற்றுப்ப்ரயாணத்திற்கும் போனேன். என்நிருபமா ஆதி யில் தன்னுடன் விளையாடிக் களித்த அந்த பையனை மறக்கவில்லை என்

பதையும் அறிந்துதான் அவனைத் தேடுவதற்கு நான் முயற்சி எடுத்துக் கொண்டேன். என்முயற்சியும் பலனளிக்கும் என்று நம்புகிறேன்.

புண்:—நினைத்தது தவறிவிட்டதே... நிருபமா என் மருமகளாக வருவாளோ! என்று ஒரு சிறிய நப்பாசை இருந்தது...

சிவ:—என்னப்பா ஏதோபோலப் பேசுகிறீர்களே! மகளைவிடவா மருமகள் உயர்வு? மருமகளைத் தான் அத்தை கண்காணாத சீமையிலிருந்து அன்புடன் அளித்திருக்கிறாளே! அம்மாவின் இனத்தில் ஒரு நாட்டுப் பெண்ணும் அப்பாவின் இனத்தில் ஒரு நாட்டுப்பெண்ணும் கலாதேவியின் அருளால் ஒரு பெண்ணும் உங்களுக்குக் கிடைத்திருக்கையில் குறைவு என்ன? நிருபமாவுக்காக தேடியுள்ள பையன் டாக்டருக்குத்தான் படிக்கப்போகிறானும். மாமனாரும் மருமகனும் மைத்துனனும் (நானும்) ஒன்றாக சேர்ந்து நமது தொழிலும் வெகு அழகாக நடத்தலாமே.

புண்:—பேஷ்! இப்போது சரி. திருப்பித் திருப்பி வளைத்து எதற்காக கேட்டேன் என்றால் நீ உண்மையில் நிருபமாவை நேசிக்கவில்லையா? ஆதியில் அவளுடன் பழகிய பையனின் நினைவு மறக்காதிருப்பதால் அதையே அவளுக்கு முடித்துவைக்கவேண்டும் என்கிற கடமைக்காக உன்னாசையை அடக்கி இப்படிச் செய்கிறாயா என்பதை அறியவே கேட்டேன். இப்போது மனது நிம்மதியாகியதோடு அனுராதாவின்மீது உன் கண்ணோட்டம் சென்றதுபற்றி மிக்க ஆனந்தமாகிவிட்டது, கீர்வாணீ! காலையாகாரங்கூட சாப்பிடாமல் கல்யாண நிச்சயம் செய்தாயிற்று, அதுவும் நன்மைக்கேதான் நடக்கும். சரி. நான்போய் பசங்களை அழைத்துவருகிறேன். சிவகுமார் உண்மையை ஒளிக்காது சொல்வதற்காக மிகவும் பாராட்டுகிறேன்.' என்று கூறிக் காரில் சென்றார்.

கீர்வாணிக்கு எத்தனைதான் மனத்தைக் கட்டுப்படுத்தி பார்த்தாலும் சுகுமாரன் சீமைக்குப் போவதற்கு அவன் மனது இடங்கொடுக்கவே இல்லை. ஏற்கெனவே குணங்கெட்டுப் பாழாகி வரும் அவன் பின்னும் கெட்டுவிடப்போகிறானே என்கிற பயத்தால் இதயம் தவித்தது.

''சிவகுமார்! எனக்கென்னவோ சங்கடம் செய்கிறது. மனத்தில் ஒருவிதமான திகிலும் தவிப்பும் தோன்றி சுகுமாரனுக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ! என்று கூடத் திகில் தோன்றி என்னைக் கொல்லுகிறது. என்ன செய்வேன்? அவர்களிருக்குமிடத்தை விசாரித்தறிந்துகொண்டு போய் எனக்காக நீ சுகுமாரனை ஒருதரம் அழைத்துவருகிறாயா! சிவா... என்ன யோசிக்கிறாய்? உனக்குப் போவதற்குக் கஷ்டமாகத்தானிருக்கும். என் பொருட்டு சற்று போகமாட்டாயா! இதோ பாரு. சிவகுமார்! உன் உடன் பிறந்த அண்ணன் கெட்டுவிட்டால் உனக்குத் தாங்குமா! அந்தமான அவமானம் உனக்கும் பாதிக்குமல்லவா? போகிறாயா?...உன் மாமனையே கண்டு கேட்கிறாயா!'' என்று கண்ணீர் முட்டி வழிய பரிதாபத்துடன் கேட்டாள்.

தான் போகமுடியாதென்று கூறினால் தாயாரின் மனத்திற்கு விரோதமாகவிருக்கும். போனாலோ, ப்ரயோஜனம் ஒன்றுமில்லை- வீண் ரஸாபாஸம் உண்டாவதைவிட வேறு நடக்காது. இந்த தர்ம சங்கடமான நிலைமையில் சிவகுமாரன் சற்று தத்தளித்தான். "அவர்கள் எங்கு போயிருக்கிறார்கள் என்று இந்த பெரிய ஊரில் தேடமுடியுமா! உம். கடவுள் விட்ட வழி" என்று நினைத்தவாறு "அம்மா! உனக்காக நான் இதோ போகிறேன். என்னையவன் அடித்தாலுங்கூட நான் பட்டுக்கொள்ளத் தயார்." என்று கூறிவிட்டு சடக்கென்று வெளியே போனான்.

இதய ஒலி

"மனக்குழப்பத்தில் காலையாகாரங்கூட சாப்பிடும்படிக்குச் சொல்லாமல் பட்டினியாக அனுப்பித்து விட்டேனே!" என்று கீர்வாணியின் மனது தவித்தது. சிறிதுநேரத்திற்கெல்லாம் புண்ணியமூர்த்தி அநுராதாவையும் நிருபமாவையும் அழைத்துக்கொண்டு வந்தார். அநுராதாவின் சந்தோஷமும் பூரிப்பும் சொல்லி முடியாது. அவள் இதயத்தின் ஆனந்த அலைமோதல் 'அகத்தினழகு முகத்தில்' என்றபடி முகத்தில் புதிய தேஜஸும் விகஸிதமும் பளிச்சென்று உண்டாக்கியது.

கீர்வாணி அவளை அன்புடன் உபசரித்துத் தனி விடுதியில் அழைத்துச் சென்று வசதியுடன் படுக்கவைத்துப் பரிந்து காலையாகாராதிகளைக் கொடுத்தாள்.

புண்யமூர்த்தி அநுராதாவை முதுகில் தட்டிக்கொடுத்தபடியே, "செல்வி! செல்வி! இனி உனக்கு ஒருவிதமான குறையும் இருக்காதல்லவா? உன் நாத்தனரின் ஆடலும் பாடலும் அத்புத பேச்சும் உன்னைப் பரவசமூட்டும் என்பதில் ஐயமில்லை. உன் ஓரகத்தியும் கூட இருந்து சந்தோஷப்படுத்துவாள் என்று பார்த்தேன். அது புளித்துப்போய் உண்மைப் பங்காளிகளாகிவிட்டது... என்ன நிருபமா! உன் மன்னியை உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ!" என்று இருவரையும் கேலி செய்தவாறு கேட்டார்.

இரு மங்கையர் மாணிக்கங்களின் முகத்திலும் புன்முறுவலும் சந்தோஷமும் தாண்டவமாடியது. நிருபமா புண்யமூர்த்தியின் கைகளைப் பிடித்துக்கொண்டு... "அப்பா! சின்னண்ணாவுக்கு இந்த தேவதை நிச்சயமாகிவிட்டதா! பேஷ்! பலே பேஷ்! அண்ணாவை மன்னி பார்ப்பதும்... மன்னியை அண்ணா அப்படி ஒரு தினுசாகப் பார்ப்பதும், எனக்கு அப்போதே புரிந்துவிட்டது. மன்னீ! இனி உன்னை அக்கா! பிக்கா! என்று கூப்பிடமாட்டேன். நீ பலே கெட்டிக்காரி! வந்த அன்றே என் அண்ணாவை கண்ணுகிய சிறையில் கட்டியடைத்துவிட்டாயே!" என்று பரிகஸித்துச் சிரித்தாள்.

அநுராதாவின் முகம் வெட்கத்தால் சிவந்து சுண்டியது. புண்ணியமூர்த்தி மீண்டும் சிரித்துக்கொண்டே... "நிருபமா! நீமட்டும் தோற்றவளோ! நீ சிறுவயது முதல் ஒரு பையனைக் கண்ணுகிய சிறையில் இட்டு வதைத்துவருகிறயாமே. அந்த பையனைக் கண்டுபிடித்து வெகு விரைவிலேயே உன்னை தண்டிக்க ஏற்பாடுகளாகிவருகின்றன. உன்னை மட்டும் விட்டுவிடுவேன் என்று எண்ணுகிறயா? உன் தாயார் இறக்கும்போது எதிர் வீட்டில் யாரோ குடியிருந்தவர்களைப்பற்றி என்னிடம் சொல்லியது நினைவிருக்கிறதா! அந்த பையன் கல்கத்தாவிலிருக்கிறனும்' அதை உன் சின்னண்ணாவே கண்டுபிடித்துவிட்டான். அவனே நேரில கல்கத்தாவுக்குச் சென்று விசாரித்துக்கொண்டு வரப்போகிறனும். தெரிந்ததா! இச் செய்தி உனக்கு அளப்பரிய ஆனந்தத்தைக் கொடுக்குமல்லவா?

என்று சொல்லி முடிப்பதற்குள் நிருபமா "போங்கோப்பா! மன்னி எதிரில் என்ன பரிகாஸம்" என்று கூறிக்கொண்டே குபீரென்று ஓடிவிட்டாள். அந்த அத்புதத் தோற்றம் நடனத்தில் ஒரு காக்ஷிபோல் தோன்றியது.

## 25

வெளியே சென்ற சிவகுமாரன் அதி விரைவிலேயே திரும்பிவந்தான். முகத்தில் தெம்போ, சிரிப்போ இல்லை. வரண்ட பார்வையுடன் வருவதைக்கண்ட கீர்வாணி "சிவகுமார்! அண்ணன் அகப்பட்டானு!

என்ன சொன்னான் !'' என்று பெத்த மனதின் தூய அன்புடனும் ஆசையுடனும் கேட்டாள்.

சிவ:—அம்மா ! இதோ இக் கடிதத்தை நமது ட்ரைவரிடம் கொடுத்து அதை உன்னிடம் கொடுக்கும்படிக்கு அண்ணு கொடுத்துவிட்டு அந்தக் கூட்டத்துடன் இன்று காலைவண்டிக்கே பம்பாயிக்குப் போய்விட்டானும். ஆபீஸில் வேலையைக்கூட ராஜீனமாச் செய்துவிட்டதாக அறிந்து வருத்தத்துடன் வந்தேன். இதோ கடிதம்—என்று கொடுத்தான்.

கிர்வாணியின் இதயம் பிளந்துவிடும்போல் துடிக்கிறது. புத்திர வாத்ஸல்யம் லேசானதா! சுகுமாரன் ஊருக்குப்போய்விட்டானு! அந்த சினிமாக்காரர் கூட்டத்துடனு போய்விட்டான். சிவகுமார் ! பம்பாயிக்கு உடனே மறுவண்டி கிடைக்காதா !'' என்று அலறியவாறு கேட்டாள்.

சிவ:—இரவு 8 மணிக்குதான் வண்டியம்மா! இதற்குள் அவர்கள் பாதிவழி போய்விடுவார்கள். நாளை மாலையே பம்பாய் துறைமுகத்தில் ரோஜா என்கிற கப்பல் கிளம்புகிறதாம். தந்தியிலேயே சகல ஏற்பாடுகளும் செய்துகொண்டு திடீரென்று கிளம்பிவிட்டார்களாம். இனி என்ன செய்வது அம்மா ! நீ இப்படி கண்ணீர்விட்டால் அப்பாவுக்கு வருத்தமாகவிருக்கும். அவர் மனதில் கவலை உண்டானல் எத்தனை துன்பமும் ஆபத்தும் விளையும்? உனக்குத் தெரியாதா! எத்தனை நோயாளிகளின் உயிர்கள் அவருடைய கையில் இருக்கின்றன. நோயாளிகளைச் சேர்ந்த எத்தனை மனிதர்களுடைய நம்பிக்கையும் ஆவலும் அவருள் அடங்கி இருக்கின்றன. இதுபோன்ற சிறு கலக்கத்தில் ஏதாவதொரு தவறுதல் நடந்துவிடுமாயின் அதன் பலாபலன் யாரைச் சேரும்?

அம்மா ! டாக்டரின் மனைவியாகவே இருக்கும் நீ ஒரு டாக்டரின் கடமையை அறியமாட்டாயா ! டாக்டர் என்ருல் அந்த டாக்டரின் சொந்த மனிதர்களுக்கு வேண்டுமானல் அவர் சாதாரணமாகத் தோன்றலாம். அவரையே நம்பி முழுமனத்துடன் நேசிக்கும் நோயாளிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும் டாக்டரையேதான் ப்ரத்யக்ஷமாய் பேசும் தெய்வமாய் நினைத்து இதயக் கோயிலில் வைத்துப் பூஜிக்கிருர்கள். அத்தகைய பரிசுத்தமான நம்பிக்கையின் சக்தியை அறிந்து அவர்கள் மனம் த்ருப்திபுறும்படி டாக்டர்கள் நடந்துகொண்டால்தானேம்மா உலகம் அவர்களுக்கு மதிப்பு கொடுக்கும். அதோடு கடவுளின் கருணையும் சுரந்து தன்வந்திரியின் சக்தியில் ஒரு திவலையையாவது இவர்கள்மீது ப்ரயோகிப்பார்.

அத்தகைய தெய்வீக சத்தியை பகவானிடமிருந்து பெறவேண்டுமானல் நேரில் பகவானுக்குத் தொண்டு செய்தோ! சேவைசெய்தோ ! வேண்டியோ ! தவங்கிடந்தோ ! எது செய்தாலும் கிடைக்காது. அந்த பாக்யம் அக் கடவுளின் அடியார்களாகிய நோயாளிகளின் இதயத்தில் அமுதத்தைச் சுரக்கச்செய்து நோயாளிகளின் சொந்தக்காரர்களுடைய உள்ளத்தை தைரியலக்ஷ்மியின் துணைகொண்டு தேறுதல்களாலும் நம்பிக்கையும் அன்பும் பணிவும் கொண்ட நல் வசனங்களாலும் மகிழ்வித்துச் செய்யும் திருப்பணிக்கு மெச்சிதான் அவர் உள்ளம் குழையும். அருள் மழையும் பொழியும். நோயாளி ஆழ்ந்த அன்பையும் நம்பிக்கையையும் அறிந்து ப்ரதியன்புடன் டாக்டர்கள் நடக்காவிட்டால் மனது எப்படித்தான் துடிக்கும். நோயாளிகளிடத்தில் நம்ப அப்பா பிகுவும் அலக்ஷ்யமும் உதாசீனமும் செய்யாமல் எந்த வேளையில் யார் எங்கிருந்து வந்து கூப்பிடும் போதும் சிரித்த முகத்துடன் "இதோ வருகிறேன்"...என்று அன்பு ததும்ப பேசிச் செல்வதால்தான் இன்று டாக்டர் புண்ணியமூர்த்தி என்ருல் எங்

இதய ஒலி

குமே கலியுக தன்வந்திரி என்று மதித்து அளவற்ற அன்பும் நம்பிக்கையும் வைத்துப் பேசுகிறார்கள். அத்தகையவருடைய மனதிற்கு சதா சாந்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கவேண்டிய கடமை உனக்கில்லையாம்மா! அண்ணாவின் விஷயம் அப்பாவுக்குந்தான் விசனமாக விருக்கும். அதை அவர் மறந்து கடமையில் கண்ணாயிருப்பார். டாக்டர் என்றால் பொதுஜனங்களின் சொத்து. பிறரது பிணியைப் போக்குவதிலேயே நினைவுடன் இருக்க வேண்டும். ஆனால் உன் மனத்துடிப்பைப் பார்த்தால் அவர் மனது சும்மா இருக்குமா? அதனால் உண்டாகும் லாபநஷ்டத்தை நாம் கருதவேண்டாமா? அண்ணா சின்ன குழந்தை இல்லை. நன்றாகப் படித்தவன். வயதானவன். எல்லா அனுபவங்களையும் நன்றாக அனுபவித்துக் குட்டுப்பட்டு வரட்டுமே. நீ ஏன் பயப்படுகிறாய் ?—என்று ஒருபெரிய ப்ரஸங்கம்போல் தாயாருக்கே உபாத்தியாயனாகக் கூறினான்.

கற்சிலையைப்போல் அசையாது உட்கார்ந்து இவைகளைக் கேட்ட கிர்வாணி "சிவகுமார்! நீ இத்தனை கெட்டிக்காரனாகி ஆய்விட்டதைக் கண்டு உள்ளம் பூரிக்கிறது. நீயும் உன் தகப்பனாரைப்போல் ப்ரபல டாக்டராகி உலகிற்கு நன்மையைச்செய்து வாழவேண்டும்.

டாக்டர் என்றால் அவன் பிறருடைய மனிதன் என்று தன்னை நினைத்து அர்ப்பணம் செய்து அந்த தூய முறையுடன் வைத்தியம் செய்யும் டாக்டர்கள்தான் நல்ல பதவிக்கு வருகிறார்கள். பணம் பிடுங்குவதிலோ, அலக்ஷியம் செய்வதிலோ பெயர்தான் கெட்டுப் பாழாகும் என்றுமட்டும் நினைக்காதே. நோயாளிகளும் அவர்களைச் சார்ந்த மனிதர்களும் இடும் சாபத்திற்கும் ஆளாகத்தான் வேண்டும்.

சிவகுமார்! என்னால் உன் பிதாவுக்கு எவ்வித கவலையும் கஷ்டமுமின்றி நான் பார்த்துக்கொள்கிறேன், கவலைப்பட்டு ஆவது என்ன இருக்கிறது! எல்லாம் ஆண்டவன் செயல். அவனே இத்தகைய நாடகங்களைக் காட்டுகிறான். அவனேதான் அதைக் கலைக்கவும் முடியும். எனக்குள்ள அஞ்ஞானத்தை ஒரு கடுகளவு போக்கிய உன்னை வயிறார வாழ்த்துகிறேன்."

என்று கூறும்போது சிரித்த முகத்துடன் புண்ணியமூர்த்தி அங்கு தோன்றி, "கிர்வாணீ! ஒவ்வொரு சமயத்திலும் நான் எப்படி வந்து முளைக்கிறேன் பார்த்தாயா! உன் இளைய குமாரனின் அறிவு விசாலத்தை இன்றுதான் கண்டு உள்ளம் பூரிக்கிறது. அதை மத்தியில் கலைத்துச் சிதற வடிக்கக்கூடாதென்றுதான் நானும் கேட்டுக்கொண்டிருந்தேன், அவனும் அடுத்த வருஷம் டாக்டராகிவிடப்போவதால் இப்போது முதல் அதற்கான அஸ்திவாரம்போன்ற நல்ல குணங்கள், நினைவுகள், கடமையில் ச்ரத்தை முதலியவைகள் ஊன்றிப்போவது மிகவும் நல்லது... சிவகுமார்! தீர்க்காயுஷ்மான்பவ" என்று இதயபூர்வமாக வாழ்த்தி மகனைத் தடவிக் கொடுக்கும்போது கண்களில் ஆனந்தபாஷ்பம் துளித்தது.

இந்த மனோகரமான காக்ஷியைக் கண்ட கிர்வாணியின் இதயமும் பூரித்தது. சிவகுமாரனின் உள்ளத்தில் புதிய புதிய இன்ப அலைகள் மோதி எழுந்தன. சில விநாடிகள் மவுனம் குடிகொண்டது. பிறகு புண்ணியமூர்த்தி கிர்வாணியை நோக்கி "கிர்வாணீ! நான் வந்த காரியத்தை மறந்துவிட்டேனே! இன்று சில யாத்ரீகர்கள்—ஊர்ஊராய் கால்நடையாக வருகிறவர்கள்—இந்த ஊருக்கு வருகிறார்களாம். இதோ கடிதம் வந்திருக்கிறது. அந்த அதிதிகளுக்கு நீயும் சிவகுமாரனும் சரியானபடி போஜனமளித்து பஜனைக்கு வேண்டிய சவுகரியங்களைச் செய்துகொடுங்கள்.

நான் ஒரு நோயாளியைப் பார்க்க வெளியூருக்குப்போகிறேன். விரைவிலேயே வந்துவிடுவேன். அப்படி நேரமானால் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றார், அப்போது கீர்வாணியின் கையிலிருக்கும் கடிதத்தைக் கண்டதும் வியப்புடன் இதென்ன கடிதம்! எங்கிருந்து வந்தது? நான் பார்க்கலாமா!'' என்று கூறியபடியே அதை வாங்கிப் பார்த்தார்.

அது ஸ்ரீகாந்தனின் கையெழுத்தா யிருப்பதை யறிந்து "கீர்வாணீ! நான் படிக்கட்டுமா?'' என்றார். எத்தனைதான் வேதாந்தத்தில் மனத்தைக் கொண்டு புகுத்தினாலும் அத்தனை சடுதியில் அப்பாழும் மனம் புகுந்து விடுகிறதா! மறுபடியும் புத்திர வாத்ஸல்யம் பாசிபோல் படர்ந்தது. படியுங்கள் என்று கூறும்போது அவள் குரல் கம்மியது.

## 26

"அக்காவுக்கு வந்தனம்.

உங்களையெல்லாம் நான் கண்ணியம் வாய்ந்த பெரிய மனிதர்கள் என்று முட்டாள்தனமாக எண்ணி மிகவும் கவுரவப்பட்ட என் மனைவியை அழைத்துக்கொண்டு வந்ததன் பலனை அடைந்துவிட்டேன். என் மாயா தேவியின் புகழ் வானளாவுவதையும்; 'அவள்நின்றால் போதும், ஒரு கடைக் கண்ணால் பார்த்தால்போதும், ஒரு வரி தன் பெயரை எழுதிக்கொடுத்தால் போதும்' என்று ஆயிரக்கணக்கான ரஸிகர்களும் கனவான்களும் தவமாதவ மிருந்து காத்துக் கிடக்கிறார்கள். அத்தகையவர்களின் கண் பார்வைக்கும் காணக் கிடைக்காத என் தங்கம், நாத்தனார் என்கிற அபிமானத்தால் இந்த வீடேறி வந்ததற்கு உன் கணவன் காட்டுமிராண்டித்தனமாய் நடந்துகொண்டு அவளைக் கற்பழிக்கஎத்தனித்ததுமின்றி அவள் இணங்காத தால் அவளைக் கன்னம் புடைக்க பேயைப்போல் அறைந்திருக்கும் வயிற் றெரிச்சலை என்னால் சகிக்க முடியவில்லை. பதிலுக்கு உன் கணவனின் மண்டையை உடைத்துவிடவே எண்ணினேன். மகா உத்தமியும், மான வதியுமான மாயாதேவியே என்னைத்தடுத்து சாந்தப்படுத்தி, 'என்னை இக் கதியாக்கிய சண்டாளனை கடவுள் பார்த்துக் கூலி கொடுப்பார்.' என்று மிக்க பெருந்தன்மையுடன் கூறினாள்.

"இனி அரைக்ஷணங்கூட இவ்வீட்டில் இருக்க முடியாது. என் குழந்தை லலிதாவையும் அந்த அயோக்யனின் பிள்ளைக்குக் கொடுக்க முடியாது. அவனுக்கு லலிதா வேண்டுமானால் அந்த கிராதக் தாய் தந்தையை விட்டு வரட்டும். இல்லையேல் எங்களைத் துறக்கட்டும்'' என்று மாயாதேவி கண்டிப்பாய் கூறிவிட்டதால் நான் வீண் ரஸாபாஸம் செய்யாது உடனே கிளம்பினேன்.

உன் மகனை அழைத்து மேற்படி விஷயத்தைக் கூறிக் கேட்டதற்கு அவன் மிகவும் வருந்தி எங்களுடன் சேர்ந்துகொண்டு வந்துவிட்டான். இனி அவனையோ எங்களையோ நீ உன் மனிதர்கள் என்று கனவில் நினைக்கக்கூட யோக்யதை இல்லை. நினைக்கவும் வேண்டாம்.

காந்தாமணி என்கிற தாசியைக் கள்ளத்தனமாக வைத்திருந்து அவளுக்குப் பிறந்த பெண்ணை மானங்கெட்டு கண்ணியமழிந்து வீட்டில் கொண்டுவந்து குலாவுவதோடு நிற்காமல் சின்னமகனுக்கு அந்த தேவடியா மகளை தங்கை என்கிற முறையையும் பாராது விவாகம் செய்ய எண்ணும் மகா புருஷனாகிய உன் கணவனின் வீடேறி நாங்கள் வந்ததைப்போன்ற முட்டாள்தனம் கூறவே முடியாது. இனி எங்களைப்பற்றி எவ்வித கவலையும் வேண்டியதில்லை. உனக்கு சிவகுமாரன் ஒரே மகன் என்று நினைத்துக் கொள்...ஸ்ரீகாந்தன்.''

கடிதத்தைப் படித்தபடியே கீர்வாணியின் முகத்தைக் கவனித்தார். தேம்பித் தேம்பிப் புலம்புவதைக் கண்டு "கீர்வாணி! நீ கூடவா இப்படிப் புலம்புகிறாய்? உன் தம்பி எழுதியுள்ளபடியே, உன் கணவன் ஒரு வேளை...

கீர்வாணி இடைமறுத்து, "டாக்டர்! சோதனை போதும். இத்தகைய புனிதஸ்வரூபனைப் 'பழித்து என் தம்பி மகத்தான பாதகத்திற்கு ஆளாகிவிட்டானே என்று வருந்துகிறேன். என்னைபரமவிரோதியாக சுகுமாரனும் காந்தனும் நினைத்தாலுங்கூட அவர்கள் நீடுழி வாழ வேண்டுமென்று பகவானை வேண்டுகிறேன்" என்று விம்மும் குரலில் கூறினாள்.

அதே கடிதத்துடன் இணைக்கப்பட்டு மற்றொரு கடிதமும் இருப்பதைக் கண்டு அதையும் படிக்கவாரம்பித்தார்.

"அம்மாவுக்கு,

இந்த நிமிஷம் வரையில் நான் ஒப்பிலாத உத்தமர்களின் வயிற்றில் பிறந்ததாக எண்ணி இறுமாப்பும் அடைந்துவந்தேன். அந்த தேவடியாள் சிறுக்கியை வீட்டில் கொண்டுவைத்துக்கொண்ட அன்றே அந்த நம்பிக்கை என் இதயத்தில் சிறிது கட்டு தளர்ந்தது. இன்று மாயாதேவி விஷயத்தில் அப்பா அயோக்யத்தனமாக நடந்துகொண்டதைப் பார்த்தபிறகு முற்றிலும் மனது உடைந்தே போனதோடு, இத்தகைய பசுத்தோல் போர்த்த புலியின் வயிற்றிலா நாம் பிறந்தோம்!... சேச்சே!... புலி என்றால் மிக்க வீரமும் உயர்வும் நிறைந்த ப்ராணியாயிற்றே...... அதுகூடத் தகாது... சொல்லவும் சற்று அச்சமாக இருக்கிறது.

லலிதகுமாரியை நிர்ப்பந்தமாகக் காதலிக்கும்படி நீயே என்னை வற்புறுத்திப் பின் அதைச் சிதைக்கவும் பார்க்கிறாய். என் எதிர்கால வாழ்க்கையின் ஆனந்தம் உங்களிடம் கிடைக்காதென்று எனக்குத் தோன்றியதால் நான் மாமாவுடன் செல்கிறேன். அந்த வேலையை ராஜினமாச் செய்துவிட்டேன். எனக்குண்டான ஆஸ்தியை பகிர்ந்து கொடுத்துவிடவும். என் மேலுண்டான கோபத்தால் சுயார்ஜிதத்தில் பங்கில்லை எனலாம். ஆனால் பிதுரார்ஜிதத்தில் யாரும் மறுக்கமுடியாது. என்னுடைய வக்கீல் சம்பந்தத்தினிடம் நான் சகலமும் சொல்லியிருக்கிறேன். என் சொத்துக்களை அவரிடம் சேர்த்துவிடவும். சுகுமார்"

இதைப் படித்ததும் புண்ணியமூர்த்தி கலகலவென்று சிரித்தார். ஆனால் கீர்வாணி தாங்கமுடியாது புலம்பிக்கொண்டே தடதடவென்று உள்ளே போய்விட்டாள். சிவகுமாரிடம் கூறி அவளைத் தேற்றிச் சமாதானம் செய்யச் சொல்லிவிட்டு புண்ணியமூர்த்தி வெளியே சென்றார்.

"பெத்த மனத்தின் நெருப்புபோன்ற தவிப்பை இந்த உபசார வார்த்தைகளாகிய தண்ணீரினால் அணைக்க முடியுமா! சீக்கிரம் அந்த யாத்திரா கோஷ்டிகளாவது வந்து சேரக்கூடாதா? அந்த மகான்களின் தரிசனத்தின் மூலமாகவாவது சற்று மனச்சாந்தி உண்டாகுமே!" என்று சிவகுமார் உள்ளூர நினைத்தான். தாயாரைத் தன்னாலானமட்டும் சமாதானம் செய்தான்.

ஏதோ ஒருவாறு சாந்தியடைந்தாள் எனினும் முகத்தில் சிரிப்பும் பரபரப்பும் அடியோடு மறைந்தன. சாப்பாடு அடியோடு வெறுத்தது. பகல் ஒருமணி சுமாருக்கு யாத்திரை கோஷ்டியினர் வியர்த்து விலவிலத்து பக்திப்பரவசத்துடன் அத்புதமான ராகத்தில்,

1. நாராயணா! ஹரி நாராயணா! ஸ்ரீமந் நாராயணா!
ஹரி நாராயணா! ஜெய நாராயணா!

2. பக்தவத்ஸலா ! பரமதயாளா !
முக்திப்ரதாயக, நாராயணு ! ஹரி நாராயணு...
3. கோபகுமாரா ! பாபசம்ஹாரா !
சாபவிமோசனு ! நாராயணு ! ஸ்ரீமந்நாராயணு !
4. சங்கடஹாரணு ! மங்களசரணு !
சங்குசக்ராயுதா நாராயணு ! ஜெய நாராயணு !
5. தானவஹாரணு ! தீனஜனுவனு...
மானசம்ரக்ஷணு ! நாராயணு... ஹரி நாராயணு !

ஒரு நாமாவளியை பலவிதமான வாத்யங்களை இசைத்தவாறு கூடவே பாடிக்கொண்டு வரும் இன்ப த்வனியைக் கேட்ட சிவகுமாரன் ஓடோடி வந்து "அம்மா ! அம்மா ! பக்த கோடிகள் வந்துவிட்டார்கள். வாம்மா தரிசனம்செய்து அழைத்துவரலாம். நிருபமா! நீயும்வா"...என்று இருவரையும் அழைத்துச்சென்று விதியிலேயே நமஸ்கரித்து வரவேற்றூர்கள்.

ஒருவரைப்போல் ஒருவர் கட்டுமத்தான திடசரீரமும் பக்தி வைராக்யமும் நிறைந்து காண்போர் மனதைத் தூய்மையாக்கும் வதனங்களுடன் காக்ஷியளித்தார்கள். "ராமமந்திரம்" என்கிற பெயருடைய ஒரு பஜனை மந்திரத்தை இவர்கள் வஸந்தபுரியில் ஸ்தாபித்து அதில் சத்மார்க்கங்களைப் பற்றியும் ஹிந்து தர்மத்தின் தத்துவத்தைப்பற்றியும் பல அரிய சொற்பொழிவுகள் மூலமும், பாடல்கள் மூலமும், சிறிய புத்தகங்களின் மூலமும் ப்ரசாரம் செய்து ஆஸ்திகதர்மத்தை நிலைநாட்டி வருகிறூர்கள்.

முக்கியமான க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஸ்வாமி தரிசனஞ்செய்யவும் புண்ணிய நதிகளில் நீராடவும் அப்படியே மேற்குறித்த ப்ரசாரத்தை செய்து ராமமந்திரத்திற்கு நிதிதிரட்டவும் இந்த கோஷ்டிகள் கிளம்பியிருக்கும் விவரத்தையறிந்து கீர்வாணியும் சிவகுமாரனும் பிரமித்தார்கள்.


களைப்புடன் வந்துள்ள அதிதிகளுக்குக் காலலம்ப ஜலங் கொடுத்து முதலில் களைப்புக்கு எலுமிச்சம்பழ ஷர்பத்தும், மோர்தீர்த்தம், வெள்ளரிக்காய், பழவகைகள் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தார்கள். உடனே பஞ்சபக்ஷ பரமான்னத்துடன் விருந்து தயாராகியது.

அன்று முற்றும் அந்த சத்சங்கத்தின் தரிசனத்திலும் பஜனும்ருதத்திலும் பொழுது மிகவும் சந்துஷ்டியாகக் கழிந்தபோதிலும் இந்த வைபவத்திற்குத் தனது சுகுமாரனும் உடனில்லையே என்று மிகவும் குறையாகவே தோன்றியது. புண்ணியமூர்த்தியும் விரைவிலேயே வந்து கலந்து கொண்டார்.

இதே பங்களாவில் சினிமாக்கூட்டம் வந்து என்ன ஆபாஸக் கூத்து களடித்தன! இன்று மகோன்னதமான பஜனைகோஷ்டி வந்து எத்தனை பரிசுத்தத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கிறூர்கள். என்று புண்ணிய மூர்த்தியின் மனது பூரித்தது.

அக் கோஷ்டியுடன் அனேக பெண்மணிகளும் கால்நடையும் மாட்டு வண்டிச் சவாரியுமாகவே துறவிகளாய் மீராபாயைப்போல் ப்ரகாசமான தூய இதயத்துடனும் வருவதால் கீர்வாணியின் அப்போதிய மனேவ்யாகூலத்தைச் சிறிது மறக்கும்பொருட்டு உடன் அனுப்புவதற்குத் தயாரான புண்யமூர்த்தி கீர்வாணியை" "கூடப்போகிருயா! சற்று மனச்சாந்தியாகவிருக்கும்' என்று கேட்டார்.

சிவகுமாரனுக்கும் அதுவே உசிதமென்றும் மனப்புண்ணுக்கு மருந்து இதுதான் என்றும் தோன்றியது. தானேகூட சில ஊர்களுக்காவது



அழைத்துச்சென்று பிறகு திரும்புவதாகக் கூறி அவனும் தாயாருடன் கிளம்பினான்.

ஒருநாளும் வீட்டைவிட்டு வெளியேறாத கீர்வாணிக்குத் தனது மனோ வேதனை பெரிய மலைபோல் நெஞ்சை அழுத்துவதால் சற்று நிம்மதியாகப் போவதே நலம் என்று பட்டதால் நிருபமாவை வீட்டுப் பொருப்பையும் அநுராதாவின் சிச்ருஷையையும் பார்த்துக்கொள்ளச் செய்துவிட்டுத் தாயும் மகனும் பஜனைகோஷ்டியுடன் கிளம்பினார்கள். புண்யமூர்த்தி ஆனந்தமாக அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றார். அவரது கண்ணிலிருந்து ஆனந்தபாஷ்பம் பெருகியது.

## 27

விளையாட்டுப்போல் மாதம் ஒன்று இரண்டு என்று உருண்டோடி விட்டது. சிவகுமாரன்மட்டும் திரும்பிவிட்டான். அந்த ப்ரயாணத்தின் ஆனந்தத்தினால் கீர்வாணி அனாவச்யமான கவலையை மறந்து பரம வேதாந்தியாயும் மகா பக்தசிகாமணியாயும் ஆய்விட்டதோடு அந்த கோஷ்டியிலுள்ள பெண்களுக்கு மிகவும் வேண்டியவளாகிவிட்டதால் "படிப்பு கெட்டுவிடுகிறது. எனக்குப் பயமில்லை. வெகு சீக்கிரத்திலேயே வந்துவிடுகிறேன். அப்பாவைப் பார்த்துக்கொள்ளு''என்று சிவகுமாரனுக்குச் சொல்லியனுப்பிவிட்டாள்.

சுகுமாரனிடமும் ஸ்ரீகாந்தனிடமும் அவள் வைத்திருந்த அளப்பரிய வாஞ்சையின் எல்லையை புண்ணியமூர்த்தி அறிந்திருந்ததால் அத்தகைய



உள்ளத்திற்கு திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் கீர்வாணிக்கு மூளையே எங்கு கலங்கிவிடுமோ ! என்கிற பயம் மனத்தில் பலமாகத் தோன்றியதால் அவள் மனத்தை எந்தவிதமாகவாவது திருப்பும்பொருட்டு இந்த ஏற்பாட்டைச் செய்தார். ஒரு கஜதூரம்கூட நடந்தறியாத அவள் கால்நடையாக நடந்து சென்றால் உடம்புக்கு ஆகுமா ! அது சாத்யமா!'' என்ற எண்ணம் அவருக்குத் தோன்றாமலில்லை. மனத்தில் உத்ஸாகமும் பற்றுதலும் தெம்பும் உண்டாகிவிட்டால் அந்த பலமே இந்த நடையின் ச்ரமத்தைத் தாங்கிக்கொள்ளும். அதோடு அப்படி உடம்புக்கு வந்தாலும் தாம் குணப்படுத்திவிடலாம் என்கிற தைரியம் பூர்ணமாகவிருந்ததால்தான் அனுப்பினார்.

அவளும் வீட்டுக் கவலையை மறந்து சந்தோஷமாக இருப்பதைக் கேட்டு மகிழ்ந்தார். நிருபமா வீட்டையும் அநுராதாவையும் வெகு மேன்மையான முறையில் அக்கரையாகக் கவனித்துவந்ததில் அநுராதா பூர்ண குணமடைந்து தெளிவுபெற்று பழைய நிலைமையை அடைந்துவிட்டாள். இருவரும் ஒருதாய்வயிற்றுப் பெண்கள்போல் அத்தனை அன்புடன் பழகி வருவதைக் கண்ட சிவகுமாரனும் புண்ணியமூர்த்தியும் உள்ளம் பூரித்தார்கள்.

விவாகமாவதற்கு முன்பே வீட்டுப்பொறுப்புக்களை வெகு கனிகரத்துடன் ஏற்று நடத்த அநுராதாவும் நிருபமாவுடன் போட்டியிடவாரம்பித்தாள். பின்னும் ஒருமாதம் சென்றது. யாத்ரை கோஷ்டியினர்கள் வடக்கே வெகு தூரம் போகப்போவதால் அத்தனை தூரம் தன்னால் போகமுடியாது

என்றும், வீட்டைவிட்டு வந்து வெகு நாட்களாகிவிட்டதால குழந்தைகள் என்ன செய்கிறார்களோ என்றும் இதய குளத்தில் சம்சாரபந்தமென்கிற பாசி லேசாகப்படர வாரம்பித்ததும் கீர்வாணி தக்க துணையுடன் சவுகரியமாகத் திரும்பிவந்தாள்.

யாத்ரை செய்ததின் அலுப்பில் உடல் மெலிவுமட்டும் சிறிது காணப்பட்டதேயன்றி முகப்பொலிவும் தெம்பும் குன்றாது ப்ரகாசிப்பதைக் கண்ட புண்யமூர்த்தி ஆனந்தமடைந்தார். கீர்வாணி தன் மகளும் மருமகளும் வெகு கனிகரத்துடன் குடும்பத்தைப் பார்த்துக்கொள்வதையும் அநுராதா அழகு தேவதையைப்போல் சௌந்தர்ய பிம்பமாய் காக்ஷியளிப்பதையுங் கண்டு ப்ரம்மானந்தமடைந்து இரு பெண்மணிகளையும் நெறித்து முத்தமிட்டாள்.

இந்த கோஷ்டியில் தன்னருமை லலிதகுமாரியும் இருந்து சீர்படாமல் இப்படி தத்தாரியாய்ப் போய்விட்டாளே என்கிற விசனம் தோன்றாமலில்லை, ஆனால் அவள் முன்பிருந்த கீர்வாணியாக இல்லாது நல்ல திடசித்தமும் வைராக்யமும் கொண்டிருப்பதால் அதை அதிகம் பாராட்டவில்லை.

தான் யாத்திரை சென்ற விவரத்தையும் அந்தந்த ஊர்களின் அழகையும் ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பகவான்களின் திவ்ய தரிசனமும், பஜனைகோஷ்டியின் பேரானந்த விருந்தும் தினம் நல்ல விஷயங்களைப்பற்றி அத்புதமாகச் செய்யும் ப்ரஸங்கங்களின் ஸாரத்தையும் அந்த யாத்திரை கோஷ்டியினர் எல்லோரிடமும் தேவதா விச்வாசத்துடன் நடந்துகொண்டு ஆதரிப்பதையும் எல்லோருக்கும் எடுத்துச்சொல்லி இன்பவாரிதியில் திளைந்தாள். 'அனுபவித்ததைச் சொல்லும்போதே இத்தகைய ஆனந்தத்தை அடையும் அவளுடைய உள்ளம் அந்த வைபோகங்களை அனுபவிக்கும்போது எத்தகைய இன்பத்தை—மகிழ்ச்சியை—அடைந்திருக்கும்?' என்று புண்ணியமூர்த்தி தனக்குள் மிக்க சாவதானமாக எண்ணிக் களித்தார்.

எப்படியாவது கீர்வாணியின் மனது சாந்தியடைந்ததோடுமட்டுமின்றி உயர்ந்த நோக்கங்களையறிந்து நல்ல மார்க்கத்தில் ஸாரத்தை அறிந்தது பற்றி உள்ளம் பரவசமானார். சீமைக்குச் சென்றவர்களைப்பற்றிய தகவல் எதுவுமே தெரியவில்லை. கடிதமும் இல்லை. ஆனால் புண்ணியமூர்த்திக்கு மிகவும் தெரிந்த சிநேகிதர்கள் சிலர் பிரபல பணக்காரர்கள்; அவர்கள் பணத்தின் ஜோரில் அதைச் சிலவிட வகையறியாது எப்படியாவது ஒரு பக்கம் கொஞ்சம் கரைந்தால் போதும் என்கிற எண்ணத்துடன் வெளிநாடு சுற்றப் போனார்கள். அவர்களில் ஒருவரிடமிருந்து "சுகுமாரன் சீமையில் சதா சர்வகாலமும் சினிமாக்கூட்டங்களுடன் சுற்றியலைவதும், ஓயாது குடித்துக் கூத்தடிப்பதும் சகிக்கமுடியவில்லை. உன் மகனைக்கூடவா நீ இப்படி விட்டு வேடிக்கை பார்க்கிறாய்?... இன்னும் கொஞ்சங்காலம் இதே நிலைமையில் அவனைவிட்டிருந்தால் குடியின் விபரீதத்தினால் உயிரே போனாலும் போய்விடும். அவனது நிலைமையைப் பார்த்தால் இனி அவன் தாய்நாடு திரும்புகிறவனாகவே தோன்றவில்லை. நாங்கள் வலுவில் பேசச்சென்றாலும் அலக்ஷியமாகப்பேசுகிறான். நீ எங்களுக்குமிகவும் வேண்டியவனாயிற்றே என்று உனக்கு இதை எழுதுகிறோம்." என்று கடிதம் வந்ததைப் பார்த்ததும் புண்ணியமூர்த்தியின் உறுதியான உள்ளமே கலங்கித்துடித்தது. "எனது இரு கண்களைப்போல் இரு பிள்ளைகளை எண்ணி மகிழ்ந்துவந்த எனக்கு ஒரு கண்ணை பகவான் பிடுங்கிவிடு

வாரோ... வைராக்யமும் திடசித்தமும் கொண்டுள்ள என் மனமே இத்தகைய வேதனையை அடையும்போது கிர்வாணி இதையறிந்தால் உயிரே போய்விடுமே. ஏற்கெனவே அவள் மனது கலங்கிக்கிடந்ததை சற்று சமாதானம்செய்வதற்கு ப்ரம்ம ப்ரயத்தனமாயிற்று. இப்போதுதான் கவலையையும் துக்கத்தையும் மறந்து ஒரு மாதிரியாக வரும்போது இக்கடிதம் திடீரென்று இதய ஓட்டத்தையே நிறுத்திவிடுமே...

என்று பலமான அதிர்ச்சியுடன் கலங்கி உட்கார்ந்திருக்கையில் சிவகுமாரன் அங்கு வந்து தகப்பனாரின் சிந்தாக்ராந்தமான நிலைமையைக் கண்டு அருகில்சென்று "அப்பா! என்ன சமாசாரம்? கடிதம் யாரிடமிருந்து வந்தது? அண்ணாவிடமிருந்தா; மாமாவிடமிருந்தா?" என்று கவலையும், ஆவலும் த்வனிக்கக் கேட்டான்.

புண்ணியமூர்த்தி திடுக்கிட்டவராய் "சிவா!... அம்மா எங்கிருக்கிருள்?" என்று பதறியவாறு கேட்டதும் சிவகுமாரனுக்கு கதிகலங்கியது. "என்ன விபரீத விஷயமோ!" என்று நடுங்கினன். "அம்மா தன் அருமைக் குழந்தைகளுடன் பஜனை செய்கிற அழகைப் பார்ப்பதற்கு உங்களை அழைத்துப்போகவே வந்தேன், என்னப்பா விஷயம்?" என்ருன்.

புண்:—விஷயமா... தெரிந்த, எதிர்பார்த்த விஷயந்தான். இதோ என் சிநேகிதன் மகாலிங்கம் கடிதம் எழுதியிருக்கிருன்; இதைப் படித்துப் பார்த்துவிட்டு பத்திரமாக, பத்திரங்கள்போல் பாதுகாப்பான இடத்தில் உன் அம்மாவின் கண்ணுக்குப் படாது வைத்துவிடு. இதிலுள்ள விஷயங்களை ஒரு வார்த்தைகூட அம்மாவுக்குச் சொல்லாதே. இதையறிந்தால் அவளைத் தேற்றவே முடியாது. ரக்ஷகன் ஒருவன் இருக்கிருன். அவன் விட்ட வழியாகட்டும்.—என்று வேதாந்தியாய் பதில் கூறினர்.

சிவகுமாரன் கடிதத்தைப் படித்தவுடனே ஒரே ஷாக்கடித்ததுபோல் இதயத்தைத் தாக்கியது. சுகுமாரன் இத்தகைய வெட்கக்கேடான நிலையிலா இருக்கிருன் என்று நினைக்கும்போது அவன் தலை சுழன்றது. மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

## 28

கிர்வாணி ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கையில் "ஸ்ரீமதி கீர்வாணியம்மாளுக்கு" என்று ஒரு ரிஜிஸ்தர் கவரை தபால்காரன் நீட்டினன். அதைப் பார்க்கும்போதே கிர்வாணிக்குக் குலை நடுங்கியது. கையெழுத்துப்போட்டு வாங்கக்கூட பயந்துபோய் தன் கணவனைக் கூப்பிட்டு வாங்கச்செய்தாள். தன் மகனைப்பற்றிய கடிதமோ! என்ன செய்தி இருக்குமோ! என்று நடுநடுங்கிப் போனாள்.

புண்ணியமூர்த்தியும் கிர்வாணிக்கு யார் ரிஜிஸ்தர்கடிதம் அனுப்பியிருப்பார்களென்று முதலில் சற்று மன அதிர்ச்சியுடன், அனுப்பியவர்களின் விலாசத்தைப் பார்த்ததும் தெளிவடைந்தவராய் 'பயப்படாதே கிர்வாணீ! சீமைக்கடிதமில்லை. இது உள்ளூரின் மிரட்டல் கடிதமாக இருக்குமென்று நினைக்கிறேன். தைரியமாயிரு. படிக்கிறேன்."

"ஸ்ரீமதி கிர்வாணி தேவி அவர்களின் திவ்ய சமூகத்திற்கு ஸ்ரீவேணுகோபாலன் கோயில் முத்திரை உரிமை பெற்ற தேவரடியார்களாகிய கீழே கையொப்பமிட்டுள்ளவர்கள் எழுதிக்கொண்டதாவது.

எங்கள் உறவினளும் இதே கோயில்முறை பாத்யதைக்குக் கட்டுப்பட்டவளுமான ஸ்ரீ. காந்தாமணியின் வயிற்றில் பிறந்த பெண்ணையும் அவளுடைய சொத்துக்கள், ரொக்கம் பத்தாயிரம் ரூபாய் முதலியவைகளையும்

**இதய ஒலி**

துராக்ருதமாக உங்கள் கணவர் அடித்துக்கொண்டு போய் விட்ட விஷயம் உங்களுக்குத்தெரியும். நாங்கள் ப்ரபலமான பல வக்கீல்களிடம் இதுபற்றி விசாரித்தோம். இத்தனை மாத காலமாக இதைப்பற்றியே வெகுப்ரயாஸையுடன் ஆராய்ச்சிசெய்து முடிவுக்கு வந்தோம். தேவரடியாரின் மகளை நீங்கள் உயர்குலத்துப் பெண்ணென்று மயக்கி அழைத்துப்போய் விட்டதால் அது உங்களுக்கு ஜெரித்துவிடாது.

நாங்கள் உங்கள் கணவர்பேருக்குப் பலவிதமான ஆதாரங்களுடன் பல கடிதங்கள் எழுதியும் அவர் அதை லக்ஷியமே செய்யவில்லை. பதில் போட்டால்கூட எங்கே பிடித்துக்கொள்ளுமோ என்று நடுக்கம் போலும். இப்போது உங்களுக்கு எதற்காக இதை எழுதுகிறோம் என்றால், நீங்கள் மான அவமானத்திற்குக் கட்டுப்பட்டு உங்கள் கணவரிடம் விஷயத்தைக் கூறி மரியாதையாக நிருபமாவையும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கத்தையும் மற்ற இதர சொத்துக்களையும் உடனே கொடுத்துவிட்டாலாயிற்று, இல் லையேல் நாங்கள் இனி தாமதிக்காமல் உங்கள் கணவர்மீது கடும்பழி தீர்க்க வழக்குத்தொடரப் போகிறோம்.

பகிரங்கமான நீதிஸ்தலத்தில் கண்ணியமும், கவுரவமும் வாய்ந்த உங்கள் கணவர் கூண்டில் நின்று பேசி ஜெயிக்கட்டும். இத்தனை கால மாகிவிட்டதால் இந்த விஷயத்தை நாங்கள் விட்டுவிட்டதாக நீங்கள் மனப் பால் குடிப்பதை இனி நிறுத்திவிடுங்கள். பதுங்குகிறபுலிதான் பாயும் என் பதை பகவானுக்கே மாலையிட்ட எங்களால் அறிந்து கொள்ளுங்கள். இதற்கு ஒருவாரத்திற்குள் பதில்வராவிட்டால் அடுத்தது கோர்ட்டுக்குத்தான் வந்து பேசவேண்டுமென்பது நினைவிருக்கட்டும்.

இங்ஙனம்

| | |
|---|---|
| மோகனராணி. | ராஜமாணிக்கம். |
| ராஜாத்தி. | மதனசுந்தரி. |
| ஜீவரத்தினம். | பாலாமணி. |
| ரமாமணி. | ஜில்ஜில்கமலம். |
| மேனகா. | ரூபவதி. |
| நீலவேணி. | கோகிலஸரஸ்வதி |

இதைக் கேட்கும்போதே கீர்வாணியின் குடல் நடுங்கவாரம்பித்தது. புண்ணியமூர்த்தி கடகடவென்று நகைத்தவாறு "பயித்தியமே! பெண் மையின் பலஹீனம் முற்றும் உன்னிடந்தான் காண்கிறேன். தொட்டாச் சிணுங்கிபோல் அதிர்ச்சியான விஷயம் எதைக்கேட்டாலுமா நீ இப்படி தைரியத்தை இழப்பது? சீச்சீ ! கீர்வாணி ! என் மனைவியாகிய உனக்கு இது சற்றும் பொருந்தாது. இந்த வீண் மிரட்டலுக்கெல்லாம் நான் அசையக்கூடமாட்டேன். இந்த தடபுடல் எதற்குத் தெரியுமா ! அந்த 10,000 ரூபாயை விழுங்குவதற்காகவேயன்றி நிருபமாவைத் தன் இனம் என்று ஸ்தாபிப்பதற்குமட்டுமல்ல. அந்த கடுபுடியை வ்யாஜமாகவைத்து வலை விசிப் பார்க்கிறார்கள்.

அந்த வலையில் அவர்கள் எதிர்பார்க்கும் 10,000 ரூபாய் மீன்கள் கிடைக்காது. தேளும் பாம்பும் நட்டுவாக்காலியுமாகத்தான் கிடைக்கப் போகிறதென்பதை உண்மையிலேயே அனுபவித்த பிறகுதான் அறியப் போகிறார்கள் தெரியுமா ! இந்த அல்பத்திற்கெல்லாம் நீ தளர்ந்து விடுவது தான் எனக்குப் பிடிக்கவில்லை.

கீர்வாணி ! நானும் இத்தனை காலமாகத் தூங்கவில்லை. நிருபமாவின் உயர்ந்த குலத்தின் ரகஸியத்தை முற்றிலும் தீர விசாரித்து அறிந்து கண்டு

பிடித்துவிட்டேன். அந்த அல்ப வேசைகள் வழக்குத் தொடருவதற்கு முன்பு இதே ரிஜிஸ்தர் கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு உயர் குலத்தின ளான குழந்தையின் எதிர்கால வாழ்க்கையை பாழ்படுத்த சில தாசி கள் வீண் சதி செய்கிறுர்கள். இந்த மான நஷ்டத்தை அவர்கள் கட்டிக் கொடுக்கவேண்டும். ஒருலக்ஷ ரூபாய் அதற்காக நான் அவர்கள்மீது வழக் குப் போடுகிறேன் என்று நானே முதலில் ஆரம்பிக்கப்போகிறேன். நிருப மாவுக்கு சுலபமாக ஒருலக்ஷரூபாய் வந்துவிடும் பாரு. இந்த கிராதகி களுக்கு எதிர் மரியாதை இதுதான். நீ வீணுகக் கவலைப்படாதே'' என்று மிக்க அன்புடனும் அழுத்தமாகவும் கூறித் தேற்றியதோடு "குழந்தை நிருபமாவுக்கு இந்த அல்ப விஷயத்தைப்பற்றிக் கூருதே. அவள் மனது வருந்தும்'' என்றும் எச்சரித்தார்.

எதையாவது பார்த்துவிட்டால், கேட்டுவிட்டால் உடனே கவலை யால் மனது இடிந்துவிடும் ஒரே ஒரு பலஹீனமான குணத்தைத்தான் புண் ணியமூர்த்தி வெறுத்து வந்தார். அந்த ஒரு பலவீனத்தை எத்தனை வழியில் மாற்ற முயன்றும் பயன்படவே இல்லை. "நிருபமாவின்மீதுள்ள த்வேஷத்தினுல் அந்த தேவதாசிகள் தன் கணவனுக்கே ஏதாவது தீங்கு செய்துவிடுவார்களோ! கொன்றுவிடுவார்களோ! ஆட்களைவிட்டு அடிப் பார்களோ!' என்றெல்லாம் அனுவசியமான பயமும் திகிலும் அவளைக் கப்பிக்கொண்டன. கணவனுக்காக அதை மேலுக்குக்காட்டாமல் உள்ளுக் குள்ளே அடக்கி வந்தும் 'அகத்தினழகு முகத்தில்' என்கிறபடியே முகமும் விகாரப்பட்டு பீதியையே எடுத்துக்காட்டியது. அதோடுமாதங்கள் இத்தனை யாகியும் தன் மகன் ஒரு கடிதங்கூடப் போடவில்லையே என்கிற விச னமும் ஊடே பாதிக்காமலில்லை.

தாசிகளின் வஞ்சனையால் தன் கணவனுக்கு ஒருவிதமான விபத்தும் உண்டாகாதிருக்கவும் அக்கரைச் சீமைக்குச் சென்றுள்ள தன்மகனை காப் பாற்றும்படியும் சதா பகவானை வேண்டி ப்ரார்த்தனை செய்துவந்தாள்.

மாலை வழக்கம்போல் பேப்பர்க்காரப் பையன் பேப்பரைக் கொடுத் ததை கீர்வாணியே வாங்கி முதலில் உலக யுத்தச் செய்தி எப்படியிருக்கிற தென்று பார்ப்பது வழக்கம்போல் பத்திரிகையைப் பிரிக்கும்போது மிகப் பெரிதாக புகைப்படம் கண்ணில் பளிச்சென்று பட்டது. அதை ஆவலுடன் உற்றுக் கவனித்த கீர்வாணி திடுக்கிட்டு அலறியவாறு பத்தி ரிகையுடன் ஓடி "டாக்டர்! இதைப்பாருங்கள். விஷயத்தைப் படியுங்கள்.'' என்று பெரிதாகக் கத்தியவாறு டாக்டர்மீதே சாய்ந்துவிட்டாள்.

வியப்புடன் டாக்டர் படத்தைப் பார்த்தார். ப்ரபல ஸினிமா நடிகை யான ஸ்ரீ மாயாதேவியின் விவாகக் காக்ஷி. என்றிருப்பதைக் கண்டதும் ப்ரமித்துப்போய் உற்றுக் கவனித்தார், என்ன ஆச்சரியம்! என்ன அக்ரமம்! ஒரு வெள்ளைக்கார துரைமகனின் கையோடு கை பிணைத்துக் கொண்டு மாயாதேவி நிற்பதைப் பார்த்து அவர் கண்களையே நம்ப முடியவில்லை.

மிஸ்டர் மிராஷ் துரையும், ஸினிமா ராணி ஸ்ரீமதி மாயாதேவியும். என்று கொட்டை எழுத்தில் போட்டிருந்தது. சில விநாடிகள் சமாளித்த பிறகே அது சம்மந்தமான விஷயத்தைப் படிக்கவாரம்பித்தார்.

இதற்குள் கீர்வாணி 'ஐயோ! இந்தப்பாவியை நம்பி என் தம்பி மோசம் போய்விட்டானு! அவன் கதி என்னவாகிவிட்டதோ? படித்துச் சொல்லுங்கள். நான் பயந்ததெல்லாம் சுகுமாரனை எங்கே அந்த மாய மந்திரக்காரி தன் வலையில் வீழ்த்திவிடுவாளோ! என்றுதான். பிள்ளையார்

பிடிக்கக் குரங்காய் முடிந்ததே. விஷயத்தைப் படியுங்கள்.'' என்று பெரிதாக அழவாரம்பித்துவிட்டாள்.

புண்ணியமூர்த்திக்குத்தான் கீர்வாணியின் பலவீனம் தெரியுமே! இது ஏதோபெரிய அனர்த்தத்திற்குதான் ஏற்பட்டிருக்கிறது என்று அவர் இதயத்தில் ஏதோ ஒன்று கூறியது. கீழே விஷயம் என்னவிருக்குமோ என்று கலங்கியவாறே படிக்க வாரம்பித்தார்.

“உலக ப்ரஸித்திபெற்ற நடிகையான ஸ்ரீமதி மாயாதேவி சீமைச் சுற்று ப்ரயாணத்திற்குச் சென்றுள்ள விஷயம் ஸினிமா ப்ரியர்களுக்கு ஏற்கெனவே தெரிந்தது. சீமையிலுள்ள பல ஸினிமா முதலாளிகள், டைரெக்டர்கள், நடிகர்கள் முதலியவர்கள் அந்த ஒப்பற்ற ராணியை மிகவும் மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார்கள்.

ப்ரபல ஸினிமா நடிகரும் டைரெக்டருமான மிஸ்டர் மிராஷ் துரையவர்கள் மாயாதேவியின் அழகு, நடிப்பு, சங்கீதம் முதலியவைகளைக் கண்டு மயங்கி அவளையே நேசித்தார்.

வடநாட்டு டாக்டரான ஸ்ரீமான். ஸ்ரீகாந்தன் அவர்களை ஏற்கெனவே ரிஜிஸ்தர் மணம் செய்துகொண்டதாக வேஷம் போட்டுவந்த மாயாதேவி மனப்பூர்வமான காதலுடன் துரையவர்களை ரிஜிஸ்தர் மணஞ்செய்து கொண்டார். அந்த ஜோடி தம்பதிகள் ஒரு ஆங்கிலப் படத்தில் வெகு விரைவில் தோன்றுவார்களாம்.

மாயாதேவியின் இச் செய்கையால் மனமுடைந்த டாக்டர் ஸ்ரீகாந்தன் குடும்பத்துடன் உடனே மறைந்துவிட்டதாகச் செய்தி அறிய வருகிறது. அதன் உண்மை தெரியவில்லை. அந்த அதிர்ச்சியில் டாக்டர் இதய நிறுத்தத்தால் உயிர் துறந்ததாயும் ஒரு வதந்தி. ஆனால் அதற்கு ஆதாரம் தெரியவில்லை''

என்கிற வெடிகுண்டுபோன்ற விஷயத்தைப் படித்ததும் உண்மையில் டாக்டருக்கே அதிர்ச்சி தாங்காது இதயம் துடித்தது. ஒன்றுஇரண்டா ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் கடல் கடந்த தேசத்திலுள்ள உண்மையை யார் எப்படி உடனே அறியமுடியும்?

டாக்டருக்கே மனது தாங்கவில்லை என்றால் கீர்வாணி மயக்கம் போட்டு விழுந்ததில் வியப்பு என்ன இருக்கிறது? அடுத்த நிமிடமே வீடு அல்லகல்லோலமாகிவிட்டது. சிவகுமாரனும் புண்ணியமூர்த்தியும் செய்வதறியாது துடிக்கிறார்கள். ‘எப்படி உண்மையை அறிவது? சுகுமாரன் என்ன கதியானான்'' என்று நெஞ்சு கூறத்திறமற்ற வேதனையுடன் குழம்பித் தவிக்கிறது. கீர்வாணியோ “சுகுமார்! ஸ்ரீகாந்தா! லலிதகுமாரீ! உங்கள் கதி என்னவாயிற்று!'' என்று வாய்க்குளறவாரம்பித்துவிட்டாள். இந்த பரிதாபத்தைக் கண்ட டாக்டரின் கண்களில்கூட நீர் வழிந்தது.

## 29

அனுராதாவும் நிருபமாவும் கீர்வாணியை விட்டு அப்புறம் இப்புறம் அசையவில்லை. இருவருக்கும் உண்டாகியிருக்கும் கவலையோ கூறத்திறமில்லை. தங்கள் அதிர்ஷ்டம் நன்றாயிருந்து அவள் உடம்பு ஒன்றுமில்லாது பிழைக்கவேண்டுமே! என்று சதா பகவானை வேண்டுவார்கள்.

கீர்வாணியோ, சற்று நேரத்துக்கொருதரம் “சுகுமாரன் வந்தானா! அட அக்ரம உலகமே! ஊழல் குப்பையில் தான் விழுந்து புரள்வதறியாமல் மகா பரிசுத்தவானாயும் சத்யசீலனாயுமுள்ள என் கணவன்மீது கூறத்தகாத வார்த்தைகளைக்கூறி புண்ணாக்கினானே பாவி! அந்த சினிமா வேசை

யின் மோகமல்லவா அவனையப்படி சொல்லச்செய்தது. அதன்பலன்தான் இப்போது கைம்மேல் கிடைத்தது. அவன் கண்ணிலேயே மண்ணைத்தூவி விட்டு மானங்கெட்டக் கழுதை ஓடினாள்."

என்று கீர்வாணி சதா அதையே நினைத்து நினைத்து ஏங்கினாள். புண்ணியமூர்த்தி தந்திமேல் தந்தியாகப் பறக்கச்செய்து யார்யாரையோ விசாரித்தும் எவ்விதமான தகவலும் சரியானபடி கிடைக்கவில்லை. இப்படியே நாட்கள் செல்லச்செல்ல கீர்வாணியின் உடம்பு கேவலமாகிப் படுக்கையோடு படுக்கையாக ஆய்விட்டாள்.

புண்ணியமூர்த்திக்கே கவலையதிகமாகிவிட்டது. அந்த சதிகாரியான சினிமாப்பேயின் நிர்த்தூளித் தாண்டவத்தின் மானங்கெட்ட செய்கையால் என் உத்தம சதியை ஒரு வேளை இழந்துவிடுவேனோ! என்கிற பயமும் அவர் மனத்திலேயே உண்டாகி உள்ளூற வதைக்க வாரம்பித்தது என்றால் மற்றவர்களின் கவலைக்குக் கேட்கவேண்டுமா!

இந்த விசனத்தின் பாரம் மெல்லிய இதயத்தை அழுத்தி வேதனை செய்ததால் நாளாவ்ருத்தியில் இதயம் பலவீனப்பட்டு அடிக்கடி சிறிது நோக்காடும் உண்டாகவாரம்பித்தது. கீர்வாணிக்கே என்ன தோன்றியதோ என்னவோ! ஒருதினம் திடீரென்று அலறியவாறு புண்ணியமூர்த்தியைக் கூப்பிட்டு "டாக்டர்! உடனே நமது வக்கீலை அழைத்துவர ஆளனுப்புங்கள். அனுப்புகிறீர்களா! முதலில் அனுப்புங்கள். நான் என்னவோ இனி பிழைக்கமாட்டேன் என்று திட்டமாகத் தெரிந்துவிட்டது. நேற்று கனவில் என் தம்பியின் மனைவி வந்து 'நீ கொடுத்த வாக்கை நிறைவேற்றினையா! உனக்கும் காலம் முடியப்போகிறது. பரதேசிக் குழந்தையை நீ எடுத்து வளர்க்காது பாழாக்கிவிட்டதுடனல்லாமல் சுகுமாரன் கேட்ட சொத்துக்களையும் கொடுக்காது ஏமாற்றிவிட்டாயே! அதனால்தான் அவன் ஓடிவிட்டானோ என்னவோ! நான்தான் மகளை இழந்தேன். நீயுமா மகன், மருமகள் இருவரையும் இழக்கப்போகிறாய்!" என்று பயங்கரமான தோற்றத்துடன் கூறினாள். என்னுள்ளம் நடுங்கி அப்படியே அலறிவிட்டேன். அப்போதே நான் இந்த தீர்மானத்தைச் செய்துகொண்டேன். அதாவது பிதுரார்ஜிதம் சுயார்ஜிதம் இரண்டிலும் பாதிப்பாதி சரியாகப் பகிர்ந்து வில்லெழுதி அந்த விஷயத்தை உடனே பத்திரிகையில் ப்ரசுரம் செய்வது. என் தாயார் வீட்டில் கொடுத்த ஸ்ரீதனச் சொத்து முழுவதையும் அப்படியே நிருபமாவுக்கு—அவள் என் மகளாகையால்—எழுதி வைத்துவிடுவது. இவைகள்போக 50 ஆயிரம் ரூபாயை சிறந்த தர்ம ஸ்தாபனத்திற்குக் கொடுப்பது.

சிவகுமார் முன்பு தெரிவித்த கல்கத்தாக்காரர்கள் லீவு விட்டதும் வருவதாகவன்றோ கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நிலைமையை விளக்கிக்கூறி உடனே வந்து கல்யாணத்தை நான் உயிரோடிருக்கும்போதே செய்து பார்த்துவிட ஆசைப்படுகிறேன். ஆதலால் தந்தி கண்டதக்ஷணம் கிளம்பும்படிக்குத் தந்திகொடுப்பது.

சுகுமாரன் விலாஸம் தெரியாததால் "எனக்கு ஆபத்தான உடம்பு உடனே வரவும்" என்று பத்திரிகையிலேயே விளம்பரம் செய்வது. அதைப்பார்த்து அந்த மகானுபாவன் வந்தால் மூன்று கல்யாணங்களையும் ஒரே பந்தலில் செய்து என் கண்ணாரக்கண்டு களித்துப் பின் நிம்மதியாக உயிர்விடுகிறேன். இதுதான் என் கடைசி ப்ரார்த்தனை. ஆகையால் நான் சொல்லியபடி விரைவில் செய்து என்னுவலைப் பூர்த்திசெய்யுங்கள்.

ஆலசியம்செய்து என் ஆசையில் மண்ணைப்போட்டு விடாதீர்கள்" என்று மிகவும் உருக்கமாயும் கண்ணீர் வழிய துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள்.

இதைக்கேட்ட சிவகுமாரன் அப்போதே தாயாருக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி பெரிதாக விக்கி விக்கி அழுதவாறு "அம்மா! நீ அதைரியப்படாதேம்மா! உனக்கொரு குறைவும் வராது. அப்படி பயப்படக் கூடிய வியாதி உனக்கு இல்லை. வீணாய் கவலையினால் உண்டான கோளாறேயன்றி உடம்பால் வந்த வ்யாதியில்லை. சதா இவைகளையே நினைத்திருப்பதால் அதுவே கனவாக வந்து உன்னைப் பின்னும் வாட்டுகிறது. அம்மா! அண்ணாவுக்கு எனது பங்கையும் சேர்த்துக் கொடுத்து அவனை மகிழ்விக்க நான் தயாராயிருக்கிறேன் அப்பாவின் ஆஸ்பத்திரியும் எனது டாக்டரின் தொழிலும் எனக்குப் போதிய வருவாயை அளிக்கும். இன்றே இப்போதே பத்திரிகையில் போடுகிறேன்." 'என்று கூறித் தேற்றினான்.

உண்மையில் புண்ணியமூர்த்திக்கு இதற்கு முன்பிருந்த திடமும் வைராக்யமும் எப்படியோ பறந்துவிட்டது. தனது இதயலக்ஷ்மி தன்னை மோசம்செய்துவிடுவாளோ! தான் தனிக்கட்டையாகிவிடுவோமோ! என்கிற துக்கம் அவரை அறியாமல் கப்பிக்கொண்டதால் கீர்வாணியை விட்டு அவர் அசையுக்கூட மறந்துவிட்டார். எப்படியாவது அவள் பிழைத்தால் போதும் என்கிற எண்ணத்தால் எங்கெங்கேயோ இருக்கும் பெரிய டாக்டர்களையெல்லாம் வரவழைத்துக் காட்டினார்.

புலி ஆளைக்கொல்வதைவிட கிலி உடனே கொன்றுவிடும் என்கிறபடி கிலியும் கவலையுமே அவளுக்கு இதயத்தைபாதிக்கின்றன. அதிகமாகக் கவலைப்படாதவாறு அவள் இஷ்டங்களையெல்லாம் பூர்த்திசெய்வதோடு நல்ல பொழுதுபோக்குகளை உண்டாக்கவேண்டும், ஊரைவிட்டு மாற்றினால்கூடத் தேவலை... மூத்த மகன் கடிதமெழுதியிருப்பதாக நல்ல சமாச்சாரங்களை அவ்வப்போது கடிதம் வந்ததாகப் படித்துச்சொல்லி ஆறுதல்களை அளித்தால் ஒரு சமயம் இதய பலவீனம் குறைந்து பலம் ஏற்படலாம், என்று சில டாக்டர்கள் அபிப்ராயம் கூறினார்கள்.

அப்போது புண்ணியமூர்த்திக்கு முன்புவந்த யாத்ரீகர்களின் கோஷ்டியும், பஜனையும் நினைவிற்கு வந்தது, அவர்களைப்பற்றி விசாரித்துக் கடிதமெழுதினார். டாக்டர்களின் யோசனையைக் கேட்டுக்கொண்டிருந்த நிருபமா அநுராதாவுக்கு க்ருஷ்ணன் பாகத்தில் உள்ள சில நாட்டியங்களை ரகஸியமாகத்தானே கற்றுக் கொடுத்து தான் ராதையாகவும் அநுராதா கிருஷ்ணனாகவும் ஆடக்கூடிய ஒரு அத்புதக் காக்ஷியைத் தயார் செய்தாள்.

கீர்வாணியின் விருப்பப்படியே, ப்ரபல வக்கீல்களைக் கொண்டு வில் எழுதி அவளை மகிழ்வித்து பத்திரிகையிலும் விளம்பரம் செய்தார், டாக்டர்கள் சொல்லியதுபோலவே சுகுமாரன் கடித மெழுதியதாகப் படித்துக் காட்டியதை மகாபுத்திசாலியான கீர்வாணி நம்ப மறுத்துவிட்டாள். "என் குமாரனின் வாசகம் இது இல்லவே இல்லை. எதற்காக என்னை இப்படி ஏமாற்றவேண்டும்? என்னை என் கடைசீ காலத்தில் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் கழிப்பதற்கு, அந்த யாத்திரை கோஷ்டியின் சிலர் சென்றிருந்தாலும் சிலர் பஜனை மடத்திலேயே இருக்கிறார்கள்; அந்த இடத்தில் என்னைக்கொண்டு விட்டுவிடுங்கள். சத்காலக்ஷேபமும் நாமம்ருத விருந்துமே எனது கடைசி காலத்திற்குத் துணைபுரியும் அருமருந்தாகும். வீண் பாசபந்தத்தால் உழன்று பாவியானது போதும், உங்கள் தர்மகைங்கர்ய

மும் பரோபகாரமும் உங்களை என்றென்றும் தலைகாக்கும்; ஆகையால் என்னை ஆரோக்யத்திற்காக எங்கும் கொண்டுவிட வேண்டாம்.

"டாக்டர்! இதற்குமிஞ்சிய ஆரோக்யம் எனக்கு வேறெதுவுமேயில்லை" இன்றே கிளம்பலாமா! என்று தீன குரலில் நிராசையும் அவநம்பிக்கையும் த்வனிக்கக் கேட்டாள்.

இதற்கு முந்தியே புண்ணியமூர்த்தி இதே விஷயத்தைத் தீவிரமாக யோசனை செய்து அந்த இடத்திற்குப்போய் பார்த்துவிட்டு வந்தார். ஆரோக்யத்திற்கு அவ்வளவாக ஏற்ற ஊர் அதுவல்லவென்று தெரிந்ததால் என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

அச்சமயத்தில்தான் கீர்வாணி முன்போல் கேட்டதால் அவருக்கு ஒன்றுமே தோன்ருது சற்று திகைக்கும்போது தபால்காரன் மஞ்சள் தடவிய கடிதமொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான்.

இதைக் கண்ட கீர்வாணி "என்ன மஞ்சள் தடவிய கடிதமாக இருக்கிறதே! யாருக்குக் கல்யாணம்?...படியுங்கள்" என்று ஆவலுடன் கேட்டாள். புண்ணியமூர்த்தி கவரைப் பிரித்த உடனே சந்தோஷத்துடன் "கீர்வாணி! ராவல்பிண்டியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது, உனக்கு மருமகன் வரப்போகிருன்" என்றுசிரித்தவாறு கூறிப்பின் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தார். அது வருமாறு:—

"அன்புமிக்க டாக்டர் அவர்களுக்கு,

சர்வ மங்களமும் உண்டாவதாக. இவ்விடம் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமத்திற்கு எழுத ஆசிக்கிறேன். தங்கள் குமாரர் எழுதிய கடிதமும் பிறகு தாங்கள் கொடுத்த தந்தியும் முறையே கிடைத்தன. மெத்த சந்தோஷம். பாழாப்போன யுத்த விபரீதத்தில் லீவு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. எத்தனையோ ப்ரயாஸைப்பட்டதில் இன்னும் ஒரு மாதம் கழித்து ஒருமாதம் லீவு கொடுப்பதாகத் தெரிகிறது. தங்கள் மனைவியாரின் தேகாரோக்யத்தையும் அவர்களுடைய பேராவலையும் முன்னிட்டு நான் முதலில் என் மனைவி, இரண்டு புதல்விகள், என் குமாரன் ஆகியவர்களை அனுப்புகிறேன்.

செல்வி நிருபமாவின் சௌந்தர்யத்தைப்பற்றியும் நாங்கள் புதிதாக அறிவதற்கு ஒன்றுமே இல்லை. அந்த குழந்தை தாசிவர்க்கத்தைச் சேர்ந்தவளல்ல என்று தாங்கள் கூறும் ஆதாரமே எங்களுக்குப் போதிய நம்பிக்கைதான். ஆகையால் வந்தவுடனே விவாகத்தை நடத்திவிடுவதில் எவ்விதமான ஆக்ஷேபணையுமில்லை.

என் மனைவி மகா ரஸிகை. அவள் எது சொன்னாலும் செய்தாலும் குற்றமோ குறையோ இருக்காது. இது என் அனுபவம். ஆகையால் அவள் தீர்மானப்படியும், குழந்தை நிருபமாவின் விருப்பப்படியும் 10 ஆயிரம் ரூபாயிக்கு ஆடைகள், ஆபரணங்கள் முதலியவற்றைத் தாங்கள் கூட இருந்து வாங்கிவிடவும். என் ஒன்றுவிட்ட தம்பியின் வீட்டிலிறங்கப் போகிருள். புறப்படும் தேதியைத் தந்தியடிக்கிறேன். உங்கள் மனைவிக்கு இப்போது பூர்ண குணமாகி இருக்கும் என்று நம்புகிறேன். நிருபமாவுக்கு எனது ஆசிகள்.

இங்ஙனம் தங்கள்
அன்புள்ள
அருணசலம்."

என்றதைப் படித்துக் கேட்டதும் கீர்வாணியின் உள்ளம் பூரித்தது. "என் கண்மணிக்கு என்ன அதிருஷ்டம்! என்ன அதிருஷ்டம்" என்று குதூ

கலித்த படியே நிருபமாவைப் பக்கத்திலழைத்து சேர்த்து கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

சம்மந்திகள் வரப்போகிற ஆனந்தத்தில் உண்மையில் கீர்வாணியின் மனத்தில் அவளையறியாத தெம்பும் மகிழ்ச்சியும் உண்டாகியதால் பஜனை மடத்து ப்ரயாணத்தைத் தானே நிறுத்திக்கொண்டாள். "டாக்டர்! முதலில் நிருபமாவுக்கு என்னுடைய வைர அட்டிகை, வைர வளையல், நெக்லேஸ் முதலியவற்றை என் கைகளாலேயே கொடுத்துக் கண்ணார அழகு பார்க்க விரும்புகிறேன். நான் என்னவோ இனி பிழைக்கமாட்டேன். அப்படிப் பிழைத்தால் புதிதாகச் செய்துகொள்ள வெகு நேரமாகாது. ஜோடியாக அநுராதாவுக்கும் ஒரு செட் செய்வதற்கு ஆர்டர் செய்யுங்கள். சம்மந்திகள் வரும்போது இருவரும் ஜோடியாக இருக்கவேண்டும்'' என்றாள்.

புண்ணியமூர்த்தியின் சந்தோஷத்திற்குக் கேட்கவேண்டுமா! "எந்த வகையிலாவது கீர்வாணி சந்தோஷமாகவிருந்தால் போதும். அவள் சொல்வதை எல்லாம் உடனே செய்துமுடிப்போம்'' என்ற சங்கல்பத்துடனிருப்பதால் அவள் இஷ்டப்படியே அந்த நிமிஷமே செய்து முடித்தார். கீர்வாணியின் ஆனந்தமே அவருக்கு ஜீவாதாரமாக இருந்தது.

## 30

சுதந்திரப்பறவைகள்போல் நிருபமாவும் அநுராதாவும் ஆனந்தமாகப் பேசிக்கொண்டே தோட்டத்தில் புஷ்பங்களைப் பறித்து ஸ்வாமிக்கு மாலை கட்டிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிவகுமாரன் ஆவலுடன் அங்கு வந்தான். "உம்...அநுராதா! இனிமேல் நிருபமாவும் நீயும் பிரியும் காலம் வந்துவிட்டது. சம்மந்திகள் நாளைக்கு புறப்படுகிறார்களாம்! தந்தி வந்துவிட்டது...என்ன நிருபமா! கல்யாணத்திற்குப் பிறகு எங்களையெல்லாம் மறக்கமாட்டாயே!

நிரு:—அண்ணா! உலகத்தில் எப்போதுமே சகோதரிகள் பிறந்த வீட்டையும் சகோதரர்களையும் மறக்கவேமாட்டார்கள். கெட்ட குணம் படைத்த பிடுங்குண்ணி சகோதரியாகவிருந்தால்கூட சீர்வகைகளைப் பறிப்பதற்காகவாவது நினைவில் வைத்துக்கொண்டுதானிருப்பார்கள். ஆனால், ஆடவர்கள் இருக்கிறார்களே! விவாகமாகும் வரையில் அக்கா, தங்கை...ஏன்?...பெத்த தாயார்கூட...அதுவரையில்தான் உறவு. விவாகத்திற்குப் பிறகோ, என்னம்மா அந்த பரதேவதையின் ஆக்ஞைக்குட்பட்ட பொம்மையாகி மானஹீனமற்று உற்றார் பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் துறந்து 'என் தேவியின் திருவடிகளுக்கே சரணம்' என்கிற நாமாவளியைப் பாடிக்கொண்டு அலைவார்கள். அதுவே மோக்ஷம். அதுவே பிறவியின் சார்த்தகம். இந்த வெட்கக்கேட்டை, வயிற்றெரிச்சலை எத்தனை பெரிய குடும்பங்களில் கண்கூடாக ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம்...

சிவ:—(இடைமறுத்து) அடடா!...ஏதேது? குடும்ப அனுபவமும் வக்கணையும் தடபுடலாகக் கற்றிருக்கிறாயே! ஆனால் அநுராதா அத்தகைய கிராதக அண்ணியின் கோஷ்டியில் சேர்ந்தவள் என்று இப்போதே நற்சாக்ஷிப்பத்திரம் கொடுத்துவிட்டாயா!...

நிரு:—ஏன் இப்படி அவசரப்படுகிறாய்? 'அநுராதாவைப்போல் அண்ணி உலகில் உண்டா!' என்று ஆதர்சப்பெண்மணியைப்போல் பெயர் வாங்கப்போகிறாள். முன் குறிப்பிட்ட குடிகெடுக்கும் நாய்க்குணமும், பேய்க்குணமும், பொறாமை தீக்குணமும் நிறைந்த அண்ணிகளைப்

போன்ற வாடையே அநுராதா மிதிக்கும் மண்ணுக்கும் வராது என்றல்லவா கூறவந்தேன். அதற்குள் பரிந்துகொண்டு வந்துவிட்டீர்களே !"—

என்று பேசுகையில் அநுராதாவை கீர்வாணி கூப்பிட்டதால் அவள் எழுந்து போனுள். சிவகுமாரன் நிருபமாவைக் கூர்ந்து கவனித்தபடியே "நிருபமா ! நான் மிகமிக பயந்துபோய்விட்டேன். எல்லோரும் சந்தேகிப்பதற்குத் தகுந்தாற்போல் நீ எங்கே என்மீது ப்ரேமையை-பதிப்ரேமையை வைத்துவிட்டாயோ ! இதை எப்படி அறிவது ? என்று நடுங்கினேன்... இன்னமும் சிறிது சந்தேகந்தான்...

என்று முடிப்பதற்குள் நிருபமா இடைமறுத்து "பேஷ் ! பரஸ்பரம் இதே பயந்தானு? நானுமல்லவா அன்றுமுதல் இதே எண்ணத்துடன் தவித்தேன். இதை பகிரங்கமாக கூற அச்சமும்,பயமும் பாதித்தன...

சிவ:—உண்மையில் அப்பாவும் அம்மாவும்கூட, ஏன் அநுராதாகூட நான் உன்னைக் காதலிப்பதாகவே பூர்ணமாக எண்ணியிருந்தார்கள். ஏனே, உன்னைப் பார்த்த அன்றே என்னிதயம், உன்னை என் சகோதரியாகவேதான் பாவித்தது. காரணம் எனக்கே தெரியவில்லை.

நிரு:—ஏன் தெரியவில்லை ? அனுராதா உங்களை நாடி வரப்போகிறுள் என்றுதான் நடக்கவில்லை. நான்கூட நினைத்ததுண்டு. நீங்கள் பரிபூர்ணமாக என்னை நேசித்ததாகவே நான் நம்பினேன். இவ்வளவு ஆழ்ந்தப்ரேமையுடன் இவர் நேசிக்கும்போது என் மனது ஏன் இவரை நாயகனுக நினைக்கக்கூடாது ? என்னுடைய இந்த எண்ணத்தை நீங்களறிந்தால் உங்கள் மனது எவ்விதம் துடிக்கும் ? உடைந்த காதலால் எப்படியாய் விடுவீர்களோ என்றெல்லாம் நானே தவிப்பேன்...


சிவ:—சரிதான் போ ! இதேமாதிரி நான் இரவு பகல் தவித்தேன். ஒருவேளை என்னையே நீவிரும்புவதை அறிந்தால் உனக்காக நான் எனக்கு விருப்பமில்லாத போதிலும் உன்னை மகிழ்விக்கும் பொருட்டு உன்னை மணப்பதாக தீர்மானித்திருந்தேன். அதற்காகவே நான் ஆதிகால சினேகிதனைத் தேடிப்பிடித்தேன். ஏதோ ஒன்று எல்லாம் நல்லதிற்கே முடிந்தது. அநுராதாவை அனுப்பினுர். பிறகுதான் என் மனது சாந்தியடைந்தது—என்றுன்.

"அப்பாடா ! பெரும் பளுவு என் மனத்திலிருந்து குறைந்தது. என் இன்பச்சகோதரி! எனக்கு ஒரு உடன்பிறந்த சகோதரியில்லையே என்கிற குறை சிறுவயதுமுதல் வாட்டிவந்தது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கே என்னப்பன் உன்னை அளித்தார்." என்று கூறியபடியே, இரு கரங்களையும் சேர்த்து அணைத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு "உனக்கு வரப்போகும் கணவனும் நமது நேசத்திற்கு அனுகூலமும் அன்பும் நிறைந்தவனுக இருக்கவேண்டுமே என்று இப்போதே கவலையாக இருக்கிறது. நிருபமா ! உனக்கு அந்த வரன் பூர்ண த்ருப்திதானே !" என்று அன்பு ததும்பக் கேட்டான். நிருபமா பதிலே சொல்லாது மவுனமானுள். ஆனல் எக் காரணம் பற்றியோ, அவள் கண்களில் மளமளவென்று நீர் பெருகியது. அடுத்த க்ஷணமே அதைத் துடைத்துக்கொண்டு எழுந்து போனுள்.

அதே சமயம் அநுராதா ஒரு பெட்டியைக் கையிலெடுத்துக்கொண்டு வந்து "அத்தான் ! இதோ பாருங்கள். மாமி இதை காட்டுவதற்குத்தான் கூப்பிட்டார்கள். இப்போதான் பண்ணிவந்தனவாம். ஸ்வாமிக்கு முன்பு வைத்து நமஸ்காரம் செய்துகொண்டுவரும்படிக் கொடுத்தார்கள்" என்றுள்.

சிவகுமாரன் ஆவலுடன் அந்த வைர செட்டுநகைகளை பார்த்து உள்ளம் பூரித்தவனுய் இருவரும் ஸ்வாமி பூஜா அறைக்குச்சென்று பகவான் ஸன்னிதியில் வைத்து நமஸ்கரித்தார்கள். பிறகு அவைகளை பக

வானுக்குச் சாத்திக் களித்துப் பின் அந்த அட்டிகையை சிவகுமாரனே அநுராதாவின் கழுத்தில் ஆனந்தப் பூரிப்புடன் போட்டுப் பின் அப்படியே அவள் தலையை நிமிர்த்தி ஒரு ஆனந்த........



இந்த அத்புதக் காக்ஷியை தூர மறைவிலிருந்து பார்த்துக்கொண்டு வந்த நிருபமாவும் புண்ணியமூர்த்தியும் களுக்கென்று சிரித்தார்கள். உடனே நிருபமா ஒரு பாத்திரத்தில் கரண்டிக் காம்பினால் தடதடவென்று அடித்து "அண்ணா! கெட்டி மேளம் இதுதான். 'ஆனந்தம் ஆனந்தம் ஆச்சுதே அநுராதா கல்யாணங் காணலாச்சுதே" என்று பாடிக் கும்மாளமடித்தாள்.

"நான் வைர நகை போட்டதற்கே நீ ஆனந்தம் பாடினால் நான் கூடிய சீக்கிரத்திலேயே உன் கல்யாணத்திற்கு ஆனந்தமே பாடி அக்ஷதையும் போடுகிறேன் இரு" என்று சிவகுமாரன் கூறி நகைத்தான். தேவமாதோ! ரதிதேவியோ! என்று அநுராதா ப்ரகாசிப்பதைக் கண்டு சிவகுமாரன் களிவெறிகொண்டான். புண்ணியமூர்த்தியின் உள்ளமும் ஆனந்தத்தினால் நிரம்பியது.

மறுதினமே சம்மந்தி வீட்டார் வரப்போகிறார்களாதலால் கீர்வாணி நிருபமாவை வெகு வெகு அழகாக அலங்காரம் செய்யும்படிக்கு அநுராதாவுக்குக் கட்டளையிட்டாள். "வீட்டை சுத்தமாக வையுங்கள். பழவகைகள் தேங்காய் வெத்திலை பாக்கு மஞ்சள் எல்லாம் நிரம்ப வாங்கி

வையுங்கள். பலகார வகைகள் உயர்ந்ததாகச் செய்துவையுங்கள்'' என்று பலமான உத்திரவுகளைப் போட்டாள்.

அவ்வாறு அந்த இல்லத்து ராணி படுத்தவாறே அதிகாரம் செய்து காரியத்தைச் செய்வதைக் கண்டு அவர் மனது பூரித்தது. மறுநாள் எப் போது வரும், எப்போது வரும் என்று எல்லோருமே எதிர்பார்த்திருந் தார்கள். அநுராதாவும் சிவகுமாரனும் நிருபமாவை இடைவிடாது கேலி செய்துகொண்டே இருந்தார்கள். ஆனால் நிருபமாவின் இதயத்தில் மட்டும் சந்தோஷத்துடன், தனது அன்னையாகவே பாவித்துவந்த காந்தாமணியின் நினைவு மறக்காது தோன்றி விசனத்தை உண்டாக்கியது. 'அந்த உத்தமி உயிருடனிருந்து என் மர்மத்தைக் கூறி, என் விவாகத்தை உடனிருந்து நடத்தி, அவளும் ஆனந்தப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்! எல்லாம் என் துர்ப்பாக்யந்தான்.''

என்று கலங்கியவாறே தன் பெட்டிக்குள் வைத்திருந்த காந்தாமணி யின் புகைப்படம், தன் தாய்தந்தையரின் படம் இவைகளை எடுத்து வெகு ப்ரீதியுடன் பார்த்துக்கொண்டிருக்கும்போது அநுராதா, சிவகுமார் இரு வரும் அங்கு வந்து "என்னம்மா! பெட்டிகளை இப்போதே ஒழித்து வைக்கிறாயா?'' என்று கேலி செய்தவாறு அருகில் வரும்போது நிருப மாவின் கையிலுள்ள படத்தை அனுராதா பார்த்து வியப்புடன் "ஓ! இந்த படம் உன்னிடம் எப்படி வந்தது! என் பெட்டியிலல்லவா வைத்திருந் தேன்!'' என்று வெகு ஆச்சரியத்துடன் கேட்டாள்.

இதைக்கேட்ட நிருபமா ஆச்சரியமும் அதிர்ச்சியும் கூடியவளாய் "என்ன! உன் பெட்டியிலிருக்கிறதா! என்ன மன்னி! எங்கம்மா, அப்பா வின்படம் உன் பெட்டிக்கு எப்படிவந்தது?''என்று வியப்புடன்கேட்டாள்.

அநு:—என்ன! என்ன! இவர்கள் உன் பெற்றோர்களா! இவர் களுடைய புதல்வியா நீ!... ஆஹா!... என்ன ஆச்சரியம்! என் தகப்பனா ரின் ஒன்றுவிட்ட தம்பியும் அவர் மனைவியுமல்லவா இவர்கள்! இதோபார் என் பெட்டியில் இருக்கிறது—என்று ஓட்டமாகஓடிச்சென்று தன் பெட்டி யிலுள்ள பல போட்டோக்களை எடுத்துவந்து காட்டி 'ஆமாம். இரண்டும் ஒன்றேதான். இதைப்பார். ஆதியில் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது அவ ரும் என் பிதாவும் எடுத்தபடமாம் இது... அடாடாடா! என்ன ஆச்சரியம்! நீ என் தங்கையாகவன்றோ ஆய்விட்டாய். உன் தகப்பனார் தூரதேசத்திற் குப் போய்விட்டதால் அடிக்கடி சந்திப்பும் உறவும் நின்றுபோய்விட்டது. ஏதோ மோட்டார் விபத்தில் இறந்ததாகவன்றோ கேள்வி. அவருக்குக் குழந்தைபிறந்த தகவலே இதுவரையில் எங்களுக்குத் தெரியாதே... விவரம் எனக்குச் சொல்லு'' என்று அனுராதா நிருபமாவைச் சேர்த்துக்கட்டிக் கொண்டாள்.

சிவகுமாரனுக்கு ஆச்சரியம் கரைகடந்தது. எல்லோரும் ஓட்டமாக ஓடி கீர்வாணியிடம்சென்று இந்த ஆச்சரியத்தைக் கூறினார்கள். கீர்வாணி யின் உள்ளம் பின்னும் சந்தோஷத்தால் பூரித்தது. ஆதியில் தாசிப்பெண் தான் நிருபமா வென்றும், தன் கணவனே ஒருகால்... என்றெல்லாம் அபவாதமாக நினைத்துப் பேசி பாவமூட்டையைக் கட்டிக்கொண் டோமே! அனுராதாவின் தங்கை முறையாகவே ஆகிவிட்டாளே... அந்த பாவத்தை எப்படித் தீர்ப்பது?'' என்ற கவலை படர்ந்தது.

புண்ணியமூர்த்தி இத்தகவலையறிந்ததும் அவர் உள்ளம் இன்னும் பதின்மடங்கு சந்தோஷத்தால் பூரித்ததோடு நாளை சம்மந்திகள் வந்த வுடனே இந்த மங்களகரமான சந்தோஷச்செய்தியைக் கூறி மகிழ்விக்க வேண்டும் என்ற ஆவல் அவர் உள்ளத்தில் அலை மோதியது.

# 31

இதய ஒலி

கீர்வாணிக்குத் தாங்களனுப்பிய கடிதத்திற்குப் பதி லும் வராது ஏதும் சொல்லியும் அனுப்பாதிருந்ததால் அவர்களுக்குக் கோபமும் ஆத்திரமும் அதிகரித்தன "என்னசெய்வது? நிருபமாவின் பணத்தைக்கறப்பது; அன்றி அவளை தாசிமகள்தான் என்று தீர்ப்புசெய்வது". என்று யோசனை பலமாகச் செய்து வந்தார்கள்.

கீர்வாணி தன் ஸ்த்ரீதனச் சொத்து பூராவையும் நிருபமாவுக்குக் கொடுத்துவிட்டதையும் அவளுக்கு மிகவும் உயர்வான இடமாகப் பார்த்து விவாகத்திற்கும் ஏற்பாடு செய்துவருவதையும் அறிந்த அவர்களுடைய பொருமையும் ஆத்திரமும் விபரீதமாக அதிகரித்தன.

காந்தாமணியின் சிறிய தாயார்மட்டும் இந்தப்பொருமைக் கூட்டத்தில் கலக்கவில்லை. உண்மை ஒரு சிறிது அவளுக்குத் தெரியுமாதலால் அந்த அனாதைப்பெண் எப்படியாவது பிழைத்துப்போகட்டும் என்றே எண்ணி ருள். ஆதலால் அந்த கோஷ்டியின் ப்ரஸ்தாபத்திற்கே போகவில்லையெனி னும் அவர்கள்எண்ணும் சதியைமட்டும்அறிந்து உண்மையில்விசனித்தாள்.

தனக்கு மிகவும் தெரிந்தவர்களையும் உறவினர்களையும் கொண்டு கிழவி அந்த சதிகாரக்கூட்டத்திற்கு எத்தனையோ நல்ல வார்த்தைகளைச் சொல்லிப்பார்த்தும் அவர்கள் கேட்கவில்லை. கிழவிக்கும் சலிப்பு தட்டி விட்டதெனினும் நிருபமாவினிடம் இந்த விஷயத்தைக் சொல்லி அதற் கோர்வழி செய்யும்படிக் கூற எண்ணினுள். கிழவி மிகவும் தள்ளாத வய துடன் நோயும் பிடித்ததால் இங்கு வரமுடியாது தவித்தாள். நிருபமாவின் கல்யாணவிஷயத்தைக் கேட்டு கிழவி சந்தோஷமே அடைந்தாள். எனினும் தன்மகள் காந்தாமணி இருந்து பார்க்கவில்லையே! என்று வருந்திக்கொண் டிருந்த சமயம் அந்த சதிகாரிகளில் ஒருத்தி அங்கு அவசர அவசரமாக வந்து, "ஏன் சித்தி! நீ பலே கைகாரியாக இருக்கிருயே! நாங்களெல்லாம் அந்த நிருபமாவுக்கு சதிசெய்வதாயும் நீதான் அவளுக்கு, காந்தாமணிக்குப் பதில் உபகாரமும் அனுகூலமும் செய்வதாகவும் பறைசாற்றி எங்களைக் கண்டித்துவிட்டு, நீ சரியானபடி லாபம் பெற்றுவிட்டதால் நீ நல்லவளாகி விட்டாயா! இதோஇந்த பத்திரிகையில் பாரு. என்ன வந்திருக்கிறது?" என்று ஆத்திரத்துடன் கூறியவாறு படிக்கவாரம்பித்தாள்.

"நாட்டிய கலாசுந்தரி என்று பட்டம்பெற்ற ஸ்ரீகுமாரி நிருபமாதேவி வயதில் சிறியவளாயினும், குணத்திலும், அறிவிலும், நாட்டியக்கலையின் சிறப்பிலும் மிகப் பெரியவளாக விளங்கி உயர்ந்த நோக்கத்துடன் மகத் தான தர்மத்தைச் செய்து சிலா சாசனமாக்கி இருக்கிருர்கள்.

அதாவது—நிருபமாவின் தாய்தந்தையர்கள் அவளுக்குக் கொடுத்துக் சென்ற பதினையிரம் ரூபாய்களையும் சில நகைகளைவிற்று அத்தொகை களையும் சேர்த்து தன்னை அன்புடன் வளர்த்த உத்தமியாகிய, ஸ்ரீமதி. காந்தாமணியின் பெயரில் ஒரு தர்ம பாடசாலை ஆரம்பிக்கப் போகிருர். காந்தாமணியின் சிறியதாயாராகிய ஸ்ரீமதி. சுந்தரம்மாளையே அந்த தர்ம ஸ்தாபனத்திற்கு தர்மகர்த்தராகவும் மேல்பார்வையாளராகவும் நியமித்து காந்தாமணியின் ஞாபகார்த்தமாக இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை யாகக் கொடுக்கப் போகிருர்கள்.

காந்தாமணி பாடசாலையின் திறப்பு விழாவை இம்மாதம் 30ந் தேதி கலெக்டர். ஸ்ரீமான் பாஸ்கரன் அவர்கள் திறந்துவைப்பார். அப் போது காந்தாமணியின் அரிய முயற்சியால் தான் வளர்ந்ததையும் நாட்

டியக்கலையின் மேன்மையையும், தனது பெற்றோர்களின் சரிதையையும் பற்றி குமாரி நிருபமாதேவியே பேசுவார்கள். அதோடு அவரது ஒப்புயர்வற்ற நடனக்கச்சேரியும் தேனீர்விருந்தும் நடக்கும். காந்தாமணியின் புகைப்படமும் நிருபமாதேவியின் பெற்றோர்களின் புகைப்படங்களும் முறையே திறந்து வைப்பார்கள். குமாரி நிருபமா நீடூழி வாழ்க''


என்றதைப் படித்ததும், அந்த சதிகாரியின் ஆத்திரமும் கரை புரண்டது. கிழவியின் ஆனந்தமும் கரைபுரண்டது. கிழவி "அம்மா! பகவான் ஒருவன் இல்லையா! அவன் அதனதன் யோக்யதையை அறிந்து நடப்பானேயன்றி விட்டுவிட மாட்டான். நிருபமா சத்யமாக காந்தாமணியின் கணவனுடைய மனைவிக்குப் பிறந்தவள் என்பதை அறிந்தும் நீங்கள் சதி நினைத்தால் அது அடுக்குமா! புண்யமூர்த்தி என்ன சாமானியப்பட்டவரா! நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு நடுநிலைதவறாது நடக்கும் உத்தமரல்லவா! பரோபகாரத்திற்காக அவர் அந்த பரதேசிக் குழந்தையை அழைத்துச் சென்றவர் அந்த குழந்தையின் பிறப்பின் மர்மத்தை ஆராய்ந்து வெளியிடாமலா போவார்? நீங்கள் வீண் கலாட்டா செய்தது போதும். இனிமேல் உங்கள் 'பாச்சா' பலிக்காது. அனுவசியமாகக் கல்கத்தில் ப்ரவேசித்தால் ஆபத்தில்தான் முடியும். சத்தியமாக இந்த பேப்பர் சமாசாரம் எனக்கு ஒன்றுமே தெரியாது. நீ படித்துச் சொல்லியபிறகுதான் எனக்கே வியப்பாக இருக்கிறது. காந்தாமணியின் ஞாபகார்த்தமாகக் கட்டாயம் ஏதாவது செய்வாள் என்று மட்டும் நான் எதிர்பார்த்தேன். எனக்கு எழுதியிருப்பது நம்பவே முடியவில்லை'' என்று வெகு அழுத்தமாயும் வியப்புடனும் கூறினாள்.

ஆனால் வந்த ராக்ஷஸி அதையா நம்புகிறவள்! கிழவி முற்றிலும் பொய் சொல்வதாகவே அவளைத் திட்டி மிரட்டிவிட்டுப் போய்விட்டாள். கிழவிக்கு ஆச்சரியம் கூறத்திறமில்லை. இதே யோசனையில் படுத்திருக்கையில் இவளே ப்ரமிக்கும்படி புண்யமூர்த்தியும் நிருபமாவும் தட்டு நிறைய பழ வகைகளுடன் வந்து, பத்திரிகை விஷயத்தை நேரில் கூறி சுளைசுளையாய் ரூ. 2000 கிழவிக்குக் கொடுத்து "உன் மகள் அளித்ததாக வைத்துக்கொள்'' என்று கூறிப் பின் சென்றதானது பின்னும் வியப்பையும் சதிகாரர்களிடத்தில் பயத்தையும் கொடுத்து வதைத்தது.

## 32

சம்மந்திகள் வரும் தேதி ப்ரயாணத்தின் அசௌகரியத்தினால் சில நாள் ஒத்திப்போய்விட்டதால் நிருபமா சிறிது சந்தோஷமே அடைந்தாள். ஏனெனில் தனது விவாகத்திற்குப் பிறகு தான் நினைக்கும்படி தர்மங்களைச் செய்வதற்குத் தன் கணவர் இசைவாரோ, மாட்டாரோ மாமனர் மாமியார்தான் என்ன சொல்வார்களோ! ஆகையால் மனதில் தோன்றுவதை முதலிலேயே செய்துவிடத் தீர்மானித்து அதைத் தன் பெற்றோரிடம் தெரிவித்தாள். அவர்களும் அதை ஆமோதித்ததால் அவள் இஷ்டப்படியே உடனே செய்துமுடிப்பதுதான் உசிதம் என்று அதற்கான சகல ஏற்பாடுகளையும் உடனே செய்து பத்திரிகையிலும் ப்ரசுரித்துவிட்டார்.

நிருபமாவும் அநுராதாவும் சேர்ந்து ராதா—க்ருஷ்ண நடனத்தை வெகு அத்புதமாக ஆடுவதைக்கண்டு ப்ரமித்த கீர்வாணி அதையே திறப்பு விழாவிலும் ஆடும்படி உத்திரவிட்டாள். நிருபமாவின் தந்தைக்கு நெருங்கிய உறவினர்கள் புண்ணியமூர்த்தியால் அழைக்கப்பட்டு வந்திருந்தார்கள். நிருபமாவின் நாட்டியத்தைக் கண்டுகளிக்க ஆசைப்பட்டதால் புண்ணியமூர்த்தி இரு சிறுமிகளையும் ஆடச்செய்தார்.



கீர்வாணி சற்று தெளிவுபெற்று சோபாவில் அமர்ந்தாள்; புண்ய மூர்த்தி, சிவகுமாரன், வந்திருப்பவர்கள் ஆகியவர்கள் முன்பு ராதா க்ருஷ்ண நாட்டியம் ஆரம்பமாயிற்று. எல்லோரும் உண்மையிலேயே ராதையும் கிருஷ்ணனும்தான் ஆடுவதாக எண்ணினார்களேயன்றி இரு சிறுமிகளாக நினைக்கவே இல்லை.

ஆனந்த சாகரத்தில்மூழ்கி மெய்ம்மறந்து நாட்டியம் பார்க்கும்போது கீர்வாணியின்மனது சற்று ஆனந்தமடைந்தது எனினும் தன் மூத்தமகனையும் மருமகளையும் எண்ணி சடக்கென்று சற்று துக்கம் வந்துவிட்டது. அவர்களின்கதி என்னவாயிற்றோ! என்று கலங்கி சோபாவில் சாய்ந்தாள்.

அச்சமயம் வேலைக்காரன் ஓடிவந்து "எஜமான்! யாரோ ஒரு நோயாளியைப்போலிருக்கும் மனிதன் மிகவும் கேவலமான நிலைமையில் வந்திருக்கிறான். உங்களைப் பார்க்கவேண்டுமென்று புலம்புகிறான். அவனைப் பார்த்தால் இப்போதே ப்ராணன் போய்விடும்போலவிருக்கிறது" என்று படபடத்துக் கூறினான்.



ராதை:--
சோதனையோ கிருஷ்ணு !
அடைக்கலம்புகுந்தேன்
அருள்மழைபொழிவாய்
துடிக்கு மென்னுள்ளத்
தின்
துன்பம் களைவாய்.

கிருஷ்ணன்:--
மடமயிலே என்
மாதவமணியே
கடலமுதே ! என்தன்
காதலின்கனியே !

புண்ணியமூர்த்தி "நாட்டியம் நடக்கட்டும். இதோ வருகிறேன்." என்று கூறிவிட்டு வெளியே சென்ருர். தாடியும் மீசையும், ஜடை படர்ந்த தலையும், அழுக்கு உடையும், கால்களிலும் கைகளிலும் வீக்கமும், தேகம் முழுதுமே எலும்புக்கூடுபோன்ற கோராமையுமாகப் பார்ப்பதற்கு பயங்கரமான ஒரு ஆத்மா வீதியில் நிற்கமாட்டாது படுத்துக்கிடப்பதைப் பார்த்த புண்ணியமூர்த்தி அவருடைய இயற்கையான அன்பும் கனிவும் கலந்த தொனியில் "நீ யாரப்பா ! என்னை எதற்காகப் பார்க்கவேண்டுமென்று கேட்டாயாம். உனக்கென்ன வேண்டும்? ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டு மருந்து கொடுக்கட்டுமா ?" என்று பரிவுடன் கேட்டார்.

புண்ணியமூர்த்தியைக் கண்ட நோயாளி, அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் தாரை தாரையாக வழிய அவரைப் பரிதாபகரமாக நோக்கியவாறு..."டாக்டர் ! எனக்கு ஆஸ்பத்திரியும் மருந்தும் இனி தேவையில்லை. அவைகளுக்கெல்லாம் மனப்பிணி ஆருது...என்னுருயிர் கண்மணி, என் செல்வரத்தினம் என் வாழ்க்கையின் ஜீவாதாரம், என் ஆத்மாவிற்குச் சாந்தியளிக்கும் சொர்ண பிம்பம் என்னை விட்டுப்

இதய ஒலி

போய்விட்டதாகவே இதுவரையில் நினைத்திருந்தேன். நேற்று இரவுதான் அந்த அரிய பொக்கிஷம் உங்களிடம் இருப்பதாக யாரோ கூறக்கேட்டு ஓடோடியும் வந்தேன். அந்த அரு மருந்தை என் அநுராதாவை என் கண்ணில் ஒருதரம் காட்டினால் போதும்; என் ஆத்மா சாந்தியடைந்துவிடும்... என்னைத் தெரியவில்லையா... நான்தான் கோபால்... உங்கள் சகோதரியின் கணவன்". என்று கூறுவதைக் கேட்டதும் புண்ணியமூர்த்திக்கு உண்டான ஆச்சரியத்திற்கும் திகைப்பிற்கும் எல்லையே இல்லை. "என்ன! கோபாலனா! சாவித்திரியின் கணவனா! அநுராதாவின் தந்தையா! உண்மையாகவா!" என்று ஒரு விநாடி ப்ரமித்தார்.

அந்த மனிதனைப் பார்த்து எத்தனையோ வருடங்களாகிவிட்டதால் அவருக்கு எந்த விதத்திலும் அடையாளமே தெரியவில்லை. 'எவனாவது இந்த ரகஸியத்தின் உளவை அறிந்துகொண்டு அநுராதாவை அடித்துக் கொண்டு போகலாம் என்றுகூட வந்துவிட்டானோ!' என்ற சந்தேகமும் உதித்தது. உண்மையில் அம்மனிதனுடைய பரிதாபகரமான பிம்பத்தையும் கண்ணீர் வெள்ளத்தையும் கண்டு புண்ணியமூர்த்தியின் மனது குழைந்தது. இவன் யாராகவிருப்பினும் முதலில் உடல் நிலையை கவனித்துப்பின் மற்றதைப் பேசிக்கொள்வோம் என்று உடனே அவனுக்கு ஆகாரத்தைக் கொடுத்தார்.

அம் மனிதனோ "எனக்கு ஏதுமே வேண்டாம். என் அநுராதா இருக்கிறாளா! இறந்துவிட்டாளா! அந்த ஆனந்தஸ்வரூபத்தை என் கண்முன்பு சற்று காட்டுங்கள். எங்கே என் கண்மணீ?... டாக்டர்! நீங்கள் விழிப்பதைப் பார்த்தால் நான் யாரோ சோதா, திருடன், அயோக்யன், உளவறிந்து அநுராதாவை என் பெண் என்று கூறி மாயம்செய்து அவளையும் அவளிடமுள்ள சொத்தையும் அடித்துக்கொண்டுபோக வந்திருக்கிற காலாடிப்பயல் என்று சந்தேதப்படுவதாகத் தெரிகிறது...

டாக்டர்! டாக்டர்! அத்தகைய சந்தேகமே வேண்டாம். என் செல்வத்திற்காக நான் ஏராளமான செல்வத்தைப் புரட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். எங்கே என் அநுராதாவைக் கூப்பிடுங்கள்" என்று படபடத்துக் கூறிய அதிர்ச்சியில் அப்படியே ஆபாஸத்தினால் மவுனமானான்.

புண்ணியமூர்த்திக்கு மனது உருகியது. "ஐயா! நீ கவலைப்படாதே. உன்னருமை அநுராதா சவுக்கியமாயிருக்கிறாள். இதோ அழைத்து வருகிறேன்... உன்னை முதலில் அந்தக் குழந்தை அடையாளம் தெரிந்து கொள்ளும்படிக்குச் செய்துவிடுகிறேன். நீ கவலைப்படாமல் என்னோடு வா!" என்று கூறி அவனைத்தேற்றி வேலைக்காரர்களின் உதவியால் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று க்ஷவரம் செய்வித்து சுத்தமாக்க எண்ணினார்.

"என்னுடைய இந்த பலவீனமான நிலைமையில் நான் அந்த அதிர்ச்சிக்குத் தாங்கமாட்டேன். என்னை நீங்கள் நம்பாததுதான் இப்படிச் செய்கிறீர்கள் என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. என் கண்மணியைக் கண்ணில் காட்டாமலேயே என்னைக் கொன்றுவிடப்போகிறீர்கள். இல்லாவிட்டால் இம்மாதிரி மரணத்தை எதிர்பார்த்துத் துடிக்கும் ஒரு மனிதனை விஷப் பரிக்ஷை செய்யமாட்டீர்கள். டாக்டர்! உங்கள் காலடியிலேயே என் ப்ராணன் போனபிறகு என் குழந்தை என் சவத்தின் மீது விழுந்து அழுவதைக் கண்டு களிக்க ஆசைப்படுகிறீர்களா! பெத்தவயிறு பதறும் துடிப்பு நீங்களறியவில்லையா! கண்மணி! அநுராதா!" என்று பெரிதாகக் கதறினான்.

183092

# க்ஷேம லாபங்கள்

அன்பர்களே !

## நந்தவனம்

எம்பெருமானின் கிருபாகடாக்ஷத்தினால் நந்தவனம் இனிது முடிவடைந்து இம்மாதம் 12 தேதியன்று வெளியாகிறது. அன்று முதல் 20 தேதிக்குள் எல்லோருக்கும் அனுப்பியாகிவிடும். அன்பர்கள் 20 தேதிக்குள் "இன்னும் கிடைக்கவில்லையே" என்று கடிதம் எழுதிவிடக்கூடாது. ரிஜிஸ்ட்ரேஷனுக்காக மூன்றணா செலுத்தாதவர்களுக்கெல்லாம் ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங் வாங்கி அனுப்பப்படும். ஏற்கெனவே ஆர்டர் அனுப்பாதவர்கள் 56-வது பக்கத்திலுள்ள ரிஸர்வேஷன் கூபனை உபயோகித்துத் தங்கள் பிரதியைப் பதிவு செய்துகொள்ளவும்.

நான் ஆதியில் எழுத்து உலகில் ப்ரவேசித்து முதல் கதை எழுதியபோது சகோதரி சுபலக்ஷ்மியம்மாள் அவர்கள் மிக்க ஊக்கமளித்து உத்ஸாகமூட்டி அன்புடன் மதிப்புரை அளித்து என்னை மகிழ்வித்தார். அதே சகோதரியார் இந்த நந்தவனத்திற்கும் முன்னுரை எழுத அன்புடன் இசைந்திருக்கிறார். அன்னாருக்கு எனது வந்தனங்களைச் செலுத்துகிறேன்.

## திருப்திகரமான வெற்றி

நாம் புதிதாக ஆரம்பித்துள்ள கட்டுரைப்போட்டி அம்சம் மிகமிக த்ருப்திகரமான வெற்றியை அளித்திருக்கிறது. ஏராளமான பெண்மணிகள் கட்டுரை எழுதியனுப்பியிருக்கிறார்கள். அவைகளை பரிசீலனை செய்து பரிசுபெற்ற கட்டுரைகளை ப்ரசுரித்திருக்கிறோம்.

## அடுத்த கட்டுரைப்போட்டி

அடுத்த இதழில் யுக்தி என்பதைப்பற்றி எழுதவும். முன் தெரிவித்தபடியே சிறந்ததெனக் கருதப்படும் 4 கட்டுரைகளுக்கு 5/- வீதம் பரிசளிக்கப்படும். இவ்விதழில் பரிசுபெறாதவர்கள் சலிப்படையாமல் ஊக்கத்துடன் எழுதும்படிக் கேட்டுக் கொள்கிறேன். த்ருப்தி என்கிற விஷயத்தை எழுதிய எல்லா சகோதரிகளுக்கும் எனது சந்தோஷத்தையும் வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இதய ஒலி

சென்ற இதழில் அதிகப்பக்கங்கள் வெளியிட்டிருந்தது வாசகர்களுக்குப் பெரும் திருப்தியை அளித்ததெனினும், பலர் இதய ஒலி அதிகப் பக்கங்கள் வெளியிட்டிருந்தால் இன்னும் சந்தோஷமாயிருந்திருக்குமென்று தெரிவித்துள்ளார்கள். எல்லோருக்கும் திருப்தியளித்து இன்புறுவதே நமது நோக்கம். நேயர்கள் கோரிக்கைப்படி 'இதய ஒலி' இவ்விதழில் 32 பக்கங்கள் (4 படங்களுடன்) வெளியாகியிருக்கின்றன. ஒவ்வொரு இதழிலும் இப்படியே இரண்டு மடங்கு வெளிவருமென்று எதிர்பார்க்கக்கூடாது. சித்திரை இதழைப்போலவே வைகாசி இதழும் 88 பக்கங்கள் வெளியிட முடிந்ததைப்பற்றி ரொம்பவும் சந்தோஷப்படுகிறோம்.

—ஆசிரியை.

---


# புதிய பதிப்பு.

62. ப்ரார்த்தனை— (Calcutta glazed)— ரூ. 1/-
46. வத்ஸகுமார்— (Mysore white)— 1/-
11. வீரவஸந்தா— (Punalur unbleached)— 1/-

உங்களுக்குத் தேவையான புத்தகங்களுக்கு முன் பணம் அனுப்பவும். தபால் செலவு இனம். ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் வேண்டுமாயின் 3 அணா சேர்த்து அனுப்பவும். ரூ. 3/- அனுப்புவோருக்கு ஷை 3 ப்ரசுரங்களும் ரிஜிஸ்டர் போஸ்ட்மூலம் அனுப்பப்படும். V. P. கிடையாது. —மா[illegible]

# ஜகன்மோகினி

Jaganmohini - Regd.

வைகாசி 30உ (12-6-1944) வெளிவரும்

# நந்தவனம் வஸந்தருது மலர்



ரூ. 1—8—0

ரிஜிஸ்டர் போஸ்ட் மூலம் 1—11—0

## விஷய அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீமதி | எஸ். அம்புஜம்மாள் | மணி விளக்கு |
| 2. | ,, | குகப்ரியை | பனியில் மடிந்த தாமரை |
| 3. | ,, | எம். எஸ். கமலா | விராங்கனை |
| 4. | ,, | ச. ஆர். பத்மாவதி | சங்கீதம். (2 கீர்த்தனைகள்) |
| 5. | ,, | தங்கம்மாள் பாரதி | பொங்கல் நாடகம் |
| 6. | ,, | ஸாவித்திரி ராஜன்., பி. ஏ. | எழுத்தாள தம்பதிகள் |
| 7. | ,, | ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன் | கிதாவின் வாழ்வு |
| 8. | ,, | செல்லம்மாள் வேலுப்பிள்ளை | ஓடக்காரி |
| 9. | ,, | கமலா பத்மநாபன் | அத்தை |
| 10. | ,, | பத்மா சேஷாத்ரி | தங்கச்சங்கிலி |
| 11. | ,, | ஸௌந்தரலக்ஷ்மி | கடமை |
| 12. | ,, | கி. ஜெயலக்ஷ்மி | கற்பலங்காரி |
| 13. | ,, | ஆர். ஸ்ரீமதி | இரு சகோதரிகள் |
| 14. | ,, | ஜானம்மாள் | உடுப்பி யாத்திரை |
| 15. | ,, | "சசிதேவி" | பாரிஜாதம் |
| 16. | ,, | ஜானகி. (கிளஜா) | ஏமாற்றம் |
| 17. | ,, | ஏ. ராஜம்மாள் | வை. மு. சடகோபராமானுஜாசாரியர் |
| 18. | ,, | நீ. ல. பட்டம்மாள் | அப்பனே ஏழுமலையானே! |
| 19. | ,, | டி. வி. ஜெயலக்ஷ்மி திருவேங்கடாச்சாரி | சண்பகத்தின் மறுமலர்ச்சி |
| 20. | ,, | வை. மு. கோதைநாயகி | கல்யாணத் தமாஷ் |


உயர்ந்த பேப்பர் ; அமெரிக்கன் ஒயிட் போர்ட் ராப்பர்.

நாரீமணிகளின் நவரஸ விருந்து

**ரிஸர்வேஷன் கூப்பன் உள்ளே இருக்கிறது.**

**உடனே முந்துங்கள்.**


PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
"JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL,